REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 11 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

வரு. 88 இல. 216 | September 11, Friday, 2020 | 28பக்கங்கள் | 30/-




## நாடு முழுவதுமுள்ள 5,000 குளங்களை உடன் புனரமைக்க ஜனாதிபதி பணிப்பு

### கைவிடப்பட்ட 1,20,000 ஏக்கர் வயல் நிலங்களில் செய்கை



புராதன தொழில்நுட்பம் மற்றும் நவீன விஞ்ஞான பொறிமுறைகளின் ஊடாக நாடு முழுவதுமுள்ள 5,000 குளங்களை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அத்துடன் நாடளாவிய ரீதியில் கைவிடப்பட்டுள்ள வயல்கள் 1,20,000 ஏக்கர்கள் நிலப்பரப்பில் "தேசிய உணவு உற்பத்தி பங்களிப்பு திட்டம்" நடைமுறைப்படுத்தப்படும். குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக சிவில் பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படும்.

கிராமிய வயல்கள் சார்ந்த குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி

04

## அரசுடன் இணைந்து பணியாற்ற புலம்பெயர் சமூகத்திற்கு அழைப்பு

### எவ்விதமான அச்சமும் கொள்ள வேண்டாம் என்கிறார் பிரதமர்



புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர் மற்றும் மக்கள் அமைப்புக்கள் எந்தவித அச்சமுமின்றி எம்முடன் இணைந்து பணியாற்ற வாருங்களென புலம்பெயர்ந்துள்ளவர்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

புலம்பெயர்ந்துள்ள சில முதலீட்டாளர்களை சந்தித்த போதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையின் முதலீடுகளை ஊக்குவித்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதமர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பல முதலீடுகளை மேற்கொள்ள வருகை தந்த புலம் பெயர்ந்து வாழும் இலங்கையராகிய நீங்கள் அனுபவித்த

04

### வர்த்தமானியில் வெளியானது 20 ஆவது முழுமையான வடிவமல்ல;

# பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் கருத்தறியப்பட்டே நிறைவேறும்

### உயர் நீதிமன்றின் வியாக்கியானமும் உள்வாங்கப்படும் என்கிறார் கம்மன்பில

**ஷம்ஸ் பாஹிம்**

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 20 ஆவது திருத்த சட்ட நகல் முழுமையானதல்ல. பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் மற்றும் உச்சநீதிமன்ற வியாக்கியானம் என்பவற்றை உள்வாங்கியே இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படுமென இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதற்கு ஏற்றவகையில் அதில் மாற்றங்கள் செய்யத் தயாரெனவும் கூறிய அவர், 19 ஆவது திருத்தத்திற்கு நடு இரவு வரை திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

20 ஆவது திருத்தம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

பொது மக்களினதும் கட்சிகளினதும் கருத்துக்களை பெற இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதன் பின்னர்

04

## MCC உடன்படிக்கை கிழித்தெறியப்படுமா?

### சபையில் சஜித் கேள்வி

**லோரன்ஸ் செல்வநாயம், சுப்பிரமணியம் நிஷாந்தன**



தேர்தல் காலத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளின் பிரகாரம் உத்தேச எம்.சி.சி. உடன்படிக்கை கிழித்தெறியப்படுமா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வியெழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை 27/2 கீழ் எழுப்பிய கேள்வியின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

04

### கொரோனாவால் ஏற்படும் மரணம்;

## தகனம் செய்வதற்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் நபர்களை தகனம் செய்ய வேண்டுமென வெளியான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இந்த விசாரணைகளை எதி ர்வரும் நவம்பர் மாதம் 26ஆம் திகதி வரை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும்

04

## இறைச்சிக்காக மாடுகளை கொல்வதை தடைசெய்யும் தீர்மானம் ஒத்திவைப்பு

### சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்திய பின்னரே இறுதி முடிவு



இறைச்சிக்காக மாடுகளை கொல்வதை தடை செய்வது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுப்பதை அரசாங்கம் ஒருமாத காலத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

அமைச்சரவை பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெலல இதனை தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் தொடர்புபட்ட குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

04

## கிளிநொச்சியில் இரு சடலங்கள் மீட்பு

### காதலர்கள் என சந்தேகம்

**பரந்தன், கிளிநொச்சி குறூப் நிருபர்கள்**

கிளிநொச்சியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண், பெண் இருவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பரந்தன், ஓசியர் சந்திப் பகுதியில் வைத்து நேற்று காலை சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கடந்த 4ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில் தேடப்பட்டு வந்த 28 வயதான சுசிதரன் மற்றும் 27 வயதான தனுஷியா ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த ஆண் யாழ்ப்பாணம் மின்சார சபையில் பணியாற்றி வந்தவரென்றும் பெண் கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றியவரென்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

04

## ரிப்கானுக்கு எதிரான விசாரணைகளை முறையாக முன்னெடுக்க வேண்டும்

### CID யினருக்கு நீதிமன்றம் உத்தரவு

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் சகோதரரான மொஹமட் ரிப்கான் உட்பட இருவருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் விசாரணைகளை முறையான விதத்தில் மேற்கொண்டு மேலும் சந்தேக நபர்கள் இருப்பின் அவர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

04




ருபெல்லா அற்ற நாடாக ஏற்று இலங்கையின் சுகாதாரத்துறைக்கு உலக சுகாதார அமைப்பு இரண்டு விசேட விருதுகளை வழங்கியுள்ளது. இந்த விருதுகள் நேற்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கொழும்பிலுள்ள உலக சுகாதார அமைப்பின் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டபோது..

## கஞ்சிபானை இம்ரான் உள்ளிட்ட 40 கைதிகள் உண்ணாவிரதம்

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர் உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். நேற்றுக் காலை முதல் அவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. கடுமையான குற்றச்செயல்கள் தொடர்பில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 45 கைதிகளில் 40 பேர் இவ்வாறு உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளில் கஞ்சிபானி இம்ரான், பொடி லெசி மற்றும் வெலே சுதா ஆகியவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

04

## ஆறு புதிய தூதுவர்களை நியமிக்க பாராளுமன்ற அனுமதி கோரல்

### இந்தியாவுக்கு மிலிந்த, அமெரிக்காவுக்கு ரவிநாத் ஆரியசிங்க



ஆறு நாடுகளுக்கான இராஜதந்திரிகளை நியமிப்பது தொடர்பில் உயர் பதவிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இப்பதவிக்காக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் தகுதிகள் பரிசோதனை செய்யப்படடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி ஆப்கானிஸ்தானிற்கான இலங்கை தூதுவராக ஓய்வு பெற்ற

04

## கல்முனை கடற்பரப்புக்குள் எண்ணெய் படிமங்கள் இல்லை

### 'நாரா' ஆய்வறிக்கையில் தெரிவிப்பு



கல்முனைக் கடற் பிரதேசத்தில் எந்தவிதமான மாற்றங்களும் ஏற்படவில்லையென்று (நாரா) நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சங்குமன்கண்டி கடற்பரப்பில் எண்ணெய் தாங்கிக் கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தையடுத்து கல்முனை கடற்பரப்பில் எண்ணெய்ப் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களினால் அவதானிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதனால் பிரதேச கடற்றொழிலாளர்கள்

04



**தலைவர் என்ன படு குஷியாக இருக்கிறார்...? சுவீப் டிக்கெட்டில பெரிய பரிசு ஏதாவது விழுந்துட்டுதோ..?**

**அது ஒன்றுமில்லை, அவரது நூறாவது அறிக்கைக்கு பேஸ்புக்ல நூறு லைக் வந்துட்டுதாம்..!!**

## இந்தியாவை மீறி 13ஆவது திருத்தத்தை ஒழிக்க முடியாது

### எவரும் பகற்கனவு காண வேண்டாம்

**லோரன்ஸ் செல்வநாயம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இந்தியாவை மீறி 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒழிக்க முடியாது. 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒழித்துவிடலாமென எவரும் பகற்கனவு காணக்கூடாதென தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி.யான வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

20 ஆவது அரசியலமைப்புத்திருத்தம் என்பது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயல். பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் கருத்துக்களை செவிமடுக்காது இது திணிக்கப்படுகின்றது.

04

## அரச நிறுவனங்களின் மக்கள் சந்திப்பு திங்கட்கிழமைக்கு மாற்றம்

### அமைச்சரவை தீர்மானம் பிரகடனம்

அரச நிறுவனங்களில் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்காக புதன்கிழமை 'பொதுமக்கள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் திங்கட்கிழமை 'பொதுமக்கள் தினமாக' பிரகடனப்படுத்தினால் மக்களுக்கு மிகவும் இலகுவாக அமையுமென யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அதற்கமைய இனிமேல் திங்கட்கிழமை 'பொது மக்கள் தினமாக' பிரகடனப்படுத்தவும், அனைத்து அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பொது மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் இத் தினத்தில் அலுவலகத்தில் கட்டாயமாக இருத்தல் அவசியமெனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

## 20 ஆவது திருத்த உள்ளடக்கம் விரிவான கலந்துரையாடல்

### அவசியம் என்கிறார் முன்னாள் சபாநாயகர் கரு



அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் உள்ளடக்கங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் அவசியமென முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள அவர், அரசியலமைப்பின் 20 ஆவது

04

# வடக்கில் முதலீடுகளுக்கு உரிய கள ஆய்வின் பின்னர் அனுமதி

## அதிகாரிகளிடத்தில் ஆளுநர் வலியுறுத்து

**வேலணை குறுப் நிருபர்**

உரிய கள ஆய்வுகளின் பின்னர் வடமாகாண முதலீடுகளுக்கான அனுமதிகளை அளிக்குமாறு அதிகாரிகளிடத்தில் வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

வட மாகாணத்தில் முதலீடுகள் செய்வதற்கான திட்டங்களை மெகா இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவன அதிகாரிகள் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும், பிரதம செயலாளருக்கும் மற்றும் சம்மந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கும் செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் காட்சிப்படுத்தியிருந்தனர்.



இதன்போது முதலீட்டாளர்கள் ஆடை உற்பத்தி மற்றும் நட்சத்திர விடுதி அமைப்புக்கான அனுமதிகளை அளிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் கருத்து வெளியிட்ட வடமாகாண ஆளுநர் சார்ள்ஸ்,

முதலீட்டாளர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆடை உற்பத்தி நிறுவனம் மற்றும் நட்சத்திர விடுதி அமைப்பதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதோடு சீமெந்து தொழிற்சாலை போன்ற ஏனைய திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளைச் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்குமாறும் குறிப்பிட்டார்.

அத்துடன் முதலீட்டுத்திட்டங்களுக்கான அனைத்து உதவிகளையும் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கள ஆய்விற்குப் பின்னர் வழங்குங்கள் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

# காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; மூவர் காயம்



**பா.சதீஸ்**

வவுனியா சாம்பல்தோட்டம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் காருடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ் விபத்து சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து செக்கடிப் புலவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் எதிர்த் திசையில் வவுனியா நோக்கி வந்த காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கார் பாரிய சேதமடைந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் துண்டங்களாக உடைந்துள்ளது.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிசார் மற்றும் நெளுக்குளம் பொலிசாரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

# கோப்பாயில் திலீபனின் நினைவேந்தல்

**யாழ்.விசேட நிருபர்**

கோப்பாய் பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு அமைக்கப்பட்டு பின்னர் இடித்து அழிக்கப்பட்ட தியாக தீபம் திலீபன் அந்த இடத்தில் நினைவேந்தல் நடத்தப்படவுள்ளது.

சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பாத்திபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விளையாட்டு துறை பொறுப்பாளர் வீரா ஆகியோர் அங்கு சென்று ஊர் மக்களுடன் கலந்துரையாடினார்.

அங்கு இந்த முறை நினைவு தின நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்படுகளை செய்து தருமாறும் மக்கள் கேட்டுக்கொண்டனர். அதன் அடிப்படையில் ஊர் மக்களுடன் இணைந்து தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை அங்கு நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் பிரிவு அறிவித்துள்ளது.



# 2020 வாக்காளர் இடாப்பு பதிவில் கூடுதல் கரிசனை எடுக்க வேண்டும்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவுகள் ஆரம்பமாகியிருப்பதனால் பொதுமக்களும் கிராம சேவகர்களும், இவ் விடயத்தில் கூடுதலான கரிசனை எடுத்து இந்த பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இணைப் பேச்சாளர் சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

2020 ஆம் ஆண்டுக்கான வாக்களர், இடாப்புக்கள் பதியும் வேலைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் யுத்தம், இடப்பெயர்வு, புலப்பெயர்வு போன்ற காரணிகளாலும் முப்படைகளின் ஆக்கிரமிப்புக்கள் காரணமாகவும் மீள் குடியேற்றம் இன்னும் முழுமையடையவில்லை.



மேற்கண்ட காரணங்களால் வடக்கு மாகாண சனத்தொகை என்பது பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. ஏறத்தாழ பதினைந்து இலட்சம் மக்கள் வெளிநாடுகளில் வாழ்வதாகச் சொல்லப்படுகின்றது. நடந்து முடிந்த யுத்தத்தில் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. இதன் காரணமாக எமது சனத்தொகை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த குடிசன தொகையின் வீழ்ச்சி காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கிடைக்க வேண்டிய பத்து பாராளுமன்ற ஆசனங்கள் ஏழாக சுருங்கியிருக்கின்றது. தமிழ் பிரதேசங்களில் இருந்து பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுடைய தொகையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றார்.

# விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வு



**ச. இராசரத்தினம்**

விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் இருப்பதாக நீதிமன்ற உத்தரவுக்கமைய தோண்டப்பட்ட போதும் ஒன்றும் கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

முல்லைத்தீவு சாலை பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைத்து உள்ளதாக நம்பப்படும் வெடி பொருட்கள் இருப்பதாக சிறப்பு அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த பகுதியில் தோண்டும் நடவடிக்கையில் சிறப்பு அதிரடிப்படையினர் ஈடுபட்டனர்.

எனினும் இப் பகுதியில் தோண்டப்பட்ட போது எவ்வித தடயங்களும் இல்லாத நிலையில் தோண்டும் நடவடிக்கையை கைவிட்டு கொண்டுள்ளார்கள்.

# மணல் அகழ்வை கட்டுப்படுத்த இராணுவம், அதிரடிப் படை

**கிளிநொச்சி குறுப் நிருபர்**

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த பொலிசாருக்கு மேலதிகமாக இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினர், ஈடுபடுத்தப்படவுள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று இரணைமடு விவசாய சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழு கூட்டத்தின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இனங்காணப்பட வேண்டும். அத்தோடு சமூக மட்ட அமைப்புகள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும் என்றார்.




விவசாயக் குழு கூட்டத்தில் இரணைமடு குளத்தின் கீழான 2020 காலபோகம் நெற்செய்கை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. நீர் விநியோம், கால்நடை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன. இவ் விவசாய குழு கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் அதிகாரிகள், மாவட்ட விவசாய உற்பத்தி ஆராய்ச்சித் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# கேப்பாபிலவில் தனிமைப்படுத்தப்பட்ட 25 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைப்பு

**ச.இராசரத்தினம்**

கேப்பாபிலவு விமானப்படைத் தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து 25 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

வெளிநாடுகளிலிருந்து நாட்டுக்கு வருகைதந்த பலர் கேப்பாபிலவு விமானப் படைத்தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் கடந்த மாதம் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளார்கள். பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னர் கட்டங்கட்டமாக விடுவிக்கப்பட்டு வந்துள்ளார்கள்.

அந்த வகையில் நேற்று அதிகாலை 25 பேர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு கேப்பாபிலவு விமானப்படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பலருக்கு கவனத்தோடு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இன்னும் 41பேர் தொடர்ந்தும் கேப்பாபிலவில் விமானப் படைத்தளத் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றார்கள்.

# மக்களின் கருத்து கேட்காமல் அமைக்கப்படும் வடிகாலமைப்பு செயற்றிட்டத்துக்கு எதிர்ப்பு

**த.சுபேசன்**

தென்மராட்சிசரசாலைப் பகுதியில் பிரதேச மக்களின் கருத்துக்களைப் பெறாமல் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் வடிகாலமைப்பு செயற்திட்டம் ஒன்றிற்கு மக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கஜன் ஊடாக பிரதேச சபைத் தவிசாளரிடம் கடிதம் ஒன்றினையும் சமர்ப்பித்துள்ளனர்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனர்த்த இடர் முகாமைத்துவ அமைச்சினால் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படும் குறித்த செயற்திட்டம் சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சரசாலை தெய்வங்கேணி வீதிப் பகுதியில் உள்ள நாகர்கோயில் வயல் மற்றும் அதனை அண்டிய வாழ்விடப் பகுதிகளிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சிலரின் வழிநடத்தலில் பொலிசார் மற்றும் இராணுவத்தினரது அனுசரணை பெறப்பட்டு பிரதேச மக்களது கருத்துக்களைப் பெறாமல் மேற்கொள்ளப்படும் மேற்படி செயற்திட்டத்தினால் எமது வாழ்விடங்களிற்கும், விவசாயச் செய்கைக்கும் பெரிதும் பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சுகிறோம்.

எனவே இது தொடர்பில் பிரதேச சபை உரிய நடவடிக்கையை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த வடிகால் செயற்திட்டம் மிகத் தாழ்வாக கொங்கிறீட்டால் அமைக்கப்படுவதாகவும், இதனால் மாரி காலத்தில் வயல் நிலங்களில் நீர் நிறைந்து பயிரழிவுகளை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# சாவகச்சேரி தபால் நிலைய வீதியை புனரமைக்க கோரிக்கை

**த.சுபேசன்**

சாவகச்சேரி தபால் நிலைய வீதியை மாரி காலத்திற்கு முன்னராக புனரமைத்து போக்குவரத்தினை இலகுபடுத்த வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்திருந்தார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் நடைபெற்ற அமர்வொன்றில் தான் இவ் விடயத்தை வலியுறுத்தி இருந்ததாக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

சாவகச்சேரியில் உள்ள பிரதான வீதிகளில் தபால் கந்தோர் வீதியும் ஒன்று. இவ் வீதியூடாக தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணிக்கின்றனர். முக்கியமாக பாடசாலை மாணவர்கள் அதிகம் இவ் வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நீண்ட காலமாக இவ் வீதி புனரமைப்பின்றி குண்றும் குழியுமாகக் காணப்படுவதுடன்,மாரி காலத்தில் குழிகளுக்குள் மழை நீர் நிறைந்து விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது. எனவே குறித்த வீதியின் முக்கியத்துவம் கருதி வருகின்ற மாரி காலத்திற்கு முன்பாக வீதியை சீர் செய்ய வேண்டிய கட்டாய நிலை காணப்படுகிறது.

எனவே சாவகச்சேரி நகரசபை உரிய திணைக்களத்தினை தொடர்பு கொண்டு உடனடியாக வீதியை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# 'வவுனியாவில் பாலியல் தொழிலுக்கு எதிராக நடவடிக்கை வேண்டும்'

**பா.சதீஸ்**

வவுனியா பழைய பேருந்து நிலையத்தை சூழவுள்ள பகுதிகளில் வெளி பகுதிகளிலிருந்து வரும் சில பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு செல்லும் ஏனைய பெண்களையும் வர்த்தக உரிமையாளர்களையும் இச் செயற்பாடு அதிகம் பாதிக்கின்றது.

எனவே நகரின் பிரதான பகுதியில் இடம்பெற்று வரும் பாலியல் தொழிலினைக்கட்டுப்படுத்த பொலிசார் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா நகரசபை உறுப்பினர் பிரபாகரன் ஜானுஜன் எழுத்து மூலமாக பொலிசாருக்கு அறிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் அண்மைக்காலமாக பாலியல் தொழிலில் ஈடுபடுவோரின் தொகை அதிகரித்துச் செல்கின்றது. இதனால் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர். அங்கு வரும் ஆண்கள் சிலர் ஏனைய பெண்களையும் பாலியல் தொழில் ஈடுபடும் பெண்களாக நினைத்து அவர்களிடம் தவறாக நடந்துகொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றது.

# இலவச உரத்துக்கான டோக்கன் விநியோகம்

**கோப்பாய் நிருபர்**

யாழ்.நாவற்குழி கிழக்கில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான இலவச உர விநியோகத்திற்கான டோக்கன் வழங்கல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி கிழக்கு அறிவொளி மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாவற்குழி கிழக்கு கமக்காரர் அமைப்புக்கு உட்பட்ட பிரிவில் நெற்செய்கையை மேற்கொள்பவர்களுக்கே டோக்கன் வழங்கப்படவுள்ளது. விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் வருமாறு நாவற்குழி கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது.

# 41 பட்டதாரிகள் இதுவரை கடமை பொறுப்பேற்கவில்லை

## வவுனியா மாவட்ட செயலக தகவல்கள்

**பா.சதீஸ்**

அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 50 ஆயிரம் பட்டதாரிகளிற்கான தொழில் வாய்ப்பில் வவுனியா மாவட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொண்ட 41 பேர் இன்னும் கடமைகளை பொறுப்பேற்கவில்லை என்று வவுனியா மாவட்ட செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழில் பெறும் 50 ஆயிரம் பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சின் இணையத்தளத்தில் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 343 பட்டதாரிகளின் பெயர் விபரங்கள் அதில் வெளியிடப்பட்டிருந்தன. அவர்களிற்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.

அந்தவகையில் நியமனம் வழங்கப்பட்டு 7 நாட்கள் கடந்தும் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொண்ட 41 பட்டதாரிகள் இதுவரை கடமைக்கு சமூகமளிக்கவில்லை. குறிப்பாக வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 37 பேரும், வவுனியா தெற்கில் 2 பேரும், வவுனியா வடக்கு பிரிவில் 2 பேரும், கடமைகளை போறுப்பேற்காத நிலையில் செட்டிகுளம் பிரிவில் தொழில்வாய்ப்பை பெற்ற அனைத்து பட்டதாரிகளும் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர்.

2020 செப்டெம்பர் 11 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தினகரன் விளம்பரம் 0112429367 | விற்பனை பிரிவு 0112429444, 0112429378 | ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.09 |
| அஸர் | 03.13 |
| மஃரிப் | 06.14 |
| இஷா | 07.25 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் வைகாசி 16

ராகுகாலம் : பகல் : 10.22 – 11.52வரை
சுபநேரம் : காலை : 5.52 – 7.22வரை
யோகம்: மரணசித்த யோகம்
நட்சத்திரம்: மகம் ந. இரவு 3.42 வரை
திதி: சப்தமி



இலங்கையிலுள்ள டச்சு தூதர் தன்ஜா கோங்ரிஜ்ப் (TanjaGonggrijp) நேற்றுக் காலை அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். கோவிட் 19 தொற்றை இலங்கை நிர்வகித்த விதம் குறித்து அரசாங்கத்தை பாராட்டினார்.

# இந்திய உயர் ஸ்தானிகருடன் அங்கஜன் விசேட சந்திப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் (09) இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்தார்.

இச்சந்திப்பில் யாழ். மாவட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, விவசாய அறிவியல் தொடர்பாகவும், யாழ்.மாவட்டத்தில் குடிநீர் மற்றும் சுகாதார, கால்வாய் வசதிகள் பற்றியும், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பாகவும், யாழ். மக்களுக்கான வீட்டுத்திட்டங்கள், கல்வி மற்றும் யாழ். நகரில் அமைக்கப்பட்டுவரும் இந்திய கலாசார மையத்தின் கட்டுமானம் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கு அங்கஜன் இராமநாதன் நினைவுபரிசொன்றும் வழங்கினார்.



இந்திய துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே. ஜேக்கப்பும் ஏனைய தூதரக அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# MCC உடன்படிக்கை உள்ளடக்கத்தை ஆராய்வதற்கு நிபுணர் குழு நியமனம்

## பாராளுமன்றில் அஜித் நிவாட் கப்ரால் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

சர்வதேச உடன்படிக்கைகளை மீளாய்வு செய்யும்போது சில முறையான நடைமுறைகள் பின்பற்றப்படும். அதற்கிணங்க MCC உடன்படிக்கையின் உள்ளடக்கத்தை ஆராய்வதற்கு அரசாங்கம் நிபுணர்கள் குழுவொன்றை நியமித்துள்ளதென இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று(10) MCC உடன்படிக்கை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;



பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் MCC உடன்படிக்கை தொடர்பில் மீளாய்வு செய்வதற்காக நிபுணர்கள் குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. மேற்படி குழுவின் முதலாவது அறிக்கை கடந்த ஜூன் 23ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதில் நாட்டிற்கு பொருத்தமில்லாத விடயங்கள் உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரதி எதிர்க்கட்சித் தலைவருக்கும் வழங்கப்பட்டுள்ளதென தெரிவித்தார். அது தொடர்பில் கருத்து தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,

MCC உடன்படிக்கை தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டபோது வாய் திறக்காமல் ஊமையாக இருந்த சஜித் பிரேமதாச, இப்போது நல்ல பெயர் வாங்குவதற்காக பாராளுமன்றத்தில் அது பற்றி பகிரங்கமாக பேசுகிறாரென தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த 04

# அமைச்சரவை தீர்மானங்கள்

அரச மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் அறிவித்தல்கள் மற்றும் விளம்பர செலவுகளில் 25% பெறுமதியான விளம்பர நிகழ்ச்சிகள் அரச இலத்திரனியல் அச்சு ஊடகங்களுக்கு வழங்க வேண்டுமென வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

★★★★★

2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை லிட்ரோ எரிவாயு கம்பனியின் திரவப் பெற்றோலிய வாயு (LPG) சுமார் 1,22,056 உலோக சிலிண்டர்கள் விநியோகத்திற்கான ஒப்பந்தம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★★★★★

2020/21 பெரும்போகச் நெல் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைக்காக 5,30,000 மெ.தொ. உரத்தை குறைவின்றி விநியோகிக்கும் விதத்தில் இறக்குமதி செய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★★★★★

2021 ஆம் ஆண்டுக்கான இலவசப் பாட நூல் விநியோகத்திற்கான 400 வகையான நூல்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளது. இதற்கென 3,152.72 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதுடன் அரச மற்றும் தனியார் அச்சகங்களூடாக அச்சிடவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

★★★★★

திங்கட்கிழமையை அரச நிறுவனங்களில் 'பொது மக்கள் தினம்' ஆகப் பிரகடனப்படுத்துவதற்கான ஆலோசனை அமைச்சரவையில் முன் வைக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை 'பொது மக்கள் தினமாக' பிரகடனப்படுத்தினால் மக்களுக்கு மிகவும் இலகுவாக அமையுமென யோசனைகளும் முன்மொழியப்பட்டதையடுத்து திங்கட் கிழமை 'பொது மக்கள் தினமாக' பிரகடனப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மக்கள் தேவையே எனது இலக்கு போலி தேசியம் அல்ல

## சிவனேசதுரை சந்திரகாந்தன்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



போலி தமிழ்த் தேசியம் பேசி தமிழ் மக்களை ஏமாற்றுபவர்களை போலன்றி சாத்தியமான செயற்பாடுகளுடன் தமிழ் மக்களுக்கான தேவைகளை பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துவதே தமது நோக்கமென பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (10) நிதியமைச்சின் உற்பத்தி வரி தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 54 ஆயிரத்து 198 வாக்குகளை வழங்கி பெரும் நம்பிக்கையுடன் தனக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

போலி தமிழ்த் தேசியம் பேசி தமிழ் மக்களை ஏமாற்றுவதே இடம் பெற்று வருகின்றது. கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விட்டுவிட்டு இன்று பலர் பாராளுமன்றத்தில் வெறுமனே குரல் எழுப்பி வருகின்றனர்.

மைத்திரி, ரணில், சம்பந்தன் இணைந்த நல்லாட்சி அரசாங்கம் மிக மோசமான செயற்பாடுகளையே அதன் ஆட்சிக் காலத்தில் முன்னெடுத்துள்ளது.

அந்த வகையில் புதிய அரசாங்கத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்கு தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி தயாராக உள்ளது. ஜனாதிபதியின் கரங்களை பலப்படுத்துவதும் எமது மக்களின் வளர்ச்சியிலும் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரஷ்ய பல்கலைக்கழகங்களை நீக்கிய இலங்கை மருத்துவ சபை

ரஷ்யாவின் மூன்று பல்கலைக்கழகங்களை இலங்கை மருத்துவ சபை தமது சர்வதேச பல்கலைக்கழக பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.

இதில் உலகின் முன்னணி பல்கலைக்கழகமான பெட்ரைஸ் லூமும்பா பல்கலைக்கழகமும் அடங்குகின்றது.

தீவிரமான ஆய்வின் பின்னரே இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானம் கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற மருத்துவ சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை மாணவர்களுக்கு முழுமையான புலமைப்பரிசில்களை வழங்கி வந்த லுமும்பா பல்கலைக்கழகம் என அறியப்பட்ட பீப்பல்ஸ் ப்ரன்ட்சிப் பல்கலைக்கழகம், பிரோகோவ் ரஸ்யன் தேசிய ஆராய்ச்சி மருத்துவ பல்கலைக்கழகம் மற்றும் ட்வர் அரச மருத்துவ பல்கலைக்கழகம் ஆகியவை சர்வதேச பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கையின் 40 மாணவர்களுக்கு ஆண்டுதோறும் புலமைப்பரிசில்களை வழங்கி வந்தன. இதில் 5 புலமைப்பரிசில்கள் மருத்துவத்துறைக்கானவை.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள இலங்கை மருத்துவச் சபையின் பதிவாளர் வைத்திய கலாநிதி ஆனந்த ஹப்புகொட, நிபுணர் குழு கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொண்ட ஆராய்வின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

தரமான கல்வி, இலங்கையின் சுகாதாரத்துறையுடன் இணங்கிச் செல்கின்ற கல்விமுறை என்ற அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்

எனினும் மூன்று பல்கலைக்கழகங்களும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டாலும், நீக்கும் தீர்மானத்திற்கு முன்னதாக பட்டப்படிப்பை நிறைவு செய்த மற்றும் தற்போது கல்வி கற்கும் மாணவரும் மருத்துவ சபையில் பதிவு செய்வதில் தடையில்லை என்று இலங்கை மருத்துவ சபையின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டில் சிக்கியுள்ள 50,000 இலங்கையரின் எதிர்பார்ப்பை அரசு நிறைவேற்ற வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

வெளிநாடுகளில் கொரோனா வைரஸ் காரணமாக தாய்நாடு திரும்ப முடியாமல் நிர்க்கதியாகியுள்ள சுமார் 50 ஆயிரம் இலங்கையரை நாட்டுக்கு திருப்பி அழைத்து வந்து அவர்களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்றினால் மாத்திரமே கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் வெற்றி பெற்றதாக குறிப்பிட முடியுமெனபாராளுமன்றஉறுப்பினர்மனோ கணேசன் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்பி நேற்று முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே மனோ கணேசன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.



பாக்கீர் மாக்கார் எம்.பி தமது பிரேரணையில் வெளிநாடுகளில் 50 ஆயிரம் இலங்கையர்கள் தாய் நாடு திரும்ப முடியாமல் நிர்க்கதியான நிலையில் உள்ளதாகவும் அவர்களை விரைவாக இலங்கைக்கு அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த மனோ கணேசன் எம்பி;

45,000 மேற்பட்ட இலங்கையர்கள் இவ்வாறு வெளிநாடுகளில் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

எங்கள் நாட்டுக்கு அந்நிய செலவாணியை பெருமளவில் 04

புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

# சிறுபான்மை, பெரும்பான்மை சமநிலை பேணப்பட வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பெரும்பான்மை, சிறுபான்மை மக்களுக்கிடையில் காணப்படும் சமநிலையை பேணும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று நடைபெற்ற உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

மாகாண சபைகள் செயலிழந்துள்ளதால் கிழக்கில் கல்வி சுகாதாரத் துறைகள் முற்றாக முடங்கியுள்ளன. அரசாங்கத்துக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. பெரும்பான்மை மக்களும் சிறுபான்மை மக்களும் இந்த நாட்டில் நீண்டகாலமாக சமநிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்த சமநிலையில் மாற்றம் கொண்டுவரப்படும் போது பாதிப்பு ஏற்படும்.

சோல்பரி அரசியலமைப்பில் சிறுப்பான்மை மக்களுக்காக இருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நீக்கப்பட்டே 1972ஆம் ஆண்டு முதலாவது அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது.

இதனால் ஏற்பட்ட விளைவுகளை பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை இனங்களுக்கு இடையில் வேறுபாடுகள் ஏற்பட்டன. ஆகவே, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் போது இவை கவனிக்கப்பட வேண்டும்.

அத்துடன், கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனசாக்கள் எரிக்கப்படும் விடயத்தில் உலக சுகாதார 04

# பாராளுமன்ற அமர்வுகளில் மாற்றம்; குழுக் கூட்டத்தில் தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பாராளுமன்ற அமர்வு வாரம் முதல் பாராளுமன்ற அமர்வு நேரங்களில் மாற்றம் செய்ய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றஅலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் பாராளுமன்ற அமர்வுகள் முற்பகல்

10 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடைபெறவுள்ளன. பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை 04

# நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 130.92 | 137.15 |
| கனடியன் டொலர் | 137.36 | 142.90 |
| யூரோ | 214.21 | 221.81 |
| ஜப்பான் யென் | 1.700 | 1.7754 |
| சிங்கப்பூர் டொலர் | 132.24 | 137.53 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 235.77 | 243.62 |
| சுவிஸ் பிராங்க் | 198.42 | 206.19 |
| அமெரிக்க டொலர் | 182.16 | 186.56 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹறின் டினார் | 488.92 |
| குவைத் டினார் | 602.51 |
| ஓமான் ரியால் | 476.82 |
| கட்டார் ரியால் | 50.63 |
| சவூதி ரியால் | 49.14 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.18 |

# இராணுவத் தளபதி சவேந்திர சில்வா திருமலை விஜயம்

றொட்டவெவ குறூப் நிருபர்

இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று (10) திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

திருகோணமலையில மைந்துள்ள இராணுவத்தின் 22ஆவது படைப்பிரிவின் தலைமையகத்திற்கு விஜயம் செய்த அவர் அங்கு கிழக்கு மாகாணத்தை சேர்ந்த இராணுவத்தினரை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், "கொவிட் 19 இன் தாக்கம் இலங்கையில் ஆதிக்கம் செலுத்திய காலப்பகுதியில் இலங்கை 04

# அரச விளம்பரங்கள் அரச ஊடகங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி

அரச ஊடக நிறுவனங்களை அரசுக்கு சுமையற்ற வகையில் நடத்திச் செல்லும் வகையில் அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களின் அறிவித்தல்கள் மற்றும் விளம்பரங்களில் 25% பெறுமதியான வற்றை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு மற்றும் லேக்

ஹவுஸ் போன்ற அரச அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுக்கு கட்டாயமாக வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

04

# அரச காணிகளை பயன்படுத்துவோருக்கு சட்டபூர்வ ஆவணம்

ஆவணங்கள் எதுவுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது அவற்றில் குடியிருந்துவரும் மக்களுக்கு அக்காணிகளுக்கான சட்ட ரீதியான ஆவணங்களை வழங்குவது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் இந்த வர்த்தமானியை வெளியிட்டுள்ளது.

இத் திட்டத்தை கம்பஹா மற்றும் கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக விண்ணப்பிப்பதற்குரிய மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் 04

## அரசுடன் இணைந்து... தொடர்

சிரமங்களை நாம் நன்கறிவோம், குறிப்பாக இலங்கையில் முதலீடுகளை செய்வதற்கு உள்ளூர் முகவர்கள் தரகுப் பணம் பெற முற்பட்டதால் நீங்கள் பலர் எமது நாட்டில் முதலீடு செய்வதை தவிர்த்து வெளியேறியுள்ளது எமக்கு மிகவும் வேதனை அளிக்கிறது.

எமது அரசு உங்களுக்கான முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும். அத்துடன் உங்களிடம் யாராவது தரகுப் பணம் அல்லது வேறு ஏதாவது தொல்லைகள் கொடுத்தால் நீங்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகத்திற்கு நேரடியாக தெரியப்படுத்தலாம்.

குளிர், பனி என்று பாராமல் உங்களை வருத்தி நீங்கள் உழைக்கும் பணத்தை உங்கள் மண்ணில் நீங்கள் தைரியத்துடன் முதலீடு செய்வதற்கு எமது அரசு என்றும் உங்களுக்கு பக்க பலமாக செயற்படும்.

எம் அனைவரதும் அழகிய இலங்கைத் தீவை உங்கள் வரவால் வெகு விரைவில் இன்னும் பன்மடங்கு அழகிய மற்றும் வளம் கொழிக்கும் உலகம் திரும்பிப் பார்க்கும் நாடாக்குவதற்கு நாம் அனைவரும் கைகோர்த்து பயணிப்போமென்றும் பிரதமர் புலம்பெயர்ந்துள்ள முதலீட்டாளர்களிடம் நம்பிக்கை வெளியிட்டார்.

## கஞ்சிபானை இம்ரான் உள்ளிட்ட... தொடர்

இதேவேளை, பொட்ட நௌபர், கெவுமா, ஆமி சம்பத் உள்ளிட்ட 06 கைதிகள் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா காலத்தில் உறவினர்களை சந்திக்க முடியாமை காரணமாக பெற்றுக் கொடுக்கப்பட்ட தொலைப்பேசி வசதியை அகற்றியமை, கைதிகளை சந்திக்க வரும் சட்டத்தரணிகளை சோதனை செய்தல், விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கைகள் உள்ளிட்ட சில விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கைதிகள் இந்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ரிப்கானுக்கு எதிரான... தொடர்

போலி ஆவணங்களை தயாரித்து தலை மன்னார் பகுதியில் 80 ஏக்கர் இரண்டு காணிகளை விற்பனை செய்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட முறைபாடு தொடர்பில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

இந்த ஆவணங்களில் உள்ளடங்கியுள்ள கையொப்பத்தை அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையை பெற்றுக் கொள்ளுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி அரசாங்க இரசாயன பகுப்பாய்வு கிடைக்கப்பெற்ற பின்னர் விசாரணைகளை நிறைவு செய்து விசாரணை அறிக்கையை சட்ட மாஅதிபரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறைச்சிக்காக மாடுகளை... தொடர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தனது கருத்தை முன்வைத்திருந்தாரென அவர் தெரிவித்துள்ளார்.

மாடுகளை இறைச்சிக்காக கொல்வதை தடை செய்யப்போவதாக பிரதமர் தெரிவித்திருந்தாரென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அமைச்சரவை பத்திரத்தை எப்போது சமர்ப்பிப்பது என்பதை பிரதமர் தீர்மானிப்பாரென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில் இரு... தொடர்

தனுஷியாவிற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே பிரதேச செயலகத்தில் வேலை கிடைத்தாக தெரிய வருகிறது. இந்நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தகனம் செய்வதற்கு... தொடர்

நபர்களை தகனம் செய்ய வேண்டுமென வெளியான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான ரிஸாட் பதியுதின் உள்ளிட்ட 12 பேர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச காணிகளை... 03ஆம் பக்கத் தொடர்

வழிகாட்டுநெறிகளை உள்ளடக்கியதாக மேற்படி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் இம்மாதம் 30ஆம் திகதி (2020/09/30) வரை ஏற்றுக்கொள்ளப்படும். அவற்றை காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு அல்லது கிராம அலுவலகரிடம் கையளிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி 2020.11.01 ஆம் திகதியிலிருந்து 2020.11.21ஆம் திகதிக்கிடையில் இயைபுடைய பிரதேசத்தின் பிரதேச செயலாளர் தீர்மானிக்கின்ற திகதியில் நடத்தப்படுமெனவும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான ஆவணங்களின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்வதில் உள்ள சிரமங்களை சீர் செய்வதும் அரச காணிகளை முறையற்ற வகையில் ஆக்கிரமித்துள்ள நபர்களை அடையாளம் காண்பதும் அதில் தகுதியானவர்களை அடையாளம் கண்டு சட்டபூர்வ ஆவணங்களை வழங்குவது இந்த திட்டத்தின் நோக்கம் எனவும் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் அறிவித்துள்ளது.

காணி உறுதியின்றி அரச காணிகளில் வாழும் மக்களுக்கு அவற்றை சட்டபூர்வமாக வழங்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதபதி கோட்டாபய ராஜபக்ஷ இதற்கு முன்னர் உறுதியளித்திருந்தார்.(பா)

## வெளிநாட்டில் சிக்கியுள்ள... 03ஆம் பக்கத் தொடர்

பெற்றுத்தரக்கூடிய பணிகளில் உள்ளவர்கள் இந்த நாட்டுக்கு மிக முக்கியமானவர்கள் அவர்களுடைய கண்ணீருக்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும்.

அவர்களை மிக விரைவில் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது குடும்பத்தாரும் அவர்களை நினைத்து கவலையுடன் வாழ்கின்றனர் .அவர்களை தாய்நாட்டுக்கு அழைத்து வரும் பொறுப்பை அரசாங்கம் முழுமையாக ஏற்று நிறைவேற்ற வேண்டும்.

அந்தந்த நாடுகளில் உள்ள தூதுவர்கள் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். அரசாங்கம் அந்த வேண்டுகோளை விரைவாகவே வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத் தளபதி... 03ஆம் பக்கத் தொடர்

இராணுவம் சிரமங்களை பாராது கடமைகளில் ஈடுபட்டிருந்தது. இதன் காரணமாக நாட்டில் நோய்த் தொற்று சமூகபரவலடையாது பாதுகாக்க முடிந்தது.

அதற்காக நன்றி தெரிவிக்குமுகமாக எனது இந்த விஜயம் அமைந்துள்ளது.

போதைப் பொருள் கொண்டு செல்லுதல் மற்றும் பயன்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவதாக பல வகைகளில் செய்திகள் வெளியாகிறது அவ்வாறான குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் உடனடியாக தண்டனைக்கு உற்படுத்தப் படுவர்" எனவும் அவர் தெரிவித்தார்.

## MCC உடன்படிக்கை... 03ஆம் பக்கத் தொடர்

சஜித் பிரேமதாச, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுவது தவறு. MCC உடன்படிக்கை அமைச்சரவைக்கு வரும்போது நான் அதை எதிர்த்தேன்.

அது கூட தெரியாமல் அப்போது அமைச்சரவையில் இல்லாத ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தவறான கருத்தை தெரிவிக்கின்றார் என்றார்.

## சிறுபான்மை, பெரும்பான்மை... 03ஆம் பக்கத் தொடர்

ஸ்தாபனத்தின் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஜனாசாக்களை புதைக்க முடியுமென உலக சுகாதார ஸ்தாபனம் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. ஆகவே, இந்த விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## அரச விளம்பரங்கள்... 03ஆம் பக்கத் தொடர்

இது தொடர்பில் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் காணிகள் பகிர்ந்தளிப்பு;

# தோட்டத் தொழிலாளர்களுக்கே காணிகள் வழங்கப்பட வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

பெருந்தோட்டத்துறையை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் விசேட கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக தெரிவித்த வேலுகுமார் எம்பி பெருந்தோட்டத்துறையில் நிலவும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அந்த கூட்டத்தில் பெருந்தோட்டத்துறை தோட்டங்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பில் பேசப்பட்டதாக அறிய முடிகிறது. அவ்வாறு பகிரப்படும் போது சுமார் 150 வருடங்கள் அத்துறையில் ஈடுபட்டுள்ள தோட்டத்தொழிலாளர்களுக்கு அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சின் உற்பத்தி வரி திருத்தம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே பெருந்தோட்டத்துறை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கி உள்ளது.ஏற்றுமதி துறை அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுப்பதில் தேயிலைத் தொழில் துறை முக்கிய பங்கை வகித்துள்ளது.

எனினும் மாறி மாறி வரும் அரசாங்கங்கள் இக்கரைக்கு அக்கரை பச்சை போன்று பெருந்தோட்டத்துறை முன்னேற்றத்தில் கவனம் செலுத்துவதில்லை. வேறு துறைகளுக்கு செலுத்தப்படும் அவதானம் பெருந்தோட்டத் துறையில் செலுத்தப் படுவதில்லை. அதனால் அந்த மக்கள் போதிய வருமானத்திற்கான வழியின்றி கஷ்டப்படுகின்றனர்.

அதேவேளை அரசாங்கம் ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிலையில் மலையகத்தில் ஆசிரிய உதவியாளர்களாக சேவையில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் அதற்காக அவர்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

அதற்கான அனைத்து தகைமைகளும் அவர்களுக்குள்ள நிலையில் அரசாங்கம் அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அனுராதபுரம் மாவட்டத்தில் 213 பேருக்கு இன்னும் பட்டதாரி நியமனமில்லை

### இஷாக் ரஹ்மான்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

50,000 பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்தில் இதுவரை நியமனம் கிடைக்காத அனுராதபுர மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு நியமனம் கிடைக்க அரசாங்கம்வழிவகை செய்ய வேண்டுமென இஷாக் ரகுமான் எம்.பி.பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (09) நிதியமைச்சின் உற்பத்தி வரி தொடர்பான விவாதத்தின் போது இது தொடர்பில் தெரிவித்த இஷாக் ரகுமான் எம்பி, கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் நியமனம் வழங்கப்பட்டு இரண்டு மூன்று தினங்கள் தொழிலுக்கும் சென்றுள்ள அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 213 பேர் இதுவரை நியமனம் வழங்கப்படாமல் உள்ளனர்.

அவர்களுக்கு நியமனங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## நாடு முழுவதுமுள்ள 5,000... தொடர்

இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதியின் தலைமையில் முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உத்தேச திட்டம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதற்கு முன்னரும் குளங்களை புனர்நிர்மாணம் செய்யும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது நிபுணர்களினதும் மக்களினதும் பலத்த விமர்சனத்திற்குள்ளாகியது. குளங்களை தோண்டி ஆழப்படுத்தினாலும் நீரை தேக்கி வைக்கக்கூடிய புராதன தொழிநுட்பம் மற்றும் விஞ்ஞான ரீதியான முறைகள் பயன்படுத்தாமையே இதற்கான காரணமாகும். அவ்வாறான குறைபாடுகளை களைந்து பொதுவான வழிமுறைகளின் மூலம் அந்தந்த பிரதேசங்களுக்கு மற்றும் குளங்களுக்கு உரிய முறைமைகளின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

குளங்களில் படிவுகள் நிரம்புவதினால் அவற்றின் கொள்ளளவு குறைந்துள்ளது. அதிகளவான குளங்களில் கரைகள் இடிந்து விழுந்துள்ளன. பெரும்போகத்தை இலக்காக் கொண்டு அவற்றை உடனடியாக புனர்நிர்மாணம் செய்வதன் அவசியத்தை பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ச குறிப்பிட்டார்.

வயல் நிலங்களுக்கு மாத்திரமன்றி குடிநீரை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஏனைய நீர்த் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்காகவும் குளத்து நீரை பயன்படுத்துவதன் இயலுமை பற்றி ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## MCC உடன்படிக்கை... தொடர்

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற தருணத்தில் பிரதான பேசுபொருளாக எம்.சி.சி. உடன்படிக்கைதான் இருந்தது. உடன்படிக்கை தாம் ஆட்சிக்கு வந்தால் கிழித்தெறியப்படுமென சமகால அரசாங்கம் கூறியிருந்தது.

என்றாலும், தேர்தலின் பின்னர் உடன்படிக்கை மீள் மதிப்பீடு செய்யப்படுமென அரசாங்கம் அறிவித்ததுடன், அதற்காக விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

மதிப்பீட்டு குழுவின் அறிக்கை கடந்த ஜுலை மாதம் 23ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்டது. உத்தேச உடன்படிக்கையில் நாட்டுக்கு பாதகமான பல காரணிகள் உள்ளதாகவும் அவற்றை திருத்தியமைக்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட தரப்பு திருத்தங்களுக்கு இணக்கம் வெளியிடாவிட்டால் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படுவது நிராகரிக்கப்பட வேண்டுமெனவும் மதிப்பீட்டு குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் தலதா மாளிகையை வழிப்பட செல்லும் போது பாதையின் ஒரு பகுதி அமெரிக்காவுக்கு சொந்தமாகவும் மறுபகுதி இலங்கைக்கு சொந்தமாகவும் மாறுமென சமகால அரசாங்கம் கூறியிருந்ததுடன், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் நாட்டில் இரத்த ஆறு ஓடும் எனவும் கூறியிருந்தது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் உத்தேச எம்.சி.சி உடன்படிக்கையில் 30 சதவீதமான நன்மையானவை எனவும் 70 சதவீதமானவை நாட்டுக்குப் பாதகமானவை எனவும் ஒரு சூத்திரத்தை தயாரித்திருந்தனர். தற்போது இந்த விடயத்தில் அரசாங்கம் மௌனியாகியுள்ளது. ஆகவே, தேர்தல் காலத்தில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியின் பிரகாரம் எம்.சி.சி. உடன்படிக்கை கிழித்தெறியப்படுமா? எனக் கேள்வியெழுப்பினார்.

## கல்முனை கடற்பரப்புக்குள்... தொடர்

தொழிலுக்கு செல்வதை தவிர்த்து வந்த நிலையில் இவ் விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து நாரா நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் அவசர கலந்துரையாடலை நடத்திய அமைச்சர், உடனடியாக கல்முனை கடற் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு

அறிவுறுத்தியிருந்தார்.

நாரா நிறுவனத்தினால் பெரிய நீலாணையிலிருந்து ஒலுவில் வரையிலும், அதேபோன்று பொத்துவில், பானமை, திருக்கோவில் ஆகிய கடற்பிரதேசங்களிலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஆய்வுப் பணிகள் 32 கடல் மைல் தூரம் வரை மேற்கொள்ளப்பட்டதுடன் இக் கடற்பிரதேசத்திலிருந்து பிடிக்கப்பட்ட மீன்களை ஆய்வுக்குட்படுத்தி அவற்றிலும் எந்தவிதமான மாற்றங்களையும் அவதானிக்கவில்லையெனவும் தெரிவித்துள்ள நாரா நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச கடற்றொழிலாளர்கள் வழமை போன்று தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட முடியுமெனவும் தெரிவித்தனர்.

## இந்தியாவை மீறி 13ஆவது... தொடர்

தங்களிடம் 2/3 பெரும்பான்மை இருக்கின்றதென்பதற்காக 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதனை ஏற்க முடியாது.

13 ஆவது திருத்தத்தைப் பொறுத்தவரை அதிலுள்ள மாகாணசபை முறையை தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்நிலையில் இதனை ஒழிக்க வேண்டுமெனக் கூறப்படுவதனையிட்டு கவலையடைகின்றோம். தமிழ் மக்களுக்கு எந்தவித தீர்வினையும் வழங்கக் கூடாதென்ற நோக்கத்திலேயே 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க முற்படுகின்றனர். தமிழ் அரசியல் தலைவர்களின் பல வருட அரசியல் மற்றும் இளைஞர்களின் ஆயுதப் போராட்டங்களுக்கு கிடைத்த ஒரு சிறு தீர்வாகவே இந்த 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் உள்ளது. இதனை ஒழிக்க வேண்டுமென சிங்களப்பேரினவாதிகள் என்னதான் எதிர்ப்புக்குரல் கொடுத்தாலும் இந்தியாவை மீறி 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ஒழிக்க முடியாது. எனவே 13ஐ ஒழித்துவிடுவோமென எவரும் பகற்கனவு காணக்கூடாது என்றார்.

## 20 ஆவது திருத்த... தொடர்

திருத்தத்தின் மீது இன்னமும் கவனம் குவிக்கப்படாத நிலையில், அதன் உள்ளடக்கங்கள் தொடர்பாக மக்கள் போதியளவு தெளிவடையாத நிலையே காணப்படுகின்றது.

அதிலுள்ள முன்மொழிவுகள் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருப்பதனால் அவை தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளடங்கலாகப் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக அதனையொரு வெள்ளைக் காகிதமாகக் கருதி, அவை குறித்து மக்கள் மத்தியில் விரிவான கலந்துரையாடலை ஏற்படுத்தவேண்டும்.

அதேவேளை இந்த 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவரசம் காட்ட கூடாது என பதிவிட்டுள்ளார்.

## பொதுமக்கள், அரசியல்... தொடர்

சட்டமூலம் நீதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மம்பில,

20 ஆவது திருத்த யோசனை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பொதுமக்கள்,எதிரணி,அமைப்புகள் இது தொடர்பில் யோசனைகள் முன்வைத்து வருகின்றன. தனிப்பட்ட ரீதியிலும் யோசனைகள் எமக்கு வழங்கப்படுகிறன. இரு வாரகாலம் இதற்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.பாராளுமன்றத்தில் இது சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றம் செல்ல ஒரு வார காலம் வழங்கப்படும்.

20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு தேவையா அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் நிறைவேற்ற முடியுமா? என உச்ச நீதிமன்றம் அறிவிக்கும். மக்களினதும் கட்சிகளினதும் கருத்துகளையும் உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் உள்வாங்கி பாராளுமன்றத்தில் தேவையான மாற்றங்களுடன் இது நிறைவேற்றப்படும் என்றார்.

20 ஆவது திருத்த சட்டமூலத்தில் குறைபாடுள்ளதாக சட்டத்தரணி மனோகர டி சில்வா கூறியிருப்பது பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

அதனை ஏற்கிறோம். இதில் குறைபாடுகள் இருந்தாலும் வர்த்தமானியை மாற்ற முடியாது.முன்வைக்கப்படும் கருத்துக்கள் குழுநிலையில் ஆராயப்பட்டு உகந்த திருத்தங்கள் செய்யப்படும் என்றார்.

சுதந்திரக்கட்சியின் ஆதரவு பற்றியும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெற எதிரணியின் ஆதரவு தேவைப்படுமா? என்பது பற்றியும் வினப்பட்டது.இதற்குப் பதிலளித்த அமைச்சர் கம்மம்பில,17 மற்றும் 19 ஆம் திருத்தங்கள் குழுநிலையில் தான் திருத்தப்பட்டன.

பெருமளவில் அவற்றில் மாற்றம் செய்யப்பட்டன. வர்த்தமானியில் வெளியிடப்படும் சட்டமூலமன்றி வேறொன்று தான் நிறைவேறுகிறது என்றார்.

## ஆறு புதிய தூதுவர்களை... தொடர்

அட்மிரல் கே.கே.வீ.பீ ஹரிச்சந்திர த சில்வாவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக சஞ்சீவ குணசேகரவின் பெயரும் அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவராக ரவிநாத் ஆரியசிங்கவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரான்ஸுக்கான இலங்கை தூதுவராக பேராசிரியர் ஷானிக ஹிரிபுரேகமவின் பெயரும் சீனாவுக்கான இலங்கை தூதுவராக கலாநிதி பாலித கொஹொனவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக மிலிந்த மொரகொடவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நியமனங்கள் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் கருத்து தெரிவிக்க முடியுமெனவும் அதனை செப்டம்பர் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலமாக அறிவிக்குமாறும் உயர் பதவிகள் பற்றிய பாராளுமன்றக் குழு தெரிவித்துள்ளது.

இராஜதந்திரகள் தொடர்பில் உயர் பதவிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் அவர்கள் நியமிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகின்றது.

## பாராளுமன்ற அமர்வுகளில்... 03ஆம் பக்கத் தொடர்

சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெறும்.

செப்டெம்பர் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்களின் கீழ் முன்வைக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான 12 கட்டளைகளும், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 03 ஒழுங்குவிதிகளும், 02 கட்டளைகளும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 31 கட்டளைகளும் எதிர்வரும் 22ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான வாய்மூல விடைக்கான கேள்விகள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரையான காலம் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், எதிர்வரும் 23ஆம் 24ஆம் திகதிகளில் சபாநாயகரினால் நேற்று முற்பகல் முன்வைக்கப்பட்ட 2019ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019ஆம் ஆண்டுக்கான மூன்றாவது காலாண்டு செயலாற்றுகை அறிக்கை மற்றும் ஆளும் கட்சியினால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை என்பன விவாதிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் சுரங்கனி எல்லாவல மற்றும் ஆர்.எம்.பி.ரத்னாயக்க ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன.

இந்த பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷமன் கிரியல்ல மற்றும் அமைச்சர்களான நிமல் சிறிபால. டி சில்வா, டக்ளஸ் தேவானந்தா, மஹிந்த அமரவீர, பிரசன்ன ரணதுங்க, அலி சப்ரி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், கயந்த கருணாதில, டிலான் பெரேரா, ரிஷாட் பதியுதீன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உலகெங்கும் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோர் 900,000 ஆக அதிகரிப்பு



உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 900,000ஐ தாண்டி இருப்பதோடு நோய்த் தொற்றுச் சம்பவங்கள் 27.7 மில்லியனாக அதிகரித்துள்ளது.

மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பதோடு அங்கு உயிரிழப்பு 190,000ஐ தாண்டியுள்ளது. அமெரிக்காவில் 6.3 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இரண்டாவது இடத்தில் இருக்கும் பிரேசிலில் 127,000க்கும் அதிகமானோரும் தொடர்ந்து இந்தியாவில் சுமார் 74,000 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நாளாந்த நோய்த் தொற்றின் புதிய உச்சமாக நேற்று இந்தியாவில் 95,735 வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன்மூலம் அங்கு நோய்த் தொற்றுச் சம்பவங்களின் எண்ணிக்கை 4.4 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஏற்கனவே 4.1 மில்லியன் நோய்த் தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி இருக்கும் பிரேசிலை இந்தியா முந்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகின் இரண்டாவது பெரும் மக்கள் தொகை கொண்ட இந்தியா கொரோனா வைரஸ் தொற்றின் புதிய மையப்புள்ளியாக மாறியுள்ளது.

எனினும் அமெரிக்காஸ் பிராந்தியத்தில் உலகில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் பாதிக்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மெக்சிகோ, பெரு, கொலம்பியா, சிலி மற்றும் ஈக்வடோர் ஆகிய நாடுகளில் உயிரிழப்பு அதிகரித்துள்ளது.

கொவிட்–19 தொற்றுக் காரணமாக உலகெங்கும் சராசரியாக 5,600க்கும் அதிகமானோர் உயிரிழப்பதாக ரோய்ட்டர்ஸ் தரவு குறிப்பிடுகிறது. உயிரிழப்பு வேகம் நிலையாக இருப்பதோடு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 700,000இல் இருந்து 80,000ஐ தொட 17 நாட்கள் எடுத்துக் கொண்ட நிலையில் 800,000இல் இருந்து 900,000ஐ எட்ட 18 நாட்கள் ஆகியுள்ளன.

எனினும் நோய்த் தொற்றினால் பிரேசில் மற்றும் அமெரிக்காவில் மரண வீதம் 3 ஆக இருக்கும் நிலையில் இந்தியாவில் அது ஒரு வீதமாகவே உள்ளது.

## இஸ்ரேல்–ஐ.அ. இராச்சிய உறவு:

# அரபு லீக்கில் பலஸ்தீனத்தின் கண்டனத் தீர்மானம் தோல்வி

இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையில் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் சர்ச்சைக்குரிய உடன்படிக்கையை கண்டிப்பதை அரபு லீக் கைவிட்டுள்ளது.

அரபு லீக் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் வீடியோ கொன்பிரன்ஸ் முறையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதில் பலஸ்தீனம் முன்வைத்த தீர்மானத்தையே அரபு லீக் நாடுகள் தோற்கடித்துள்ளன.

2002 இன் இரு நாட்டு தீர்வைக் கொண்ட அமைதி முயற்சி அடிப்படையில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன விவகாரத்தில் இறுதித் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் இந்தக் கூட்டத்தில் இணக்கம் ஏற்பட்டதாக பலஸ்தீன இராஜதந்திரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

எனினும் சில அரபு நாடுகள் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுக்கு சட்டபூர்வமான தன்மையை கொடுப்பதற்கு முயன்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்த நாடுகளின் பெயர்களை அவர் வெளியிடவில்லை. 1967 இல் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தில் பலஸ்தீன தனி நாடு ஒன்றை உருவாக்கும் உடன்படிக்கை ஒன்று எட்டப்படாத நிலையில் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்துவதை பெரும்பாலான அரபு நாடுகள் நிராகரித்து வருகின்றன.



# அமைதிக்கான நோபல் பரிசு: டிரம்பின் பெயர் பரிந்துரை

அடுத்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் தீவிர வலதுசாரி பாராளுமன்ற உறுப்பினரான கிறிஸ்டியன் டைப்ரிங் ஜெட்டே, டிரம்பின் பெயரை கடந்த புதன்கிழமை பரிந்துரைத்தார். இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையே அண்மையில் ஏற்பட்ட இராஜதந்திர உறவில் டிரம்பின் பங்களிப்புக்காகவே இந்தப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

“டிரம்ப் நாட்டில் எவ்வாறு நடந்துகொள்கிறார், ஊடக சந்திப்புகளில் என்ன கூறுகிறார் என்பது விடயமல்ல. அமைதிக்கான நோபல் பரிசை பெற அவருக்கு நிச்சயமாக வாய்ப்பு உள்ளது” என்று டைப்ரிங் ஜெட்டே ஏ.பீ செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.



2021ஆம் ஆண்டின் நோபல் பரிசுக்காகவே டிரம்ப் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விருதைப் பெறுவதற்கான பெயர்களை பரிந்துரைக்கும் காலக்கெடு முடிந்திருக்கும் நிலையில் வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி நோர்வே நோபல் குழுவுக்கு டிரம்ப் தொடர்பான பரிந்துரையை முன்வைக்க முடியும்.

நியாயமாக வழங்குவதென்றால் தமக்கு பல விடயங்களுக்காக நோபல் பரிசு கிடைத்திருக்க வேண்டும் என்று டிரம்ப் கடந்த ஆண்டு குறிப்பிட்டிருந்தார்.

# ஈராக்கில் இருந்து 2,200 அமெ. துருப்புகள் வாபஸ்



ஈராக்கில் இருந்து மூன்றில் ஒரு பகுதிக்கும் அதிகமான அமெரிக்க துருப்புகள் அடுத்த ஒரு சில வாரங்களுக்குள் வாபஸ் பெறப்படும் என்று மத்திய கிழக்கிற்கான முக்கிய தளபதியான ஜெனரல் கென்னத் மக்கன்சி அறிவித்துள்ளார்.

செப்டெம்பர் மாதத்திற்குள் தற்போது நிலைகொண்டிருக்கும் துருப்புகளின் எண்ணிக்கை சுமார் 5,200இல் இருந்து 3000 வரை குறைக்கப்படும் என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எஞ்சி இருக்கும் வீரர்கள் இஸ்லாமிய அரசு ஜிஹாதிக் குழுவுக்கு எதிராக ஈராக் பாதுகாப்பு படைகளுக்கு ஆலோசனை மற்றும் உதவிகளை தொடர்ந்து வழங்கவுள்ளனர்.

கூடிய விரைவில் ஈராக்கில் இருந்து அனைத்து துருப்புகளையும் வாபஸ் பெற திட்டமிட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த மாதம் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஜனவரி மாதம் பக்தாதில் ஆளில்லா விமானத் தாக்குதல் மூலம் ஈரான் இராணுவ ஜெனரல் காசிம் சுலைமானி அமெரிக்காவால் கொல்லப்பட்டது தொடக்கம் அமெரிக்க துருப்புகள் ஈராக்கில் நிலைகொள்வதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# 50 ஆண்டுகளில் 68 வீத வனவிலங்குகள் வீழ்ச்சி

கடந்த 50 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் வனவிலங்குகளின் எண்ணிக்கை மூன்றில் இரண்டாக குறைந்திருப்பதாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான உலக வனவிலங்கு நிதியம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பெரும் அழிவு குறைவதற்கான எந்த சமிக்ஞையும் தெரியவில்லை என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பார்க்காத அளவுக்கு மனிதனால் இயற்கை அழிக்கப்பட்டு வருவதாகவும் அது எச்சரித்துள்ளது.

“காடுகளை தீமூட்டுவது, எமது கடல்களில் மீன்பிடிப்பது மற்றும் காட்டுப்பகுதிகளை அழிப்பது வனவிலங்குகள் குறைவதற்கான காரணம்” என்று உலக வனவிலங்கு நிதிய தலைமை நிர்வாகி டான்யா ஸ்டீல் தெரிவித்துள்ளார்.

இதன்போது உலகெங்குமுள்ள வாழ்விடங்களில் பல்வேறு வனவிலங்கு இனங்கள் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகளால் அவதானிக்கப்பட்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

1970 தொடக்கம் பாலூட்டிகள், பறவைகள், நிலநீரில் வாழ் உயிரினங்கள், ஊர்வன மற்றும் மீன்களின் எண்ணிக்கையில் 68 வீதம் வீழ்ச்சி கண்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இயற்கைக்கு மனிதனால் செய்யப்படும் சேதங்களே இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்பது ஆதராபூர்வமானது என்று இது தொடர்பில் தரவுகளை வழங்கிய டொக்டர் அன்ட்ரு டொர்ரி தெரிவித்துள்ளார்.



## கொவிட்–19 தடுப்பு மருந்து:

# உலகெங்கும் விநியோகிப்பதற்கு 8,000 ஜம்போ ஜெட்கள் தேவை



கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தை உலகெங்கும் எடுத்துச் செல்வது விமானப் போக்குவரத்தில் பெரும் சவாலாக அமையும் என்று விமானத் துறையினர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மருந்துகளை எடுத்துச் செல்வதற்கு 8,000 பொயிங் 747 விமானங்களுக்கு இணையான அளவு விமானங்கள் தேவைப்படும் என்று சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கான தடுப்பு மருந்து இன்னும் தயாராகாதபோதும் அதனை எடுத்துச் செல்வது குறித்து விமானசேவைகள், விமான நிலையங்கள், உலக சுகாதார நிறுவனங்கள் மற்றும் மருந்தக நிறுவனங்களுடன் இணைந்து சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் ஏற்கனவே பணிகளை ஆரம்பித்துள்ளது.

ஒருவருக்கு ஒரு முறை மாத்திரமே மருந்து வழங்கப்படும் வகையிலேயே விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தடுப்பு மருந்தை எடுத்துச்செல்ல எல்லா ரக விமானங்களும் ஏற்றவை அல்ல. அதற்கு விமானத்தினுள் வெப்பநிலை 2லிருந்து 8 டிகிரி செல்சியஸாக இருக்க வேண்டும்.

தடுப்பு மருந்துக்கான அங்கீகாரம் கிடைத்தவுடன் அவற்றின் விநியோகத்திற்கு இப்போதே திட்டமிடும்படி அரசாங்கங்களுக்கு சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கம் ஆலோசனை கூறியுள்ளது.

“கொவிட்–19 தடுப்பு மருந்துகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்வது உலக சரக்கு விமானத் துறையில் இந்த நூற்றாண்டின் பெரும் சவாலாக அமையும். எனினும் அவதானம் கொண்ட நவீன திட்டம் இன்றி இது நடக்காது. அதற்கு இதுவே நேரம்” என்று குறித்த சங்கத்தின் தலைமை நிர்வாகி அலெக்சாண்ட்ரே டி ஜூனியக் தெரிவித்துள்ளார்.

# மேற்கு அமெரிக்காவில் பயங்கரக் காட்டுத் தீ



மேற்கு அமெரிக்காவின் பெரும் பகுதிகளில் முன்னர் இல்லாத அளவில் பயங்கர காட்டுத் தீ தீவிரமாக பரவியுள்ளது. ஒரேகன் மாநிலத்தில் குறைந்தது ஐந்து சிறு நகரங்கள் தீயினால் அழிந்திருக்கும் நிலையில் உயிரிழப்புகளும் இடம்பெற்றுள்ளன.

மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசுவதால் ஒரேகன் மற்றும் அண்டைய மாநிலமான வொசிங்டனில் பேரழிவை ஏற்படுத்தும் தீச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. குளிர் மற்றும் ஈரமான காலநிலை நிலவும் இந்தப் பகுதிகளில் தீவிரமாக தீ பரவுவது அரிதான ஒன்றாகவே உள்ளது.

ஒரேகனில் காட்டுத் தீயால் மூவர் உயிரிழந்திருப்பதோடு வொசிங்டனில் தீயிலிருந்து தப்ப முயன்றபோது ஒரு வயது குழந்தை கொல்லப்பட்டு பெற்றோர்கள் தீக் காயத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கலிபோர்னியாவிலும் மூவர் உயிரிழந்த நிலையில் ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேற்கு அமெரிக்காவில் சுமார் 100 தீச் சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் கலிபோர்னியாவில் சுமார் 2.2 மில்லியன் ஏக்கர் நிலம் தீயால் சேதமடைந்துள்ளது.

வானில் கரும்புகை சூழ்ந்திருப்பதன் காரணமாக பல நகரங்களிலும் வானம் செம்மஞ்சல் நிறத்தில் காணப்பட்டது. பயங்கரத் தோற்றத்துடன் காட்சியளித்த வானத்தைப் பலரும் படம் பிடித்து சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்தனர். சில இடங்களில் பனித் துளிகள் போல் சாம்பல் வானத்திலிருந்து தரையில் விழுந்தன.

இந்தக் காட்டுத் தீ மேலும் மூன்று மேற்கு மாநிலங்களில் பரவி இருப்பதாக தேசிய தீயணைப்பு தகவல் மையம் தெரிவித்துள்ளது.

# ரொஹிங்கிய படுகொலைகள் தொடர்பில் இரு மியன்மார் படை வீரர்கள் ஒப்புதல்

மியன்மார் இராணுவத்தில் இருந்து வெளியேறிய இரு வீரர்கள், தாம் கண்ணில்பட்ட ரொஹிங்கிய முஸ்லிம்களை சுட்டுக்கொன்றதாகவும் அவர்களின் உடல்களை பாரிய புதைகுழிகளில் புதைத்ததாகவும் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்த இரு இராணுவ வீரர்களும் வாக்குமூலம் அளிக்கும் வீடியோ இராணுவத்துடன் போரிட்டு வரும் அரகான் படை என்று அழைக்கப்படும் கிளர்ச்சியாளர்களால் கடந்த ஜூலை மாதம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனை அரச சார்பற்ற அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.

“டவுங் பசார் கிராமத்திற்கு அருகில் இருக்கும் முஸ்லிம் கிராமங்களை நாம் அழித்தோம். கண்ணில்பட்ட காதால் கேட்கின்ற அனைவரையும் சுடும்படி கிடைத்த உத்தரவுக்கு அமைய இரவில் நாம் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டோம். ஒரு புதைகுழியில் 30 உடல்களை நாம் புதைத்தோம்” என்று அந்த வீடியோவில் தோன்றிய ம்யோ வின் டுன் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பல பெண்கள் கற்பழிக்கப்பட்டது தொடர்பிலும் இந்த இராணுவ வீரர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இராணுவத்தின் தமது சக வீரர்கள் பெண்களை கற்பழித்து விட்டு பின்னர் கொன்றதாகவும் தாமும் ஒரு பெண்ணை அவ்வாறு செய்ததாகவும் ம்யோ வின் டுன் குறிப்பிட்டுள்ளார். “நாம் கிராமம் கிராமமாக ஆட்களை கொன்று புதைத்துக்கொண்டு சென்றோம். அது மொத்தம் 60 தொடக்கம் 70 பேர்கள் இருப்பார்கள்” என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த இரு வீரர்களும் தற்போது ஹேகில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருப்பதாக நம்பப்படுகிறது. ரொஹிங்கிய விவகாரம் தொடர்பில் அந்த நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2017இல் மியன்மாரில் ரொஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் காரணமாக 740,000க்கும் அதிகமானவர்கள் அண்டை நாடான பங்களாதேஷில் அடைக்கலம் பெற்றனர்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 22

**குறள் தரும் சிந்தனை**



சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை

இத்தனை குணங்களும் இருக்கும்படி பெண்ணைச் சிறை வைத்துக் காவல் காப்பதில் பயன் என்ன? பெண்கள் தங்களைத் தாங்களே மன அடக்கத்தால் காக்கும் காவலே முதன்மையானது.

## பண்டைய நீர்வள நாகரிகத்துக்கு மீண்டும் திரும்பும் இலங்கை

நாட்டில் ஐயாயிரம் குளங்களை புனரமைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். உணவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் விவசாயப் புரட்சியொன்றை ஆரம்பிக்கும் பொருட்டு இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த கால அரசாங்கங்கள் இந்நாட்டின் விவசாய உற்பத்தி மீது போதிய கரிசனை செலுத்தாத நிலையில், ஜனாதிபதியினால் இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. விவசாயப் புரட்சியென்பது எமது நாட்டின் எதிர்காலத்துக்கு நன்மை விளைவிக்குமென்பது ஒருபுறமிருக்க, இத்திட்டமானது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இலங்கை விவசாய பொருளாதார நாடாகும். பண்டைய காலத்தில் எமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று விளங்கியதாக வரலாற்று ஆதாரங்கள் மூலம் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. தென்னிந்தியாவின் சில பகுதிகளில் பண்டைய காலத்தில் உணவுப் பஞ்சம் நிலவிய வேளையில், அங்கு ஆட்சி புரிந்த மன்னனுடனான நட்புறவின் நிமித்தம் இலங்கை மன்னர் ஒருவர் அங்கு உணவுத் தானியங்களை அனுப்பி வைத்ததாக வரலாறு கூறுகின்றது.

எமது பண்டைக்கால மன்னர்கள் நெல் உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் பாரிய குளங்களை நிர்மாணித்தனர். குளங்களை அமைப்பதில் இலங்கையில் அக்காலத்தில் சிறப்பான தொழில்நுட்பம் கையாளப்பட்டுள்ளது. இந்தியாவின் வடபகுதியில் நீர்ப்பாசனக் குளங்களை அமைப்பதற்காக பண்டைய காலத்தில் இலங்கை மன்னர்களின் உதவியுடன் இங்குள்ள தொழில்நுட்பம் பெறப்பட்டதாக வரலாற்று மூலாதாரங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. இலங்கையின் பண்டைய குளங்களின் நிர்மாணத்தில் காணப்படுகின்ற தொழில்நுட்பங்கள் இன்று எமக்கு வியப்பைத் தருகின்றன. அன்றைய மன்னர்கள் நிர்மாணித்த பாரிய நீர்ப்பாசனக் குளங்களே இன்று எமக்கு நெற்செய்கைக்கு பெரும்பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

பண்டைக்கால நீர்வள நாகரிகம் எமது நாட்டில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து போகத் தொடங்கியது. அன்றைய மன்னர்களால் அமைக்கப்பட்ட பாரிய குளங்களுக்கு நிகரான குளத்தை நிர்மாணிப்பதில் எமது கடந்த கால அரசுகள் கவனம் செலுத்தவில்லையென்றே கூற வேண்டும். விவசாயச் செய்கை மீது கடந்த கால அரசாங்கங்கள் போதிய கவனம் செலுத்தாததன் காரணமாகவே நீர்ப்பாசனக் குளங்களை நிர்மாணிப்பதிலும் அக்கறை செலுத்தப்படவில்லை.

நீரின்றி விவசாயம் இல்லை. நாட்டில் மக்கள் பெருக்கத்துக்கேற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கப்படுவது அவசியம். விவசாயம் அபிவிருத்தியடைய வேண்டுமானால் நீர்ப்பாசனம் இன்றியமையாததாகும். எனவேதான் உணவு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் ஐயாயிரம் குளங்களைப் புனரமைப்பதற்கு ஜனாதிபதியினால் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் உள்நாட்டு உணவு உற்பத்தியில் போதிய கவனம் செலுத்தாததால் கூடுதலான உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்தே நாம் இறக்குமதி செய்து வருகின்றோம். நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கிய எமது நாடு இன்றும் சில அரிசி வகைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றதென்பது கவலைக்குரிய விடயமாகும். பாஸ்மதி, பொன்னி போன்ற அரிசிகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

அரிசி மாத்திரமன்றி உழுந்து, பயறு உட்பட தானியங்கள் பலவற்றையும் வெங்காயம், உருளைக்கிழங்கு போன்றவற்றையும் எமது நாடு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து கொண்டே வருகின்றது. இதற்காக நாம் பெருமளவு பணத்தை செலவிடுவது ஒருபுறமிருக்க, உள்நாட்டு உணவு உற்பத்தி குன்றுவதால் எமது விவசாயிகளும் பாதிக்கப்படுகின்றனர்.

உணவுப் பொருட்களின் இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டால் மாத்திரமே உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழியேற்படும். அப்போதுதான் உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்கள் போதிய வருமானம் ஈட்டவும் முடியும்.

இவை ஒருபுறமிருக்க, உணவு உற்பத்திப் புரட்சியை ஏற்படுத்தும் போது உணவு உற்பத்தியாளர்கள் போதிய வருமானம் பெறுவதிலும் கவனம் செலுத்தப்படுவது அவசியம். உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் குறைந்தளவு வருமானத்தைப் பெறுகின்ற அதேசமயம், விவசாயிகளிடமிருந்து உணவுப் பொருட்களை வாங்கி விற்பனை செய்கின்ற வியாபாரிகள் அதிகளவு வருமானத்தைப் பெற்று வருகின்றனர்.

உணவு உற்பத்தியாளர்களிடமிருந்து நியாய விலையில் பொருட்கள் கொள்வனவு செய்யப்படாததால் அவர்கள் உரிய வருமானம் பெற முடியாமல் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகளின் காலடிக்குச் செல்லும் வியாபாரிகள் மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றனர்.

நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தப்படுவது மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும். அதேசமயம் விவசாயிகள் போதிய வருமானம் பெறுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# பெருந்தோட்ட பகுதிகளில் கழிவுப் பொருள் முகாமைத்துவம் சீரமைக்கப்பட வேண்டும்

பெருந்தோட்டப் பகுதிகளில் ஆரம்ப காலத்தில் கழிவுகளை அகற்றுதல் ஒரு சிரமமான காரியமாக இருக்கவில்லை. ஆனால் இன்று மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் அடிப்படைப் பிச்சினைகளில் ஒன்றாக கழிவகற்றல் உள்ளது.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு என்ற ஒன்று உருவாக முன்பு தோட்டப் பகுதியில் கழிவுகளை அகற்ற சுத்திகரிப்பு தொழிலாளிகள் தோட்டங்கள் தோறும் இருந்தனர். இவர்களை 'வாசல் கூட்டி' என்று அன்று அழைத்தனர். வாசல் என்றால் வீட்டு முற்றமாகும். தொழிலாளர்களது வீட்டு முற்றத்தை துப்புரவு செய்ய அன்று ஆங்கிலேயரின் முகாமை ஒரு அமைப்பை வைத்திருந்தது.



தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஆரம்பிக்கப்பட்டதன் பிறகு தோட்ட நடைபாதை சுகாதார துப்புரவு வேலைகள், வீடுகள் திருத்தம், குடிநீர் விநியோகம் என்பனவற்றில் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை செலுத்துவதை குறைத்துக் கொண்டன.

அன்று இன்று போல் அதிக குப்பைகள் சேரவில்லை. அடுப்பு எரித்த சாம்பலை வீட்டுத் தோட்டங்களுக்கு உரமாகப் போட்டனர்.உணவுகளின் கழிவுகளை வீட்டு நாய், ஆடு, மாடு என்பவற்றுக்கு வழங்கினர். குப்பை சேருவது அன்று குறைவாக இருந்தது.

இன்று கால்நடை வளர்ப்பும் வீட்டுத் தோட்டமும் குறைவடைந்து மறுபக்கம் கழிவுகள் அதிகரிக்கத் தொடங்கி விட்டன. இன்று இப்பகுதி மக்களால் அதிகம் வெளியேற்றப்படும் கழிவுகளில் முதலிடம் பிடிப்பது பொலித்தீன் கழிவுகளாகும் .

பெருந்தோட்டங்களுக்கு மத்தியில்சிறந்த சுகாதார கழிவகற்றல் வசதிகளைக் கொண்ட தோட்டங்கள் முலாவது, இரண்டாவது என தரப்படுத்தப்பட்டு சான்றுகள் வழங்கப்படுகின்றன.

இந்தப் போட்டி அல்லது தெரிவு காலப் பகுதியில் மட்டும் தோட்ட நிர்வாகங்கள் குப்பை முகாமையை சிறப்பாக செய்கின்றன. இது ஒரு தற்காலிகமான செயல்பாடாகவே அமைகின்றது.

குப்பைகளை வகைப்படுத்தி கொட்டுவதற்கு வேறாக்கப்பட்ட குப்பைத் தொட்டிகள் மூங்கில்களால் அமைக்கப்படுகின்றன. குப்பைகள் இங்கு வந்து குவிகின்றன. இவ்விடத்தில் இருந்து குப்பைகள் அகற்றப்படுவதில்லை.

கட்டாக்காலி நாய்கள், காட்டுப் பன்றிககள் இவற்றை இழுத்துச் செல்கின்றன.இரவு நேரங்களில் மட்டுமன்றி பகல் வேளையிலும் கழிவுகளை உண்ண காட்டுப் பன்றிகள் வருவதால் மக்கள் வீட்டுக்கு வெளியில் நடமாட கூட அச்சமாக உள்ளது.

இந்தக் கழிவுகளை அகற்றுவதில் தோட்ட நிர்வாகங்கள் திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுத்த வேண்டும்.இக்குப்பைகளை எடுத்துச் செல்வதிலும் அதைஉரமாக பயன்படுத்துவதிலும் சிக்கல்கள் உள்ளன.

கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படுவதில்லை. மக்கள் எல்லாக் குப்பைகளையும் ஒன்றாக கலந்தே கொட்டுகின்றனர்.

எனவே பெருந்தோட்டப் பகுதிகளில் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். மக்களுக்கு இது தொடர்பான விளக்கம் வழங்கப்பட வேண்டும்.

ஆர். நவராஜா...
(தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# கட்சி தொடங்கப் போவதாக ரஜினி உறுதியளித்து 3 வருடங்கள் பூர்த்தி

"சரியா சொல்ல மாட்டேங்குறார் தலைவர்.. தெளிவாக எந்த முடிவையும் அறிவிக்கமாட்டேன் என்கிறார்... எல்லாரும் எலக்ஷன் வேலையை ஆரம்பிச்சுட்டாங்க.. இப்படி இருந்தால் எப்படி?" என்று ரஜினி மன்றத்துக்குள்ளிருந்தே ஆதங்க குரல் வெடித்து கிளம்ப தொடங்கி விட்டன. இன்னும் சில மாதத்தில் தேர்தல் வரப்போகிறது.. எல்லா கட்சிகளும் கிட்டத்தட்ட ரெடியாகி விட்டன.. கூட்டணி பேச்சுவார்த்தைகளும், சீட் பேரங்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும்ஆரம்பமாகிவிட்டன. இடைத்தேர்தல்களில் போட்டியிடாத கமலும் இந்த முறை தேர்தலுக்கு தயாராகி வருகிறார். ஆனால், ரஜினிகாந்த் மட்டும் இன்னு வாயே திறக்காமல் உள்ளது அவரது மன்ற நிர்வாகிகளையே அதிருப்திக்கு உள்ளாக்கி வருகிறது.

'லொக்டவுன்' முன்பேயே கட்சியை ஆரம்பிப்பதாக சொன்னவர் ரஜினி. லொக்டவுன் முடிந்தும் சகஜ வாழ்க்கைக்கு தமிழகமே திரும்பிவிட்ட நிலையில், கட்சி தொடர்பான அறிவிப்பை இன்னும் சொல்லாமல் இருக்கிறார்.



போயஸ் கார்டன் வீட்டில் சில முக்கிய கட்சித் தலைவர்களை ரஜினி சந்தித்துப் பேசியதாகவும் சொல்லப்பட்டது. வீடியோ மூலம் தன்னுடைய ஆதரவாளர்களிடம் கருத்து கேட்டு வருவதாகவும், அரசியல் நிகழ்வுகளை மிக உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் செய்திகளும் கசிந்தவாறே இருந்தன. ஆனால், இவை எல்லாமே இப்போது அமுங்கி விட்டன.

இதுகுறித்து மன்றத்து நிர்வாகிகள், உறுப்பினர்கள் சொல்லும் போது "தேர்தலுக்கு இன்னும் 6 மாதம்தான் இருக்கிறது. இப்போது கூட, அரசியல் முடிவை தெளிவாக அறிவிக்க மாட்டேன் என்கிறார் தலைவர். அணிகள் ஆரம்பித்து, கமிட்டி அமைக்கச் சொன்னார் தலைவர். அதையெல்லாம் செய்து கொண்டு இருந்தோம். அந்தப் பணி சில மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் 40 சதவீதம் கூட பூர்த்தியாகவில்லை. அதற்குள்ளே கொரோனா பிரச்சினை வந்து விட்டது. செய்து கொண்டிருந்த பணிகளும் நிறுத்தப்பட்டன" என்கிறார்கள்.

'உங்களை முதலில் பார்த்துக்கோங்க' என்று தலைவர் தகவல் சொன்னாரே

### ஆதரவாளர்கள் சலிப்பு, அதிருப்தி

தவிர, வேறு ஒரு தகவலும் மன்றத்தினருக்கு வரவில்லை. இப்போது அ.தி.மு.க, தி.மு.க உட்பட எல்லாக் கட்சிகளும் தேர்தல் வேலையில் இறங்கி விட்டன. ஆனால், தலைவர் கட்சி பற்றியே பேச மாட்டேன் என்கிறார். இதெல்லாம் எங்களுக்கு வருத்தமாக உள்ளது. விரைவில் அவர் ஒரு நல்ல முடிவை அறிவிக்க வேண்டும் என்று ஆதங்க கோரிக்கை விடுக்கின்றனர் நிர்வாகிகள்.

இவ்வளவு காலம் ரஜினி அரசியல் வருகையானது மற்ற தரப்பினருக்கு ஏமாற்றத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தி வந்த நிலையில், இப்போது மன்றத்து நிர்வாகிகளே சோர்வடைந்து வருவது அதிர்ச்சியாக உள்ளது. அதிலும், வேலூர் மாவட்ட செயலாளர் சோளிங்கர் என்.ரவி பெயரில் மாவட்டம் முழுவதும் திடீரென சுவரொட்டிகளை ஒட்டி விட்டார். "அரசியல் மாற்றம், ஆட்சி மாற்றம், இப்ப இல்லன்னா எப்பவுமே இல்லை" என்று அந்த சுவரொட்டியில் எழுதப்பட்டுள்ளது. இது மேலும் பரபரப்பை கூட்டி உள்ளது.

2017இல் போர் வரும் போது நாங்கள் களத்தில் இருப்போம் என்று ரஜினி சொல்லி 3 வருஷம் ஆகி விட்டது. இந்த 3 வருடத்தில் 2 பெரிய தேர்தலை தமிழகம் சந்தித்து விட்டது. ஆனால், ரஜினியின் அரசியல் பிரவேசம் மட்டும் இல்லை. அதற்கு பிறகு வந்த கமல் கூட கட்சியை ஆரம்பித்து, தேர்தலிலும் போட்டியிட்டு வளர தொடங்கி விட்டாரே தவிர, இவர் மட்டும் அமைதியாக உள்ளது மன்றத்து நிர்வாகிகளை களைப்படைய வைத்து விட்டது.

"ரஜினி கண்டிப்பாக அரசியல் கட்சி தொடங்குவார். மாற்றத்தை கொண்டு வருவார். அவர்தான் அடுத்த முதல்வர்" என்று அடிக்கடி வந்து ஊடகங்களில் சொல்லி, பரபரப்பை விடாமல் தக்க வைத்து கொண்டிருந்த அவரது ஆதரவாளர்களையும் இப்போது காணவில்லை. எவ்வளவுதான் சலிப்புகள், விமர்சனங்கள், சர்ச்சைகள் வந்தாலும் இன்னமும் விடாமல் நம்பிக் கொண்டிருக்கும் மன்றத்து நிர்வாகிகள், உறுப்பினர்களுக்காகவாவது ரஜினி கட்சியை தொடங்க வேண்டும்.

# இழந்த கல்வியை மீட்டெடுக்க கல்வியமைச்சு துரித திட்டம்

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுமார் 5 மாதங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தற்போது மீண்டும் முற்றாக வழமைக்குத் திரும்பியுள்ளன.

மூடப்பட்டிருந்த பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளை எதிர்வரும் 14ஆம் திகதி மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் மதிய உணவு வழங்கும் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில், சுகாதார வழிகாட்டலின் கீழ் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கும் சிற்றுண்டிச்சாலைகளை மீளத் திறப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இழந்த கல்வியை மீட்டெடுக்க கல்வியமைச்சு துரித வேலைத் திட்டத்தை மாகாண கல்வியமைச்சின் ஊடாக முன்னெடுத்து வருகின்றது. குறுகிய காலத்துள் கூடிய பாடப்பரப்பை கற்பிக்கும் வகையில், புதுப்புது யுக்திகளை உபாயங்களைக் கையாண்டு ஆசிரியர்களைக் கற்பித்தலில் ஈடுபட வைத்தலே இத்துரித திட்டத்தின் நோக்கமாகும். அதற்காக மாணவர் மீது சுமை யேற்றக் கூடாதென்றும் கூறப்பட்டுள்ளது. இம்முறைகளின் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் முக்கியமான ஒரு தடங்கலாக மாணவனின் உளநிலை சீராக, அதாவது தயாராக உள்ளதா என்பதை கட்டாயம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மாணவன் தயாரில்லையெனின் கற்பிப்பதில் பிரயோசனமில்லை. இன்றும் சிலஅதிபர்கள் காலை 6.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை மாணவர்களுக்கு மேலதிக சுமையேற்றுவது தொடர்பாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருக்கிறது.

ஆசிரியர்கள் கற்ற உளவியல் ,கல்வியியல் தத்துவங்கள் வகுப்பறையில் பிரயோகிப்பதற்கா அல்லது அந்தகற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கான பரீட்சையில் எழுதுவதற்கா என்ற கேள்வி இங்கே எழுகிறது.

எனவே மாணவர்களின் உளநிலை, உடல்நிலை தாங்குதிறனைக் கருத்திற் கொண்டே எத்தகைய வகுப்புகளையும் நடத்த வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. அதற்கு மாறாக எடுக்கும் எத்தகைய முயற்சியும் தோல்வியைத் தருமென்பதனை நாமனைவரும் உணர வேண்டும்.

**இழந்த கல்வி ஏற்படுவதற்கான காரணங்கள்:**

பாடசாலைக்கு வருகை தர முடியாமை, விபத்து அல்லது பாரியநோயால் சுகவீன விடுமுறை அல்லது அனர்த்தம் மற்றும் வன்முறை போன்றவற்றால் பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டமை காரணமாக கல்வி இழக்கப்படுகிறது. குறிப்பாக நாம் இன்று கொரோனா தீநுண்மியினால் கல்வியை இழந்திருக்கின்றோம்.




வி.ரி.சகாதேவராஜா (ADE)
கல்வியியலாளர்

அவ்வாறு அந்த காலப் பகுதியில் கற்காமல் தவற விட்ட பாடப்பரப்புக்களை பொருத்தமான உத்திகளை பயன்படுத்தி பூர்த்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பணியாக உள்ளது.

வலயக்கல்வி மேற்பார்வைக் குழுவினர் , தமது வழமையான மேற்பார்வைத் திட்டத்தை டிசம்பர் வரை தளர்த்தி ஆசிரியர்களுடன் இணைந்து வகுப்பறையில் கற்றல் செயற்பாட்டை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வர்.

மாணவர்களின் உளநிலை, உடல்நிலை தாங்குதிறனைக் கருத்திற் கொண்டே எத்தகைய வகுப்புகளையும் நடத்த வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. கொரோனா காலப் பகுதியில் கற்காமல் தவற விட்ட பாடப்பரப்புகளை பொருத்தமான உத்திகளை பயன்படுத்தி பூர்த்தி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் பணியாக உள்ளது.

இம்முறைகளின் மூலம் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதில் முக்கியமான ஒரு தடங்கலாக மாணவனின் உளநிலை சீராக அதாவது தயாராக உள்ளதா என்பதை கட்டாயம் கவனத்திற் கொள்ள வேண்டும். அந்த வகையில் வகுப்பறை மட்டத்தில் நாளின் ஆரம்பத்திலோ அல்லது ஒரு பாடவேளையின் ஆரம்பத்திலோ மேற்கொள்ள முடியுமான மனக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சில வருமாறு:

உடலை தளர்வுறச் செய்யும் பயிற்சி, எளிய யோகா, அழகான இடங்களை சித்திரமாக கற்பனை செய்தல், இசையை இரசித்தல், பாடலை இரசித்தல், புனைகதைகள், புதிய கண்டுபிடிப்புக்களுக்காக சிந்தித்தல்.

எது எப்படியிருப்பினும் எமது நாட்டைப் பொறுத்தவரை வகுப்பறையில் 'சோக் அன்ற் ரோக்' முறைமையில் கற்பித்தாலொழிய அச்செயற்பாடு பூரணமடைய மாட்டாது என்ற நம்பிக்கை இன்னுமுள்ளது.

எனவே இழந்த கல்வியை மாணவருக்கு பாதிப்பில்லாத சுமையில்லாத வகையில் கற்பதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்களின் வகிபாகம் என்பது மிக அத்தியாவசியமாகும் என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

# கப்பலில் மூண்ட தீ கட்டுப்பாட்டுக்குள்

# பேராபத்தை தாண்டியது சமுத்திரம்!

**இலங்கையின் தென்கிழக்கு கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த மசகு எண்ணெய்க் கப்பலொன்றில் ஏற்பட்டிருந்த தீ அனர்த்தம் கடந்த புதன்கிழமையளவில் (09 ஆம் திகதி) முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.**

செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி காலையில் ஏற்பட்ட இத் தீவிபத்து இலங்கை கடற்படையினர், விமானப்படையினர், துறைமுக அதிகார சபையினர் மற்றும் இந்திய கடற்படை மற்றும் கரையோர பாதுகாப்புப் பிரிவினரின் ஒருங்கிணைந்த தொடரான அர்ப்பணிப்பு மிக்க முயற்சியின் ஊடாக ஏழு நாட்களில் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தீவிபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கை, இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாடுகள் அடங்கலாக உலக நாடுகளும் இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தத் தொடங்கின. ஏனெனில் கப்பலில் இருக்கும் மசகு எண்ணெய் மற்றும் டீசலின் அளவு, தீவிபத்தினால் கப்பலின் களஞ்சியங்களில் கசிவு அல்லது வெடிப்பு ஏற்பட்டால் சமுத்திர சுற்றுசூழலும் கடல் வாழ் உயிரினங்களும் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் அடங்கலான பாதிப்புக்கள் என்பனவே இதற்கு அடிப்படைக் காரணங்களாகும்.

அர்ப்பணிப்பு மிக்க தொடர் முயற்சியின் பயனாக தீ முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. இது ஆறுதலான செய்தியாக விளங்கிய போதிலும், 'கப்பலிலிருந்து எண்ணெய் கசிந்து பரவியுள்ளதாகவும் அது டீசல் அற்ற செறிவுமிக்க எண்ணெய்' என்றும் 'இது சில இடங்களில் இரண்டு சென்றிமீற்றர்களை விடவும் தடிப்பு மிக்க படையாகக் காணப்படுவதாகவும் சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பொதுமுகாமையாளர் கலாநிதி ட்ர்னி பிரதீப் தெரிவித்திருக்கின்றார்.

இந்த எண்ணெய் வகையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பரிசோதனைகள் இடம்பெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ள போதிலும், இவ்விடயத்தில் விஷேட கவனம் செலுத்தியுள்ள சட்ட மாஅதிபர் டப்புளா டி லிவேரா, தீ விபத்து ஏற்பட்ட கப்பலுக்கு அருகிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்திலும் பெற்ற நீரின் மாதிரிகளைப் பரிசோனைக்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு சமுத்திர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இவ்வாறு பெரும் அவதானத்திற்கு உள்ளாகியுள்ள இந்த மசகு எண்ணெய்க் கப்பல் குவைத் நாட்டின் மீனா அல் அஹ்மதி துறைமுகத்திலிருந்து 270,000 மெற்றிக்தொன் மசகு எண்ணெய் மற்றும் 1,700 மெற்றிக் தொன் டீசலுடன் இந்தியாவின் பரதீப் துறைமுகத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், இலங்கையின் தென்கிழக்கிலுள்ள சங்கமண்கண்டியிலிருந்து சுமார் 38 கடல் மைல் தூரத்தில் 3 ஆம் திகதி காலையில் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. இக்கப்பலின் கொதிகலனொன்று திடீரென வெடித்ததில் தீவிபத்து ஏற்பட்டதாகவும் இது 20 வருடங்கள் பழைமையான கப்பல் என்பதும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கிறீஸ் நாட்டவருக்குச் சொந்தமான இக்கப்பல் 'எம்.ரி நியூ டயமண்ட்' என்ற பெயருடன் பனாமா கொடியைத் தாங்கிய வண்ணம் பயணித்துக் கொண்டிருந்த போதே இவ்விபத்து ஏற்பட்டது. கடந்த ஜுலை மாதம் மொறீஷியஸ் தீவுக்கு அருகில் பவளப்பாறையில் மோதுண்டு விபத்துக்குள்ளான ஜப்பான் நாட்டின் எம்.வி. வகசியோ என்ற எண்ணெய்க் கப்பலை விடவும் இது மிக விசாலமான கப்பலாகும்.

ஜப்பான் கப்பலிலிருந்து சுமார் 1400 தொன் மசகு எண்ணெய் தான் இந்து சமுத்திரத்தில் கலந்தது. ஆனால் இந்த நியூ டயமண்ட் கப்பல் கொண்டிருக்கும் மசகு எண்ணெயின் அளவு மிக அதிகமாகும். அதனால் இக்கப்பலில் ஏற்பட்டுள்ள தீவிபத்தினால் கப்பலில் வெடிப்பு அல்லது கசிவு ஏற்பட்டால் இந்து சமுத்திரத்திலும் உலகிலும் ஏற்படும் சுற்றுச்சூழல் பேரழிவு மதிப்பிட முடியாததாக இருக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சட்டிக் காட்டியுள்ளனர்.





என்றாலும் இவ்விபத்து ஏற்பட்டதும் உடனடியாக செயற்பட்ட இலங்கை கடற்படையினரும் விமானப் படையினரும் கப்பலின் தீயை அணைக்கும் முயற்சியை ஆரம்பித்ததோடு கப்பலின் 20 சிப்பாய்களை பாதுகாப்பாக மீட்டெடுத்தனர். அவர்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டதோடு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதோடு காலியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுமுள்ளனர். ஆனால் இக்கொதிகலன் வெடித்த போது பிலிப்பைன்ஸ் நாட்டு கப்பல் சிப்பாயொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் இத் தீஅனர்த்தம் ஏற்பட்டதை அறிந்ததும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 'கிழக்கு கடற்பரப்பில் தீ விபத்துக்கு உள்ளாகியுள்ள கப்பலால் இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்நிலையில் கடற்படையினரும் விமானப் படையினரும் அர்ப்பணிப்புமிக்க முயற்சிகளை மேற்கொண்டு 80 மணித்தியாலயங்களில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன தெரிவித்தார்.

இப்பணியில் இலங்கை கடற்படை மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் கப்பல்கள், படகுகள் உட்பட 9 கப்பல்களும், 05 அதிவேக படகுகளும், இலங்கை விமானப்படை விமானங்கள், ஹெலிகொப்டர்கள், இந்திய கரையோர காவல் படையினரின் கப்பல்கள், இலங்கை துறைமுக அதிகார சபையின் படகுகள் என்பன இணைந்து செயற்பட்டு தீயை அணைத்தன.

## இலங்கையின் கடல் உயிரினங்களுக்கு பாதிப்பு ஏற்படுமா?

இதனையிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்து டுவிட்டர் மூலம் விஷேட செய்தியொன்றை சனியன்று விடுத்தார். அச்செய்தியில் எண்ணெய்க் கப்பலில் தீ பரவியுள்ள நிலையில் உயிரைத் துச்சமென மதித்து எரியும் எண்ணெய்க் கப்பலுக்கு அருகிலேயே சென்று தீயை அணைக்க அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்ட இலங்கை கடற்படை, விமானப்படை மற்றும் இந்திய பாதுகாப்பு பிரிவினருக்கும் நன்றி தெரிவித்து கொண்டார்.

இக்கப்பலில் ஏற்பட்ட தீவிபத்து முதலில் மூன்று நாட்களில் வெற்றிகரமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

'ஆனாலும் கப்பலின் தீ அணைந்துள்ள போதிலும் கப்பலில் காணப்படும் இரும்பினாலான பொருட்கள் அதிக வெப்பத்துடன் காணப்படுவதோடு கடற்பரப்பில் காற்றின் வேகமும் அதிகரித்து காணப்படுவதையும் இவற்றின் விளைவாக மீண்டும் தீ ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதையும் கடற்படையினர் குறிப்பிடத் தவறவில்லை.



## கடலின் மேற்பரப்பில் நீண்ட தூரம் மிதக்கும் எண்ணெய் படலம் ஏற்படுத்தும் சந்தேகம்

அதனால் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான வை 12 மற்றும் பெல் 212 ஆகிய விமானங்களின் உதவியோடு கப்பலில் அதிக வெப்பத்துடன் காணப்படும் இரும்பு பொருட்களின் வெப்பத்தைத் தணிக்கவென 2000 கிலோ இரசாயன பதார்த்தம் விசிறப்பட்டதாக விமானப்படை பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் அதேதினம் மாலையாகும் போது மீண்டும் தீ ஏற்பட்டதோடு அதனை அணைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இதன் பயனாக புதன்கிழமை அதிகாலையாகும் போது இத்தீ முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இந்நடவடிக்கைகளில் இலங்கை, இந்திய கடற்படைகள், கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர், இலங்கை துறைமுக அதிகார சபையினர் இலங்கை விமானப்படை விமானங்கள் என்பன ஒருங்கிணைந்து செயற்பட்டன. இப்பணியில் அதிவேகப் படகுகள் அடங்கலாக 19 கப்பல்கள் ஈடுபட்டதோடு கப்பலில் காணப்படும் உஷ்ணத்தைத் தணிக்கவென 4500 கிலோ இரசாயனப் பதாரத்தமும் விமானங்கள் மூலம் விசிறப்பட்டுள்ளன. தற்போது குறித்த எண்ணெய்க் கப்பல் டக் படகுகளின் உதவியோடு சுமார் 50 கடல் மைல்கள் தூரத்திற்கு ஆழ்கடலுக்கு இழுத்து செல்லப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, இத்தீவிபத்தை ஆராய்வதற்காக நெதர்லாந்து மற்றும் ஜேர்மன் நாடுகளைச் சேர்ந்த 11 பேர் கொண்ட நிபுணர்கள் குழுவொன்று திங்களன்று இலங்கை வந்தடைந்ததோடு, அவர்கள் கல்முனை ஊடாக தீவிபத்து ஏற்பட்ட கப்பல் காணப்படும் இடத்திற்கு யுத்தக்கப்பல் மூலம் சென்றடைந்தனர். அவர்களில் கப்பலின் உரிமையாளரும் இடம்பெற்றுள்ளார்.

இந்த நிலையில் கடற்படைத் தளபதி, 'கப்பலின் இரும்பு பொருட்கள் அதிக வெப்பத்துடன் காணப்படுவதோடு கடலின் காற்றும் அதிகரித்துள்ளதால் அடுத்துவரும் ஏழு நாட்களுக்கு மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இத்தீவிபத்து காரணமாக கப்பல் வெடித்தால் அல்லது கசிவு ஏற்பட்டால் அதிலிருக்கும் மசகு எண்ணெய் கடலில் கலக்கும் அபாயமுள்ளது. அவ்வாறு மசகு எண்ணெய் கடலில் கலக்குமாயின் அவற்றை மீளப் பெறுவது சாத்தியமற்ற காரியமாக அமைவதோடு சமுத்திர சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகுமென கப்பலில் தீவிபத்து ஏற்பட்ட உடனேயே சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர்.

'கப்பலில் கசிவு அல்லது வெடிப்பு ஏற்பட்டால் பிராந்தியத்தில் மாத்திரமல்லாமல் முழு உலக சமுத்திர சுற்றுச்சூழலிலும் பாதிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்ட இலங்கை கடல் சுற்றுச்சூழல் அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷினி லஹந்தபுர, 'ஹம்பாந்தோட்டை, கிரிந்த முதல் கிழக்கு கடற்பிராந்தியத்தில் ஏற்படும் பாதிப்பு மிக மோசமாக இருக்கும்.

**(20ஆம் பக்கம் பார்க்க)**



**மர்லின் மரிக்கார்**

# சீனாவை மிரட்டும் தோரணையில் இந்தியா களமிறக்கிய விமானம்

**இந்திய_ சீன எல்லையில் உள்ள லடாக்கில் ரபேல் விமானங்களை பாதுகாப்பில் ஈடுபடுத்தியுள்ளது இந்தியா. பெரும் எதிர்பார்ப்பிற்கு இடையே இந்தியாவின் விமானப் படையில் ரபேல் விமானங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பிரான்ஸ் நாட்டிடம் இருந்து ரபேல் விமானங்கள் இந்தியா வந்த நிலையில் தற்போது கூடுதல் விமானங்கள் இந்தியா வந்துள்ளன.**

கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி 36 ரபேல் விமானங்கள் இந்தியா வர வேண்டும். மீதி விமானங்கள் இந்தியாவில் ரிலையன்ஸ் டிபன்ஸ் நிறுவனம் மூலம் பிரான்சின் டஸால்ட் நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கப்படும். இந்தியாவிற்கு ஏற்கனவே கடந்த ஜூன் மாதம் ஒரு ரபேல் விமானம் வந்தது. அதன் பின் 5 ரபேல் விமானங்கள் ஜூலை 29ம் திகதி வந்தன. இந்த ரபேல் விமானங்கள் இந்திய விமானப் படையுடன் இணைக்கப்பட்டன.

இதற்கான இணைப்பு விழா திருவிழா போல நடந்தது. ஹரியானாவில் இருக்கும் அம்பாலா படைத்தளத்தில் இந்த விமானங்கள் இந்திய விமானப்படையுடன் இணைக்கப்பட்டன. இந்த நிலையில் நேற்று கூடுதலாக 5 ரபேல் விமானங்கள் இந்திய இராணுவத்துடன் இணைக்கப்பட்டன. இதற்கான விழா அம்பாலாவில் நடந்தது. ரபேல் விமானங்களை இந்திய இராணுவத்துடன் இணைக்கும் விழாவிற்கு பிரான்ஸ் பாதுகாப்புத் துறை அமைச்சர் புளோரன்ஸ் பார்டி மற்றும் இந்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் வருகை தந்தனர்.மிகப் பெரிய அளவில் இதற்காக அம்பாலாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. இந்திய விமானப்படையில் இணைக்கப்பட்ட ரபேல் விமானங்களுக்கு அனைத்து மத சம்பிரதாயப்படி பூஜை செய்யப்பட்டது.



அதன் பின் இந்த ரபேல் விமானங்கள் வானத்தில் பறந்து அணிவகுப்பு நடத்தின. 5 ரபேல் விமானங்கள் ஒன்றன் பின் ஒன்றாக பறந்து அணிவகுப்பு நடத்தின. அதன் பின் ரபேல் விமானங்களைச் சுற்றி இந்தியாவின் சுகோய் 30 மற்றும் ஜாகுவார் விமானங்கள் பறந்தன. 3 சுகோய் விமானங்களும் 3 ஜாகுவார் விமானங்களும் அம்பாலா படைத்தளத்தில் இருந்து வானத்தில் பறந்தன.

இதில் ஜாகுவார், ரபேல் இரண்டும் பிரான்ஸ் நாட்டு தயாரிப்பு, சுகோய் ரஷ்யாவின் தயாரிப்பு. இந்த விமானங்கள் அம்பு போல வானத்தில் தோற்றத்தை ஏற்படுத்தி அணிவகுப்பை நடத்தின. நடுவில் ரபேல் விமானங்கள் செல்ல இரண்டு பக்கமும் சுகோய் மற்றும் ஜாகுவார் விமானங்கள் பறந்து அம்பு போன்ற வடிவத்தை ஏற்படுத்தின.

லடாக்கில் போர் வந்தால் அது கண்டிப்பாக விமானப்படை சார்ந்த போராகவே இருக்கும். இராணுவம், கடற்படையை விட விமானப் படையே போரின் முடிவை மாற்றும் திறன் கொண்டதாக இருக்கும். இதனால் சீனாவிற்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் இந்தியா இந்த விமானப்படை கண்காட்சியை நடத்தி உள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள். சீனாவிற்கு இந்தியாவின் விமானப்படை வலிமையை காட்டும் வகையில் இந்த நிகழ்ச்சியை இந்தியா நடத்தி உள்ளது.

சீனாவிடம் சுகோய் விமானங்கள் மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 5ம் தலைமுறை விமானங்கள் நிறைய இருக்கின்றன. அதேபோல் சீனாவிடம் ரபேலுக்கு பதில் ஜெ 20 போன்ற அதே திறன் கொண்ட விமானங்கள் உள்ளன.

இதனால் சீனாவின் ஜெ 20 வகை விமானங்களுக்கு பதிலடி கொடுக்க எங்களிடமும் விமானம் உள்ளது என்பதை புரிய வைக்க இந்தியா ரபேல் விமானங்களை களமிறக்கி உள்ளது.

# உலப்பன, மாவில தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கிய காணிப்பிரச்சினைக்கு தீர்வு





உலப்பன, மாவில தோட்ட தொழிலாளர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிவந்த காணிப்பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

இது தொடர்பில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் தோட்ட தொழிலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்தே தீர்வு எட்டப்பட்டுள்ளது.

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்கு (ஜனவசம) சொந்தமான கம்பளை, உலப்பன மாவில தோட்டத்தில் தொழிலாளர்கள் காலம் காலமாக தொழில் செய்து வருகிறார்கள். ஆனால் இவர்களுக்கு வீடமைப்பதற்கு கூட ஒரு காணியை தோட்ட நிர்வாகம் வழங்கவில்லை. எனினும் இதே தோட்டத்தில் சேவை புரியும் சேவையாளர்களுக்கு நிர்வாகம் தோட்ட காணியை திட்டமிட்டு பிரித்து கொடுக்க முயற்சி எடுத்தது.

இதனால் தோட்ட நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. மாவில தோட்டத்தில் காலம் காலமாக உழைத்து வரும் அவர்களுக்கு ஒரு அங்குல காணியேனும் இதுவரைக்கும் நிர்வாகம் வழங்கவில்லை. ஆனால் ஜனவசம அங்குள்ள சேவையாளர்களுக்கு தான்தோன்றிதனமாக காணி வழங்க எடுத்த முயற்சியை தொழிலாளர்கள் வன்மையாக கண்டித்தனர்.

இந்நிலையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து இதுதொடர்பில் பெருந்தோட்ட துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன கவனத்திற்கு கொண்டுச்செல்லப்பட்டது. இதனையடுத்து தோட்ட சேவையாளர்களுக்கு வழங்கவிருந்த காணி அமைச்சரின் தலையீட்டால் உடனடியாக இடை நிறுத்தப்பட்டது.

# பொலிஸ் உத்தியோஸ்தர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை





**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் பொலிஸ் வலயத்திற்குட்பட்ட பொலிஸ் நிலையங்களிலுள்ள பொலிஸ் உத்தியோஸ்தர்களுக்கு பி.சி ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நுவரெலியா மாவட்ட சுகாதார பரிசோதகர்களினாலே நேற்று ஹற்றன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது, கடமைக்கு இடையூறு இல்லாத வகையில் ஹற்றன் பொலிஸ் வலயத்திற்குட்பட்ட நோர்டன் பிரிட்ஜ், மஸ்கெலியா, நல்லத்தண்ணி நோர்வூட், பொகவந்தலாவ, வட்டவளை, கினிகத்தேனை, ஹற்றன், ஆகிய பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

# மலையகத்தின் பேரம் பேசும் சக்தியை சரியாக வழி நடத்திய பெருமை இ.தொ.காவையே சாரும்



மலையக சமூகத்தின் பேரம் பேசும் சக்தியை சரியாக வழி நடத்திய பெருமை இ.தொ.கா.வுக்கு மட்டுமே உண்டு என இ.தொ.கா. உதவிச் செயலாளரும் ,சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாளருமான பரத் அருள்சாமி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது 81 வருடங்களில் மலையக மக்களின் சமூக அரசியல் பொருளாதார மாற்றத்திற்காகவும் , ஏற்றத்திற்காகவும் தீர்க்க தரிசனமாக முடிவெடுத்து இன்று மலையக சமூகத்தின் பேரம் பேசும் சக்தியாகவுள்ளது. இதனை சரியாக வழி நடத்தியபெருமை இலங்கை தொழிலாளர் காங்கிஸூக்கு உண்டு.

இ.தொ.கா. இன்று மூன்று தலைமுறைகளை தாண்டி 4ஆவது தலைமுறையில் கால்பதித்துள்ளது. இத் தலைமுறையானது இளைஞர்கள் கையில் பாரிய பொறுப்பை சுமந்திருக்கின்ற ஒரு வரலாற்றை நாம் பார்க்கின்றோம்.

அதேநேரத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிற்சங்கத்தில் பணியாற்றுபவர்களுடைய அறிவை மேலும் விருத்தி செய்வதற்கும் அவர்கள் தாமாகவே தத்தமது கோரிக்கைகள், தேவைகள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தம்மை தயார் செய்துகொள்ளும் வண்ணம் பல்வேறு பயிற்சி பட்டறைகளை நடாத்தப் போவதாகவும் இ.தொ.கா. திட்டம் வகுத்துள்ளது.

இதன் படி, தலைமைத்துவ பயிற்சி, அடிப்படைச் சட்டங்கள்; வேலைத்தள பாதுகாப்பு தோட்டத் தலைவர் தலைவிகளுக்கான பயிற்சி பட்டறை சர்வதேச கற்கை நெறிகளுக்கான புலமைபரிசில்கள் வழங்கல் போன்றன அமையவிருப்பதாக பரத் அருள்சாமி மேலும் தெரிவித்தார்.

# ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் நிலம் தாழிறக்கம்

## வாகன சாரதிகளுக்கு எச்சரிக்கை

**ஹற்றன் விசேட நிருபர்**



மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ந்து மழைபெய்துவருவதால் ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் குயில்வத்தை பகுதியில் மீண்டும் நிலம் தாழிறக்கம் ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் குயில்வத்தை 66 மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள வீதியின் ஒரு பகுதியிலேயே தாழிறக்கம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறு நிலம் தாழிறக்கம் ஏற்பட்டது. இதனையடுத்து இதற்கு தற்காலிக தீர்வொன்று முன்வைக்கப்பட்டது. எனினும் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மீண்டும் நிலம் தாழிறங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பாரிய அளவில் வெடிப்புக்கள் தோன்றியுள்ளன.

எனவே குறித்த வீதியில் பயணம் செய்யும் பாரவூர்திகள் இவ்விடத்தில் விபத்துக்குள்ளாவதற்கான அபாயம் நிலவுவதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்தில் சுமார் ஒன்றரை அடிவரை நிலம் தாழிறக்கத்திற்கு உட்பட்டுள்ளதுடன், ஒருவழி பாதையிலும் பாரிய வெடிப்புக்கள் காணப்படுகின்றன.

எனவே குறித்த இடத்தில் விபத்தொன்று ஏற்படுவதற்கு முன்னர் உரிய அதிகாரிகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





பிபிலை இலுகாபத்தனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருஷாபிஷேகத் திருவிழா நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

சப்ரகமுவ மாகாணத்துக்கு

# மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண்சரிவு அபாயம் நிலவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களின் கட்டிடவியல் ஆய்வு நிலையங்கள் இதுதொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளன.

எனவே, இப்பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு ஏற்படலாம் என அறிவிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் உள்ள மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவை அதிகாரிகள் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எஹலியகொடை, எலபாத கிரியெல்ல, அயகம ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதில் எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவுக்கு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை கேகாலை மாவட்டக் கேகாலை தெஹியோவிட்ட, யட்டியாந்தோட்டை ஆகிய செயலகப் பிரிவுகளில் மண்சரிவு ஏற்படலாம் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்கள் ஏற்கனவே மண்சரிவு ஏற்படலாம் என அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகும்.

# மலையகத்தில் கடும் மழை; மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**ஹற்றன் விசேட நிருபர்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினை தொடர்ந்து மத்திய மலைநாட்டில் கனத்த மழை பெய்து வருகின்றது.

நீரேந்தும் பிரதேசங்களில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியதன் காரணமாக காசல் ரீ, கெனியோன், லக்ஷபான, நவலக்ஷபான, விமலசுரேந்திர, மவுசாகலை மற்றும் மேல்கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மிகவேகமாக அதிகரித்துள்ளது.

எனவே எவ்வேளையிலும் நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்படலாம் என்பதனால் நீர்த்தேக்கத்திற்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு நீர்த்தேக்க மின்சாரசபை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சியாக நேற்று மாலை முதல் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர் மழையால் நுவரெலியா ஹற்றன் மற்றும் ஹற்றன் - கொழும்பு பிரதான வீதிகளில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன. இதனால் இவ் வீதிகளை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதான வாகனங்களை செலுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அத்தோடு அதிக மழை காரணமாக பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆகவே மலைகளுக்கும் மண்திட்டுக்களுக்கும் சமீபமாக வாழும் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும், தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் மரக்கறி மற்றும் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளன.

# மூன்று மாடி கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞன் பலி

**தலவாக்கலை குறூப் நிருபர்**



கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் மூன்று மாடி கட்டட நிர்மாணத் தளத்தில் வேலை செய்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் 09.09.2020 புதன்கிழமை தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை, கிறேட் வெஸ்டன் மலைத் தோட்டத்தைச் சேர்ந்த தனபால் ஜீவா அபிலேஷ் குமார் வயது (17) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தொழில் நிமித்தம் வெள்ளவத்தை பகுதியில் மூன்று மாடி கட்டட நிர்மாண தளத்தில் வேலை செய்துக்கொண்டிருக்கும் போது இளைஞன் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம் தற்போது கொழும்பு களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

# ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்து போக்குவரத்து தடை

**கினிகத்தேனை, ஹற்றன் சுழற்சி நிருபர்கள்**

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் – கொழும்பு பிரதான வீதியில் கரோலினா பகுதியில் நேற்று அதிகாலை பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் வீதிபோக்குவரத்து முற்றாக தடைபட்டது.

இதனால் ஹற்றன் – கொழும்பு, மற்றும் ஹற்றன் – கண்டி ஊடான வீதிபோக்குவரத்து முற்றாக தடைபட்டது. இதனையடுத்து வட்டவளை பொலிஸார் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்த மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இதனையடுத்து போக்குவரத்து வழமைக்கு திரும்பியது.

மரம் முறிந்து வீழ்ந்ததால் சுமார் 30 நிமிடத்திற்கும் மேல், போக்குவரத்து தடைபட்டிருந்தது. இதனால் கொழும்பு, ஹற்றன், கண்டி வைத்தியசாலைக்களுக்கு சென்ற நோயாளர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

அத்தோடு மரம் முறிந்து வீழ்ந்ததன் காரணமாக தொலைபேசி கம்பங்கள் மற்றும் மின்சார கம்பங்களும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடதக்கது.



# பொற்பணி செம்மல் விருது வழங்கும் நிகழ்வு

தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் பொற்பணி செம்மல் விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி காலை ஊடகவியலாளர் கே. ஈஸ்வரலிங்கத்தின் தலைமையில் கொழும்பு கலைமகள் வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் , விவேகானந்தா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி சந்திரிக்கா, ரோயல் கல்லூரியின் பிரதி அதிபர் நந்தினி செல்லதுரை, கலைமகள் வித்தியாலய உப அதிபர் திருமதி தேவயோகம், ஆ. சுகேந்திரன், மட்டக்குளி கிராம சேவையாளர் ஷாந்தினி மோஹன், ஜிந்துப்பிட்டி கிராம சேவையாளர் H.A.A.P..பெரேரா, பான் ஏசியா வங்கி முகாமையாளர் தினேஷ் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளை மன்றத் தலைவர் என். ராஜா, பொதுச் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர் கட்டணம், வீட்டு தவணைக் கட்டணம் செலுத்த கால அவகாசம் வழங்க வேண்டும்

## பிரதமரிடம் சிறிசரஉயன மாடிவாசிகள் கோரிக்கை

கொழும்பு, சஹஸ்புர, சிறிசரஉயன மாடி வீடுகளில் வசிப்போர் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய மாதாந்த தவணைப் பணம் மற்றும் நீர் கட்டணத்தை ஏழு நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இல்லாவிடின் தண்ணீர் விநியோகத்தை துண்டித்து விட திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதிகளிலுள்ள தொடர் மாடி வீடுகளில் வசிப்போர் பெரும் இக்கட்டான நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். கடந்த சில மாதங்களாக கொரனாவால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்ட இருந்ததால் இவர்களில் அநேகமானோருக்கு தமது தவணைப் பணத்தையும் தண்ணீர் கட்டணத்தையும் உரிய நேரத்தில் செலுத்த முடியாது போனதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

மின்சாரம் போன்று ஏனைய கட்டணங்களை செலுத்த கால அவகாசம் அளித்தது போல் இதற்கும் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடமும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.


09.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 654,728

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 27,664,470.00

ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 22

www.nlb.lk

NLB NATIONAL LOTTERIES

உத்தியோகபூர்வ முடிவுகள்

செவன

உங்களுக்கு வீடு – கைகளில் காசு

திகதி 2020/09/09

சீட்டிழுப்பு இலக்கம் 294

ஆங்கில எழுத்து C

வெல்லப்பட்ட இலக்கங்கள் 29 32 48 69

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுகள் | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1ம் பரிசு | 4 இலக்கங்களும் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000/- | வீதம் | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100,000/- | வீதம் | 02 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000/- | வீதம் | 77 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 200/- | வீதம் | 148 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100/- | வீதம் | 3,637 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 50/- | வீதம் | 2,081 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- | வீதம் | 51,507 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாக இருப்பின் | ரூ. 20/- | வீதம் | 7,965 |

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை ரூ. 14,000,000/-

இச் சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,963,790/-

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல.32, தேசமான்ய என்.டப்ளியூ.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. இலங்கை

தொ.பே: 011 460 7000, 011 460 7000, தொ.நகல்: 011 4669416

www.nlb.lk

Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 607

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 09/09/2020

ஆங்கில எழுத்து A சுப்பர் இலக்கம் 26 வெற்றி இலக்கங்கள் 06 12 13 18

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 132 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 321 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8,131 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5,390 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 135,374 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24,498 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.233,934,533.15

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,769,500.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.14,160,979.20

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 5,018,640.00

தேசிய லொத்தர் சபை

சீட்டிழுப்பு இலக்கம் : 4240 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 09-09-2020

வெற்றி எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 2 3 2 1 8 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 2 3 2 1 8 2 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 3 2 1 8 2 | ரூபா. 100,000/- | 09 |
| 3ஆம் பரிசு | 2 1 8 2 | ரூபா. 10,000/- | 100 |
| 4ஆம் பரிசு | 1 8 2 | ரூபா. 1,000/- | 1,020 |
| 5ஆம் பரிசு | 8 2 | ரூபா. 100/- | 10,231 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா. 20/- | 100,931 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 2 3 2 1 8 | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 2 3 2 1 | ரூபா. 1,000/- | 109 |
| 9ஆம் பரிசு | 2 3 2 | ரூபா. 100/- | 1,015 |
| 10ஆம் பரிசு | 2 3 | ரூபா. 50/- | 10,106 |
| 11ஆம் பரிசு | Z | ரூபா. 20/- | 40,511 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,587,740.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.34,206,789.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01.

தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.

www.nlb.lk

கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 2535 சீட்டிழுப்பு திகதி 09.09.2020

ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 53 57 61 79

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 174 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 383 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9691 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6349 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 158719 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 28862 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 204,182

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,105,680.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,309,912.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01

தொலைபேசி : 0114 607 000, 0112 324 324

Fax: 0114 663 416 Web: www.nlb.lk

JATHIKA SAMPATHA

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1053

திகதி 2020.09.09

ஆங்கில எழுத்து B

வெற்றி இலக்கங்கள் 2 5 1 0 1 4

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 01 பரிசு | 2 5 1 0 1 4 | ரூ. 2,000,000.00 | பரிசு 1 |
| 02 பரிசு | 5 1 0 1 4 | ரூ. 100,000.00 | பரிசுகள் 2 |
| 03 பரிசு | 1 0 1 4 | ரூ. 10,000.00 | பரிசுகள் 28 |
| 04 பரிசு | 0 1 4 | ரூ. 1,000.00 | பரிசுகள் 290 |
| 05 பரிசு | 1 4 | ரூ. 50.00 | பரிசுகள் 2,883 |
| 06 பரிசு | 4 | ரூ. 20.00 | பரிசுகள் 27,838 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 07 பரிசு | 2 5 1 0 1 | ரூ. 10,000.00 | பரிசுகள் 4 |
| 08 பரிசு | 2 5 1 0 | ரூ. 1,000.00 | பரிசுகள் 22 |
| 09 பரிசு | 2 5 1 | ரூ. 100.00 | பரிசுகள் 288 |
| 10 பரிசு | 2 5 | ரூ. 50.00 | பரிசுகள் 2,943 |
| 11 பரிசு | B | ரூ. 20.00 | பரிசுகள் 12,818 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | பரிசுகள் 117 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 3,988,620.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

32, தேசமான்ய என்.டப்ளியூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01.

தொலைபேசி: 011 4607000, 011 2324324

பக்ஸ்: 011 4669416

Web: www.nlb.lk


# காணி அமைச்சு

## காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்

**செழிப்பின் பார்வை அரசாங்க கொள்கை அறிக்கையின்படி, முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்தல், உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் உள்ளூர் உணவு பயிர் உற்பத்திக்கு அரசாங்க நிலங்களை உகந்தமுறையில் நிர்வகித்தல் ஆகியவை அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும். அந்த நோக்கத்திற்கான முதல்படியாக, இலங்கை பிரஜைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட காணி உரிமையினை உறுதிப்படுத்துவதற்காக சட்டரீதியான ஆவணங்கள் இல்லாமையினால் அரசகாணியினை அபிவிருத்திசெய்துள்ள மக்களுக்கு துரிதமாகவும், பிரசித்தமான மற்றும் சட்டபூர்வமான ஆவணங்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக, அரசாங்க நிலங்களை முறைசாரா முறையில் ஆக்கிரமித்துள்ள நபர்களை முறையாக அடையாளம் காணவும், அவர்களில் தகுதிகளை சரிபார்த்து, சட்டபூர்வமான ஆவணங்களை வழங்கும் நோக்கத்துடன் இந்தவேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.**

### ஆவணங்கள் எதுவுமின்றி அரச காணிகளை அபிவிருத்தி செய்து அல்லது குடியிருக்கும் மக்களுக்கு சட்டரீதியான ஆவணம் வழங்குதலை துரிதப்படுத்துதல்

அரச காணியொன்றில் நிரந்தர வீடமைத்து, விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டு அல்லது ஏதேனும் அபிவிருத்தி நடவடிக்கையொன்றினை மேற்கொண்டு உரிமைபாராட்டும் மக்களுக்கு சட்டரீதியான ஆவணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக நாடு முழுவதனையும் உள்ளடக்கும் வகையில் (விசேட அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த) தகுதியானோரை தெரிவுசெய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

தங்களது விண்ணப்பத்தினை பின்வரும் படிவத்திற்கு அமைவாக ஒழுங்குமுறையில் பூரணப்படுத்தி, காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்திற்கு அல்லது கிராம உத்தியோகத்தர்/வெளிக்கள உத்தியோகத்தர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம்**

**2020.09.30 ஆம் திகதி அன்று முடிவடையும்**

அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் பதிவு செய்யப்படுவதுடன் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு 2020.11.01தொடக்கம் 2020.11.21திகதிக்கு இடையில் பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்படும் திகதியில் காணிக்கச்சேரி நடாத்தப்படும்.

**ஆர்.எம்.சி.எம்.ஹேரத்**
**காணி ஆணையாளர் நாயகம்**
**காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்**
**2020.09.11**

### மாதிரி விண்ணப்பப்படிவம்

**சட்ட ரீதியான ஆவணங்கள் இல்லாது அரச காணியை அபிவிருத்தி செய்துள்ள நபர்களுக்கு சட்ட ரீதியான ஆவணங்கள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவம்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் 2020.09.30ஆம் திகதிக்கு முன்னர் கிராமசேவையாளர்/ வெளிக்கள உத்தியோகத்தரிடம் கையளிக்கவும்)

பிரதேச செயலாளர் பிரிவு - ............................................ கிராம அலுவலர் பிரிவு - ............................................

**01. தனிப்பட்ட தகவல்கள்**

1.1. விண்ணப்பதாரியின் பெயர் :- ............................................
1.2. விலாசம் :- ............................................
1.3. பிறந்த திகதி -: ............................................
1.4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
1.5. திருமணமானவரா/திருமணமாகாதவரா :- ............................................
1.6. திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை :- ............................................
திருமணமான பிள்ளைகளின் எண்ணிக்கை :-...................... திருமணமாகாத பிள்ளைகளின் எண்ணிக்கை :-......................
1.7. விண்ணப்பதாரியின் தொழில் :- ............................................
1.8. குடும்ப உறுப்பினர்களின் தகவல் :- ............................................

| பெயர் | விண்ணப்பதாரியுடனான உறவுமுறை | தொழில் | வருடாந்த வருமானம் | வயது |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

1.9. குடும்ப மாதவருமானம் :- ............................................
(விண்ணப்பதாரி, வாழ்க்கைத்துணை, திருமணமாகாத பிள்ளைகளின் வருமானம் உட்பட)
1.10. தொலைபேசி இலக்கம் :- நிரந்தரம் :-.......................... கைப்பேசி :- ..........................
1.11. மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) :- ............................................

**02. உடமை கொண்டுள்ள காணி தொடர்பான தகவல்கள்**

2.1. காணியின் அளவு
ஹெக்டர்.......................... / ஏக்கர் .......................... றூட்.......................... பேர்ச் ..........................
2.2. உடமை கொண்டுள்ள காலம் :- ............................................
2.3. காணி தேவைப்படும் நோக்கம் :- குடியிருப்பு ☐ வியாபாரம் ☐
விவசாயம் ☐ வேறு: (குறிப்பிடுக) ☐

**03. வேறு காணிகளின் உரிமை தொடர்பாக.**

3.1 மேற்குறிப்பிட்ட காணிகளுக்கு மேலதிகமாக உங்களுக்கு அரசாங்கத்தினால் கிடைக்கப்பெற்ற அல்லது தனியார் காணி ..... எவ்வளவு உள்ளது.

i. அரசகாணி : ஹெக்டர்...................... / ஏக்கர் .......................... றூட்.......................... பேர்ச் ......................
ii தனியார் காணி : ஹெக்டர்...................... / ஏக்கர் .......................... றூட்.......................... பேர்ச் ......................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையும் சரியானதும் என்பதுடன் சிலவேளை இக்காணியினை பெற்றுக்கொள்வதற்காக தகைமையினை பெற்றபின் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையற்றதாக வெளிப்படுமிடத்து அத்தெரிவினை இரத்து செய்வதற்கு இணங்குவதுடன், அவ்வாறு இடம்பெறின் இக்காணித்துண்டினை மீண்டும் அரசுக்கு பாரப்படுத்துவதற்கு இணங்குவதுடன், அதுதொடர்பாக எடுக்கப்படுகின்ற சட்டரீதியான செயற்பாடுகளுக்கு இத்தால் நான் உடன்படுகிறேன்.

.............................................. ..............................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**பகுதி 2**

**(விண்ணப்பதாரியிடம் கையளிப்பதற்காக)**

விண்ணப்பப்படிவ இலக்கம் :- ............................................
விண்ணப்பதாரியின் பெயர் :- ............................................

| கிராமசேவையாளர் பிரிவின் பெயரும் இலக்கமும் | தொடரிலக்கம் |
|---|---|
| | |

விண்ணப்பப்படிவம் ..............................................ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது

..............................................
**(கிராம அலுவலர் / வெளிக்கள உத்தியோகத்தரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை)**

# மீட்கப்படாத அடகுத் தங்க நகைகளை ஏலத்தில் விற்றல்

வ/ப வயம்ப கூட்டுறவு கிராமிய வங்கி சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளான வ/ப சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அம்பகதவில/ வெல்ல/ மயிக்குளம்/ வெலிஹேன/ தினபொல/ ஜயபிம/ முகுனுவட்டவன/ முன்னேஸ்வரம்/ குமாரகட்டுவ/ பங்கதெனிய/ சிலாபம்/ மானுவன்கம

கிளைகளில் 2019.06.30ம் திகதி உட்பட அன்றைய தினம் வரை அடகு வைக்கப்பட்டு, 2020.10.09 வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2020 ஒக்டோபர் 10 சனிக்கிழமை மு.ப. 9.00 மணிமுதல் வ/ப சிலாபம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**கூட்டுறவாளர்,**
**பொது முகாமையாளர்**
**வ/ப சிலாபம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**இல. 41, கொழும்பு வீதி,**
**சிலாபம்.**
**தொ.பே. இல: 032-2222364**

# இலங்கை வங்கி

## ஏல விலை கோரல் அறிவித்தல்

**ஏல விலை கூறலை மூடுவதற்கான திகதியையும், நேரத்தையும் நீடித்தல்**

**கேள்வி இல. P/PROC/2020/144**

2020.08.21 அன்று “தினகரன் பத்திரிகையில்” வெளியிடப்பட்ட இலங்கை வங்கித் தலைமையகத்தில் பழரசச் சாலை மற்றும் பழக் கடை என்பவற்றுக்கான இடத்தினை வாடகைக்கு வழங்குதல் விளம்பரத்திற்கு மேலதிகமாக,

இவ் விலை கூறலை மூடும் திகதி 2020.10.13 1000 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுசெய்து குறித்துக் கொள்ளவும்.

விலைகூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், 2020.10.12ம் திகதி வரை கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

ஏலவிலை கூறல்கள் 2021.01.11 வரை செல்லுபடியாகும்

ஏலவிலை முறிக் காப்பானது 2021.02.08 வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
“இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

# இலங்கை வங்கியின்

## பாவித்த தளபாடங்கள் மற்றும் கருவிகளின் விற்பனை

**மஹரகம, அவிசாவளை வீதியில் உள்ள இலங்கை வங்கியின் மத்திய பயிற்சி மையத்தில்**

## பாவித்த தளபாடங்கள் மற்றும் கருவிகளின் விற்பனை

(உதாரணமாக அலுவலக மேசைகள் / கதிரைகள், ஒலி அமைப்புகள், ஒலி பெருக்கிகள், தலையணைகள், நுளம்பு வலைகள், கட்டில்கள் / மெத்தைகள், இரும்பு / அலுமினியப் பகுதிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், நகலெடுக்கும் இயந்திரங்கள், சுத்திகரிப்பு உபகரணங்கள், அச்சு இயந்திரங்கள் போன்றவற்றை)

விற்பதற்கு பொதுமக்களிடமிருந்து ஏலவிலை கோரல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

**பொருட்களை மேற்கூறிய இடத்தில் 2020 செப்டெம்பர் 11ம் 12ம் 13ம் திகதிகளில் காலை 9.00 முதல் மாலை 4.00 மணிக்கிடையில் பார்வையிடலாம்.**

**ஏலவிலை கூறுபவர்கள் கீழ்க் கண்டவற்றைப் பின்பற்ற வேண்டும்.**

1. விண்ணப்பங்களை அதே இடத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. மீளத் திரும்பப் பெற முடியாத ரூ. 100 ஆனது ஏலவிலை கூற ஆர்வமுடையவர்களிடமிருந்து கட்டணமாக அறவிடப்படும்.
3. விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கமைவாக ஏலவிலை கூறுபவர்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களுக்கு விலைகூற முடியும்.
4. ஏலவிலை கூறலானது ஏலவிலை கூறப்படும் மொத்தப் பணத்தின் 10% மீளப்பெறக் கூடிய பணவைப்புடன் வழங்கப்பட வேண்டும். பண வைப்பானது இலங்கை வங்கித் தலைமையகம், சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி, 14ம் தளம், இலங்கை வங்கி, கொழும்பு 01 எனும் முகவரியில் வைப்பிலிடப்பட வேண்டும்.
5. தெரிவுசெய்யப்பட்ட ஏலவிலை கூறுபவர் குறிப்பிடப்பட்ட முழுக்கட்டணத்தை உடனேயே செலுத்த வேண்டியதுடன் தமது பொருட்களை அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று நாட்களுள் எடுத்துச்செல்ல வேண்டும்.
6. ஏலவிலை கூறலில் கொள்வனவுசெய்யப்பட பொருள் / பொருட்களை ஏலவிலை கூறுபவர் பெற்றுக்கொள்ளாவிட்டால் வைப்பிலிடப்பட்ட பணமானது அவருக்குத் திருப்பி வழங்கப்பட மாட்டாது.
7. ஏலவிலை கூறலில் தெரிவுசெய்யப்படாத கூறுனர்களின் பண வைப்பானது அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

முத்திரையிட்ட விலைகூறல்களை 2020.09.15 ந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு 01, இலங்கை வங்கி மாவத்தை, இல. 01, “BOC சதுக்கம்”, (எனும் முகவரியில் அமைந்துள்ள) இலங்கை வங்கித் தலைமையகத்தின், தரைத் தளத்தில் காணப்படும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட வேண்டும்.

குறித்த திகதியில் மு.ப. 10.00 மணிக்குப் பின் தாமதித்துக் கிடைக்கும் விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டு திறக்காது திருப்பி அனுப்பப்படும்

**மேலதிக விபரங்களுக்கு,**

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ம் தளம், இலங்கை வங்கி,
“இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி : 0112-424786, 011-2544310, 011-2204260

# மீரிகம பிரதேச சபை

## 2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகத் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2020.10.02ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். குறித்த விண்ணப்பப் படிவங்கள் தங்களாலேயே தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சகல விண்ணப்பங்களும் பதிவுக் கட்டணத்துடன் பதிவுத் தபாலில் ‘‘தலைவர், மீரிகம பிரதேச சபை, மீரிகம’’ எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. காசோலைகளை ‘‘தலைவர், மீரிகம பிரதேச சபை, மீரிகம’’ எனும் பெயருக்கு அனுப்புதல் வேண்டும். வழங்குநர்களால் பின்வரும் ஒவ்வொரு பொருட்களுக்காகவும் 500.00 ரூபா வீதம் பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2021’’ எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**(அ) வழங்கல் மற்றும் சேவைகள்**

01. அலுவலகத்திற்கான உருக்கு மற்றும் மர உபகரணங்கள்
02. காகிதாதிகள்
03. சகல மின்சார உபகரணங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
04. குப்பை வண்டி துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் வழங்குதல்
05. கட்டிடப் பொருட்கள் (வழங்கக்கூடிய பொருட்களை வெவ்வேறாகக் குறிப்பிடவும்)
06. உணவு, பானங்கள் வழங்குதல்
07. கைத்தொழில் உபகரணம், வீதி வேலை உபகரணங்கள், மற்றும் கருவிகள் வழங்குதல் (வழங்கக்கூடிய உபகரணங்களை வெவ்வேறாகக் குறிப்பிடவும்)
08. சீருடைத் துணிகள் மற்றும் காலணிகள்
09. நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகள், புதினப்பத்திரிகைகள் என்பன
10. மிதிவண்டி, வண்டி தகடுகள், வரிக்கட்டண இலக்கத் தகடுகள்
11. மோட்டார் வாகன இயந்திரப் பொறிகளைக் கொள்வனவு செய்தல்
12. மோட்டார் வாகன திருத்தவேலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் குஷன் செய்தல்
13. கொங்கிறீட் ஹியூம் குழாய்கள் (வலுவேற்றப்பட்ட கம்பிகள் (விபரங்கள் மற்றும் விபரக்குறிப்புகளை வழங்கவும்)
14. கொங்கிறீட் கம்பித் தூண்கள் (6 அடி உயரம்)
15. பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள், பதாகைகள் போன்றன
16. பிரசார வேலைகளுக்கான ஒலிபெருக்கி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
17. சகல தார் வகைகள்
18. தட்டச்சு இயந்திரம், ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணித்தல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனிகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல்
19. கிருமிநாசினி வழங்குதல் துப்புரவேற்பாட்டு பொருட்கள் வழங்குதல்
20. கைத்தொழில் பொருட்கள் வழங்குதல்
    i. கல்
    ii. மணல்
    iii. கிரவல் மண்
    iv. கற்கள் 1½
    v. கற்கள் ¾
    vi. சிப்ஸ் (சிறுகற்கள்)
    vii. கற்தூள்
    viii. சீமெந்து
    ix. முன்கலவைகள்
21. டயர் வகைகள், வாகன பெற்றரி வகைகள் - எலைன்மன்ட் சகிதம் (டிராக்டர் உட்பட)
22. விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் (சகல வகையான விளையாட்டு உபகரணங்கள்)
23. எரிவாயு வழங்குதல்
24. 20 லீற்றர் குடிநீர்ப் போத்தல் வழங்குதல்

**(ஆ) சேவைகள் வழங்குதல்**

01. சிவில் பொறியியல் அறிவுரை சேவைகள், வாஸ்து சாஸ்திர அறிவுரை சேவைகள், சிவில் பொறியியல் திட்டமிடல்கள், மதிப்பீடுகளைத் தயாரித்தல், திட்டங்களை வரைதல்
02. நொத்தாரிஸ் மற்றும் சட்ட சேவைகள்
03. நிலஅளவை சேவைகள்
04. பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத தொழிலாளர் சேவைகள்
05. வாகனங்களை சேவை செய்தல் (சர்விஸ் செய்தல்)
06. இரும்புப் பட்டறை வேலைகள்
07. கலி பவுசர்களை வாடகைக்கமர்த்துதல்
08. தகனச்சாலை திருத்தவேலைகள்
09. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் (வாகனம் மற்றும் அலுவலகம்)
10. ஆவணங்களை அச்சிடும் வேலைகள்
11. குப்பை வண்டிகள், சுகாதார உபகரண திருத்தவேலைகள்
12. மோட்டார் வாகன திருத்தம் குஷன் வேலைகள்
13. தட்டச்சு இயந்திரங்கள், ரோணியோ இயந்திரங்கள், புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள்
14. கணனிகளின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
15. வாகனம் மற்றும் இயந்திரோபகரணங்களை வாடகைக்கமர்த்துதல்
16. ஹாட்வெயார் உபகரணங்கள் வழங்குதல்
17. மரங்களை வெட்டி அகற்றுதல்

**(இ) ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ரூபா 100,000.00 வரை | = | ரூபா 500.00 |
| 02. | ரூபா 100,000.00 முதல் 250,000.00 வரை | = | ரூபா 800.00 |
| 03. | ரூபா 250,000.00 முதல் 500,000.00 வரை | = | ரூபா 1000.00 |
| 04. | ரூபா 500,000.00 முதல் 1,000,000.00 வரை | = | ரூபா 1200.00 |
| 05. | ரூபா 1,000,000.00க்கு மேல் | = | ரூபா 1500.00 |

பின்வரும் செயற்றிட்ட வகைகளில் நீங்கள் பதிவு செய்து கொள்வதற்கு உத்தேசிக்கும் செயற்றிட்ட வகைகளைக் குறிப்பிடல் வேண்டும்.

அ. **வீதி செயற்றிட்டங்கள்**
   i. கொங்கிறீட் இடல்
   ii. காபட் இடல்
   iii. தார் இடல்
   iv. சிறிய கற்கள் இடல்
   v. கிரவல் மண் இட்டு அபிவிருத்தி செய்தல்

ஆ. **கட்டிட நிர்மாணங்கள்**

இ. நீர் வழங்கல் செயற்றிட்டங்கள் மற்றும் குளிப்பதற்கான பொதுக் கிணறுகளை நிர்மாணித்தல்

ஈ. விளையாட்டு மைதானங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகள்

01. வழங்கலின் பொருட்டு பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் வெளி வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோரும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

02. விலைகள் பொதுவாக 01 வருட காலத்திற்கு மாறுபடாத வகையில் நிலையாக இருத்தல் வேண்டும்.

03. சரியான முறையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறும் மற்றும் கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட மாதிரிகளுக்கு அமைவாக சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

04. பொருட்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் வழங்குகையில் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட வரிகள், நிபந்தனைகள் மற்றும் சபையின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படல் வேண்டும்.

05. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்குப் புறம்பாக கைத்தொழில் மற்றும் கேள்விகள் கோரும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**சரத் நந்தசிரி ரணதுங்க**
**தலைவர்**
**மீரிகம பிரதேச சபை.**

**தொலைபேசி இலக்கம்:**
**033-2273206**
**033-2273282**

# இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்

## மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் துறையில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கான வழிகாட்டியை (Module) தயாரிப்பதற்கான விலைமனுக் கோரல்

கீழே காணப்படும் பாடத்துறையின் கீழ் பாட வழிகாட்டி (Module) ஒன்றைத் தயாரிப்பதற்காக மற்றும் விரிவுரைகளை நடத்துவதற்காக நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

- சமூக கணக்காய்வுக் குழுக்கள்
- தலைமைத்துவம் மற்றும் குழு நிகழ்வுகள்
- குறைகேள் முகாமைத்துவம்
- பெறுகை மற்றும் கணக்காய்வு முறைமைகள்
- உள்ளூராட்சி சட்ட மற்றும் விதிகள்
- உள்ளூராட்சி நிறுவனங்களில் மனிதவள முகாமைத்துவம் தொலைத்தொடர்பு மற்றும் சிக்கல் முகாமைத்துவம்
- உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவுப்பொருள் முகாமைத்துவம்
- சனசமூக சங்கங்களைப் பலப்படுத்துதல்
- தொலைத்தொடர்பு மற்றும் மக்கள் தொடர்புகள்
- ஆவணங்கள் மற்றும் கோவை முகாமைத்துவம்
- உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வருமான முகாமைத்துவம்
- இலத்திரனியல் நூலக அமைப்புகள்
- கணனி பிரயோகங்கள் மற்றும் (Power Point சமர்ப்பித்தல்

மேற்படி துறைகளில் வழிகாட்டியை தயாரிப்பதற்காக திறமை காட்டும் புத்திஜீவிகள் வழிகாட்டியைத் தயாரிப்பதுடன் சம்பந்தப்பட்ட மாதிரிகள் உள்ளடங்கிய ஆவணங்களை மு.ப. 8.30 - பி.ப. 3.30 வரை நிறுவனத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம். இல்லையெனில் **training@slilg.gov.lk** எனும் இணையத்தள முகவரிக்கு வேண்டுகோள் விடுப்பதன் மூலம் தகவல்களை தருவித்துக் கொள்ளலாம்.

அம்மாதிரிக்கு அமைவாக வழிகாட்டியைத் தயாரிப்பதற்காக உங்களது விலைமனுக்களை பொறியிட்டு 2020 செப்டெம்பர் 23ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு-07, மலலசேகர மாவத்தை, இல. 17இல் அமைந்துள்ள இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில “வழிகாட்டியைத் தயாரிப்பதற்கான விலைமனுக்கள்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்,**
**இல. 17, மலலசேகர மாவத்தை, கொழும்பு-07.**

**அலுவலகம்: 011-2580307/ 011-2586259**
**தொடர்புகள்: பயிற்சி மற்றும் கற்கைகள் பிரிவு: 011-2058050**



தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் க.பொ.த (சா/த). க.பொ.த (உ/த). என்பவற்றோடு அறபு மொழி மற்றும் இஸ்லாமிய கற்கை நெறிகள் அனைத்தையும் இலங்கையின் முதன்மையானதும் பழைமையானதுமான அரபுக் கல்லூரி ஒன்றில் கற்றுக்கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்

# முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி

## கல்-எளிய.

## புதிய மாணவியர் அனுமதி – 2021

எமது கல்லூரியில் 2021ம் ஆண்டுக்கான புதிய மாணவியரை உள்ளீர்க்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏன் நீங்கள் முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரியை தெரிவு செய்ய வேண்டும்?**

60 வருட கால பாரம்பரியமும் 2000 இற்கு மேற்பட்ட ஆலிமாக்களை உருவாக்கிய அனுபவமும் கொண்ட எம்முடன் நீங்களும் இணைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம்.

- சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் க.பொ.த (சா/த). க.பொ.த (உ/த) பரீட்சைகளுக்கான தயார்படுத்தல்.
- இவ்விரு மொழிகளிலும் இஸ்லாமிய கற்கை நெறிகளை தொடர்வதற்கான வாய்ப்பு.
- அறபு மொழியை ஆழமாக கற்றுக்கொள்வதற்கான சூழல்.
- க.பொ.த உயர் தரத்தில் கலை, விஞ்ஞான பிரிவுகள்.
- அல் ஆலிம் பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தல்.
- உணவு மற்றும் தங்குமிட வசதியுடன் கூடிய கற்றலுக்கான சூழல்.

**விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்.**

- விண்ணப்பதாரி 2009.02.01ம் திகதிக்கும் 2010.01.31ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பிறந்தவராகவும் 2020ம் ஆண்டில் 6ம் தரத்தில் (ஆண்டு 06) தமிழ் அல்லது சிங்கள மொழி மூலம் கல்வி கற்பவராகவும் இருத்தல் வேண்டும்.
- தற்போது தமிழ் மொழி மூலம் கற்றுக்கொண்டிருக்கும் மாணவிகளின் சகோதரிகளுக்கு தமிழ் மொழி மூலம் கற்பதற்கு விண்ணப்பிக்க முடியாது.
- கல்லூரியினால் தயாரித்து வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பப்படிவத்திற்கான நிர்வாக கட்டணம் ரூபா 500.00
- விண்ணப்பங்களை எதிர்வரும் 15.09.2020 ஆம் திகதி முதல் தினமும் கல்லூரி பிரதான காரியாலயத்தில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்ப முடிவுத்திகதி 20.11.2020.
- கல்லூரி அனுமதி தொடர்பான இறுதி முடிவு நிர்வாக சபையைச் சார்ந்ததாகும்.

தொடர்புகளுக்கு: 0332270303

**PRESIDENT,**
**MUSLIM LADIES ARABIC COLLEGE,**
**P.O.BOX – 01, KAL-ELIYA. (11160)**

# கேள்வி கோரல் அழைப்பு

**மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

## சபரகமுவ மாகாண சபை

2020ஆம் ஆண்டிற்காக சபரகமுவ மாகாண விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு தகுதியும் தகைமையும் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து சபரகமுவ மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் 2020.10.07 மு.ப. 10.00 மணி வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இலக்கம் | உருப்படி | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | விளையாட்டு உபகரணம் | 2,000.00 |

02. 2020.09.11 முதல் 2020.10.05 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்கண்டவாறு கட்டணங்களைச் செலுத்தி இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைந்துள்ள சபரகமுவ மாகாண சபையின், மாகாண வீதி அமைச்சு அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. சகல கேள்விதாரர்களும் (பெறுகை) நிபந்தனைகளுக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணை முறி/ வைப்புத் தொகை சார்பாக பெற்றுக்கொண்ட ஆவணங்களினை ஏனைய கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறே கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கும் உருப்படியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. இது பற்றிய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 045-2223154 ஐ அழைத்து மாகாண வீதி அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை மாகாண வீதி அமைச்சு பெறுகைக் குழுவிற்கு உரியது.
06. 2020.10.07 மு.ப. 10.15 இற்கு இரத்தினபுரி, புதிய நகரம், சபரகமுவ மாகாண சபையின் மாகாண வீதி அமைச்சில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி,**
**கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள்,**
**சுற்றுலா, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம்,**
**இரத்தினபுரி.**

**2020.09.11ம் திகதி**
**மாகாண வீதி அமைச்சு அலுவலகத்தில்**

# இயற்கை வளங்களைப் பாதுகாக்க தேசிய பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை

**றொட்டவெவ குறூப் நிருபர்**

இயற்கை வளங்களைப் பாதுகாக்க தேசிய பாதுகாப்பு குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டுமென இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். திருகோணமலையிலுள்ள 22 ஆவது படைப்பிரிவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது :

நாட்டின் பொருளாதாரத்திற்கு வரலாற்று முக்கியத்துவப் பங்களிக்கும் பிரதேசம் திருகோணமலையாகும். நாட்டில் நிலவிய

30 வருட யுத்தத்திலிருந்து திருகோணமலை பிரதேசத்தை பாதுகாப்பதற்காக முப்படையினர் சிறப்பாக செயற்பட்டனர்.

ஈஸ்டர் தாக்குதலைப் போன்ற அடிப்படைவாத தாக்குதல்கள் இனி மேலும் இடம்பெறாமல் இருப்பதற்கு முப்படையினரும் பல ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேபோன்று இராணுவத்தினர் பொது மக்களின் நன்மை கருதி,சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோன்று கொவிட் 19 தனிமைப்படுத்தல் விடயத்திலும் பாரிய சேவைகளை எமது படையினர் செய்து வருகின்றனர். என்றார். இதேவேளை ஹெரோயின் கடத்தல் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், இராணுவத்தில் இருப்பவர்கள் வெளிநாட்டவர்கள் அல்ல. அவர்களும் இலங்கையரே. சீருடை அணிந்து இருந்தாலும் அவர்களும் எமது நாட்டவர்களே.

எனினும் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுடன் இராணுவத்தில் உள்ள சிலரும் தொடர்பு படுத்தப்படுகின்றனர். இனிவரும் காலங்களில் போதைப்பொருள் தொடர்பில் யாராவது இனங்காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.





# போதைப்பொருள் பாவனையிலிருந்து தமிழ் சமூகத்தை பாதுகாப்பது அவசியம்

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

போதைப் பொருள் பாவனையிலிருந்து சமூகத்தை பாதுகாக்கும் பொறுப்பை இளைஞர்கள் கையிலெடுக்க வேண்டுமென, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரி.கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிராந்தியத்தில் பணியாற்றிய உலக தரிசனம் நிறுவனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்ட நிறைவு விழா நேற்று (10) நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர், நாவிதன்வெளி பிரதேசம் ஒரு காலத்தில் மக்கள் நடமாட்டம் கூட இல்லாத பிரதேசமாக காணப்பட்டது. இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு பின்னர்தான் இங்கு ஒரு பிரதேச செயலகத்தையும், பிரதேச சபையையும் கொண்டுவர முடிந்தது.

இந்தக் காலகட்டத்தில் தான் World Vision நிறுவனத்தின் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. இங்குள்ள மக்களின் அத்தியவசியத் தேவையாகக் காணப்பட்ட குடிநீர் திட்டத்தை பெற்றுக் கொடுப்பதற்கு இந்த நிறுவனம் பெரிதும் உதவியது.

சுகாதாரம், கல்வி, பொருளாதாரம், வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு என, சுமார் 850 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவு செய்து மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி



உள்ளனர். நாவிதன்வெளி பிரதேசத்தில் இந்த அமைப்பின் பங்களிப்பு அபரிதமாக உள்ளது.

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது போல இன்னும் நாம் முன்னேற வேண்டும். குறிப்பாக கல்வித்துறையை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு நாவிதன் வெளி கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் அயராது பாடுபடல் அவசியம்.

இன்று பெரியவர்களை விட சிறியவர்கள் அதிகளவில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி சமூகத்தை சீரழிக்கும் நிலை உருவாகிவிட்டது. இதனை இல்லாமல் செய்ய வேண்டும்.



இந்தப் பொறுப்பை இளைஞர்கள் மற்றும் சமூகத்தலைவர்கள் கையிலெடுப்பது அவசியம்.

இல்லையென்றால் தமிழ்ச் சமூகம் அழிந்து விடும் அபாயம் தூரத்தில் இல்லை என்றார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், நிறுவனத்தின் தேசியப் பணிப்பாளர் கலாநிதி தனன் சேனாதிராஜா, பிரதேச செயலாளர் எஸ் ரங்கநாதன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர். ஜி.சுகுணன். கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் புவனேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் என் நவனீதராஜா, கணக்காளர் யு.எல். ஜவாஹிர், நிறுவனத்தின் குழுமப் பணிப்பாளர் சிரோன் பெரேரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காட்டுயானைகள் அட்டகாசம்

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**

கல்முனை மாவடிப்பள்ளிப் பிரதேசங்களில் கடந்த ஒன்றரை மாதங்களாக வந்து செல்லும் யானைகளால், பல்வேறு சேதங்களும் உயிர் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளதாக பிரதேச விவசாயிகளும் பொது மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.மாவடிப்பள்ளிப் பாலத்தின் தூண்கள் உடைக்கப்பட்டுள்ளதுடன் அங்குள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் காரியாலய கம்பிவேலிகளும் யானைகளால் சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த சில மாதங்களாக நிந்தவூர் பிரதேச வயல் பகுதிகளில் இருந்து, மாவடிப்பள்ளிப் பாலத்தினூடாக கூட்டங் கூட்டமாக குறுக்கிடும் யானைகளே இவ்வாறான அட்டகாசங்களைச் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. இது குறித்து விவசாயிகளும் பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

# சூடக்குடா பிரதேசத்தில் மணலில் புதைக்கப்பட்டிருந்த தோட்டாக்கள் மீட்பு

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை சம்பூர் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட சூடக்குடா பிரதேசத்தில், கடற்படை முகாமிற்கு அருகாமையில் மணலில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 110 தோட்டாக்கள் தோண்டி எடுக்கப்பட்டதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.சம்பூர் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலே,நேற்று முன்தினம் (08) இவை தோண்டி எடுக்கப்பட்டன.இவ்வாறு அகழ்ந்தெடுக்கபட்ட தோட்டாக்கள் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படுபவை எனவும் இவற்றை கடற்கலங்களுக்கு எதிராகவும் பாவிக்க முடியும் என்றும் சம்பூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தோட்டாக்கள் புதைக்கப்பட்ட இடம் யுத்தகாலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை தளமா இருந்த பிரதேசம் என்பதால் புலிகளே இத்தோட்டாக்களை புதைத்து வைத்திருக்க கூடும் என பொலிஸார் நம்புகின்றனர்.

கைப்பற்றப்பட்ட தோட்டாக்களை நீதிமன்ற உத்தரவை பெற்று விஷேட அதிரடிப்படையின் உதவியுடன் செயழிழக்கச் செய்யவுள்ளதாகவும் சம்பூர் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# முஸ்லிம் சமூகம் மீதான பிறரின் பார்வைகள் மீள் பரசீலனை செய்யப்பட வேண்டும்

ஒரேநாடு, ஒரே மொழி எனக் கூறி முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர். டி பண்டாரநாயக்கா 1956 இல் பெருந்தேசியத்தை கட்டி எழுப்பியது போன்று,ஒரே நாடு,ஒரே சட்டம் என்ற தொனிப் பொருளில் இம்முறை ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ ஒற்றுமைப் படுத்தியுள்ளதாக,மாற்றத்துக்கான

முன்னணியின் பிரதம செயற்பாட்டாளர் சட்டத்தரணி ஹாதி இஸ்மாயில் தெரிவித்தார்



அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா அமைப்பின் மருதமுனை கிளை நேற்று (10) ஏற்பாடு செய்த, சமகால அரசியல் நிலவரங்களும் மக்களின் வகிபாகமும் எனும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்ற அந்தஸ்திலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு தப்பிப் பிழைத்திருக்கின்றது. ஆனால்

முஸ்லிம் அரசியல் இன்று எல்லா வழிகளிலும்

பேரம் பேசும் பலத்தை இழந்து நிற்கின்றது.

சமூகத்திற்காக தமது வரப் பிரசாதங்களைப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர்.

முஸ்லிம் தலைமைகளின் கடந்த கால தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்களே இதில் பெரும் பங்களித்துள்ளன.இந்நிலைமைகளை

வைத்துத்தான் இன்றும் பெருந்தேசியம் விழிப்பூட்டப்படுகிறது. ஆரம்ப காலத்தில் முஸ்லிம் தலைமைகள் பெருந்தேசியக் கட்சிகளுடனும் சிங்கள மக்களுடனும் ஒற்றுமையாக இருந்துதான்,முக்கிய பதவிகள்,பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டன. முஸ்லிம் கட்சிகளையும், ஒட்டுமொத்த அரசியலையும் மழுங்கடிக்கச் செய்யும் கூட்டு நிகழ்ச்சி நிரலுக்கு பதிலளித்து தெளிவுபடுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



பொத்துவில் பகுதியில் விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு, சங்கமன்கண்டி விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட மணற்சேனை கிராமத்தில், நிலக்கடலை அறுவடை விழா நேற்று(10) நடைபெற்றது. அறுவடையை விவசாய திணைக்கள அதிகாரிகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். 200 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நிலக்கடலையே அறுவடை செய்யப்பட்டது. (பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

அரச காட்டுப் பகுதியில்

# சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டோர் கைது

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை வட்டார வனத்திணைக் களத்திற்கு சொந்தமான குடும்பிமலை ஒதுக்குக்காடு மற்றும் கிரிமிச்சை அரச காட்டு பகுதிகளில், சட்டவிரோத செயலில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்கள், கைது செய்யப்பட்டதாக,வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார். இவர்கள் கொண்டு இரண்டு வாகனங்களும் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. குடும்பிமலை ஒதுக்குக்காடு (எவரும் நுழைவதற்கு அனுமதியற்ற காட்டு) பகுதியில் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே,இவர்கள் கைதாகினர்.கைதானோர், வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது ஒருவருக்கு தலா இருபதாயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். வாகனத்தை நீதிமன்ற விசாரணைக்காக ஒப்படைத்துள்ளதாகவும் வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார். மேலும் இச்சுற்றி வளைப்பின் போது இக்காட்டுப்பகுதியில்உளவு வேலைகளில் ஈடுபட்டிருந்தோரும் கைதாகி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நஞ்சில்லாத உணவு உற்பத்தியை ஊக்குவித்து நிலத்தை பாதுகாப்போம்

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

பூமியைப் பசுமையான இடமாக மாற்றுவதற்கு அனைவரதும் பங்களிப்பு அவசியம் என்ற தொனிப் பொருளில் சுற்றுச்சூழல் நட்பு விவசாயத்தை துரிதப்படுத்த வேண்டுமென கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கந்தளாய் விவசாய இயக்கத்தின் தியாட்டா சார்பு விவசாய திட்டத்தின் கீழ் புதன்கிழமை (09) மாலை இடம் பெற்ற அரிசித் திரு விழா

கண்காட்சியில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் பேசிய ஆளுநர்,

இன்று என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாகும். சிறுவயதிலிருந்தே இந்த அழகான நாட்டைக் கனவு கண்டேன். இந்த நாட்டைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். நாட்டின் மிக அழகான ஏரிக்கு வந்து இதுபோன்ற நிகழ்ச்சியில் பங்கேற்க முடியுமென்று நான் ஒரு போதும் நினைத்ததில்லை. எனது முக்கிய குறிக்கோள், நாட்டின் விவசாயிகளுக்கு தியாட்டா சார்பு விவசாயத்தை அறிமுகப்படுத்துவதாகும். இந்த தியாட்டா சார்பு விவசாயம் குறித்து நம்பிக்கையை ஏற்படுத்துவதும் எனது இலக்குகளில் ஒன்று. தேசபக்தி சார்பு விவசாயம் மற்றும் நஞ்சில்லாத, உரங்களில் எங்கள் அதிகாரிகளுக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாக நான் உணர்கிறேன்.

புதிய அரிசி திருவிழா கந்தளாய் விவசாயிகளுக்கு புதியதல்ல.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்தான் மேற்கத்திய நாடுகள் இரசாயன உரங்களை உற்பத்தி செய்யத் தொடங்கின.இப்போருக்கு

பின்னர் ஏற்பட்ட உணவுப் பஞ்சத்தைப் போக்குவதற்கே இரசாயன உரங்கள் அறிமுகமானதாகவும் அவர் தெரிவித்தார்.

# யானை தாக்கியதில் விவசாயி பலி

**ஆலையடிவேம்பு சுழற்சி நிருபர்**

அம்பாறை மல்வத்தை மல்லிகைத்தீவுப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில், கீரை வகை பிடுங்கிய விவசாயியொருவர் உயிரிழந்ததாக, சம்மாந்துறை பொலிஸார் நேற்று(09) தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில், கணபதிபுரம் பகுதியில் வசிக்கும் எஸ். சோதிலிங்கம் (வயது 59) என்ற விவசாயியே உயிரிழந்துள்ளார்.

மல்வத்தை கணபதிபுரம் கிராமத்திலிருந்து மல்லிகைத்தீவு வயல் பகுதிக்குள் பொன்னாங்கன்னி பிடுங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே,இவரை காட்டு யானை தாக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# புதுமையான மாற்றங்களுடன் வெளிவருகிறது!

தினம் தினம் புதுமைகளுடன்

தினகரன்
THINAKARAN தினகரன்

சமநிலையான செய்தி,
அரசியல் அலசல்,
ஆழப்பார்வையுடன்...

தினமும்...

மலைச்சாரல்

நகர்வலம்

கிழக்கின் குரல்

அயல்நாட்டு செய்திகள்

சர்வதேச செய்திகள்

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk

திங்கள்
சைவ மஞ்சரி
கே.ஈஸ்வரலிங்கம்

செவ்வாய்
கிறிஸ்தவ மஞ்சரி
லோரன்ஸ் செல்வா

புதன்
முத்தாரம்
ஏ.எம்.சாஜித் அஹமட்

வியாழன்
மங்கையர் முற்றம்
லக்ஷ்மி

வெள்ளி
கலைக் கதம்பம்
சைத்திரியன்

வெள்ளி
ஆலமுல் இஸ்லாம்
– அஜ்வாத் பாஸி
aalamulislam.tkn@lakehouse.lk

சனி
புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்

ஒக்டோபர் 2 முதல் உங்கள் கரங்களில்...

LAKE HOUSE
லேக்ஹவுஸ் வெளியீடு

# இரக்க மனப்பான்மையும் மரியாதைப் பண்பும்

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ;**

சிறியோருக்கு இரக்கம் காட்டப்படாதவரும், பெரியோரின் மதிப்பை உணராதவரும் எம்மைச் சார்ந்தவரல்ல.

**(ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி).**

இந்த ஹதீஸ் தாரமி, முஸ்னத், அஹமத் போன்ற கிரந்தங்களிலும் பதிவாகியுள்ளது. சமூக வாழ்வு வளமானதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமைவதற்கு மனிதனை மதித்தல் அடித்தளமாக அமைகிறது. இஸ்லாம் மனிதனை மதிக்குமாறு கட்டளை இட்டதுடன் அதற்கான வழிகாட்டல்களையும் முன்வைக்கிறது. மனிதன் மண்ணால் படைக்கப்பட்டு இறைவனின் ரூஹ் ஊதப்பட்டிருப்பதே அவன் மதிக்கப்படுதவற்கு பிரதான காரணமாகும். இந்த அடிப்படைத் தத்துவப் பின்னணியில் நாம் இந்த ஹதீஸை விளக்குவோம்.

சிறார்கள் நாளைய தலைவர்கள். இன்றே அவர்களை நல்ல முறையில் வளர்த்துப் பரிபாலித்திட வேண்டிய கடப்பாடு மூத்தவர்களைச் சார்ந்துள்ளது. தனது ரூஹ் ஊதப்பட்ட மானிட வர்க்கதின் மீது அளவற்ற அருளையும், நிகரற்ற அன்பையும் பொழிந்து கொண்டிருக்கும் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அவனுக்கு எதிராக மனிதன் செயலாற்றும் போது கூட அவனது அன்பு அவனது கோபத்தை விஞ்சி நிற்கிறது. இந்தப் பிரபஞ்சம் அன்பினால் நிர்வகிக்கப்படுகிறது. அப்படியென்றால் இறைவனின் ரூஹ் ஊதப்பட்ட சிறார்களுடன் மூத்தவர்கள் அன்பைப் பரிமாறுவது கட்டாயக் கடமையாகும்.

நபி (ஸல்) அவர்கள் பிள்ளை வளர்ப்பின் போது அன்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்றுவிப்பு முறை அவசியம் என்பதை உணர்த்துகிறார்கள். கடும்போக்கு, வன்மை, சட்டம், பலாத்காரம், பலவந்தம், சாட்டை, துப்பாக்கி போன்றவை சாதிக்க முடியாதவற்றை அன்பு, இரக்கம், பாசம், நேசம், மென்மை போன்ற பண்புகள் சாதித்து விடுகின்றன. எனவே தான், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

நிச்சயமாக அல்லாஹ் மென்மையானவன். அவன் மென்மையை விரும்புகிறான். கடும் போக்கு – அதைத் தவிர்த்து உள்ள பண்புகளினால் உருவாக்கத்தை நல்விளைவுகளை மென்மை என்ற பண்பு மூலம் அல்லாஹ் தோற்றுவித்து விடுகிறான் **(முஸ்லிம்).**

பொதுவாக மூத்தோர், சிறார்கள் விடயத்தில் கடும்போக்கைப் பிரயோகிக்கின்றனர். ஒரு பொலிஸ்காரனைப் போல அவர்களுடன் நடந்து கொள்கின்றனர். பெற்றோர் தங்கள் குடும்ப வாழ்வில் சந்திக்கின்ற எரிகின்ற பிரச்சினைகள், உளைச்சல்கள் முதலியவற்றின் அடியாக உருவாகின்ற எரிச்சல்கள், எதிர்ப்புணர்வுகள், கோபம், வெறுப்புணர்வுகளை சிறார்களின் முன் கொட்டுகின்றனர். கண்டிப்பும், தண்டிப்பும் பிள்ளை வளர்ப்பில் பரவி வியாபித்துக் காணப்படுகின்றன. இதனடியாக சிறார்கள் உளரீதியாகப் பாதிப்படைந்து சிந்தனா ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் நலிவடைந்து விடுகின்றனர். சமூகத்தில் நற்பிரஜையாக வாழ்வதற்குப் பகரமாக சிறார்கள் வன்முறையாளர்களாக வாழத்தலைப்படுகின்றனர். பெற்றோரின் கண்டிப்பும், தண்டிப்பும் அன்பின் அடியாக உருவானது என்று ஒரு பிள்ளை உளத்திருப்தியடைகின்ற அளவு ஏலவே பெற்றோர் மற்றும் மூத்தவர்கள், சிறார்களுடன் அன்பு பாராட்டி அவர்களது உள்ளத்தை சம்பாதித்திருக்க வேண்டும். இத்தகைய விழுமியத்தை அண்ணலாரின் நடைமுறை வாழ்வில் நாம் அவதானிக்க முடிகிறது.

**அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :**

மதீனாவிலுள்ள சிறுமி ஒருத்தி அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கரத்தைப் பிடித்துக் கொண்டு அவள் விரும்பிய இடத்திற்கு அழைத்துச் செல்வாள். **(புகாரி)**

அனஸ் (ரலி) அவர்கள் சிறார்களைக் கடந்து செல்லும் போது அவர்களுக்கு ஸலாம் சொல்லி விட்டு, நபி (ஸல்) அவர்கள், அவர்களுடன் (சிறார்களுடன்) இவ்வாறு நடந்து கொள்வார்கள் என்று கூறுவார்கள். **(புகாரி, முஸ்லிம்).**

அண்ணலார் நபி (ஸல்) அவர்கள் ஒரு ரஸூல் மதீனாவின் ஆட்சித் தலைவர். சிறார்களுக்கு இரக்கம் காட்டி, கூடிப்பழக அவர்களுக்கு நேரம் இருக்கிறது. எமது அவசரமான உலகில் சிறார்களுக்கு இரக்கம் காட்டி, கூடி விளையாடி அவர்களது ஆதங்கங்களை உள்வாங்கிக் கொள்ள மூத்தவர்கள் நேரம், இடம் கொடுக்காமல் இருப்பது ஆச்சரியமே!

சிறுவர்களுக்கு இரக்கம் காட்டப்படுவது போல் பெரியோர் மதிக்கப்படல் வேண்டும். பெற்றார் மற்றும் மூத்தோர் வயோதிபர், ஆலிம்கள், ஸாலிஹீன்கள் உள்ளிட்ட அனைவரும் மதிக்கப்படல் வேண்டும்.

இவர்கள் மதிக்கப்படாமைக்கு இவர்கள் அந்தஸ்துகள் பிறரால் உணரப்படாமை பிரதான காரணமாகும். எனவே தான் ஹதீஸின் மூலத்தில் எவர் உணரவில்லையோ என்ற பதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பெரியோரின் கண்ணியத்தை உணராதவர், அறியாதவர் அவர்களை எவ்வாறு கண்ணியப்படுத்துவார்? எனவே தான் இஸ்லாம் அறிவு, தெளிவு, ஆகியவற்றின் அடியாக கடமைகளை விதிக்கிறது.

அறிவும், தெளிவும், உணர்வும் இல்லாதவரிடத்தில் கடமைகளை செவ்வனே நிறைவேற்றும் பண்மை எதிர்பார்க்க முடியுமா?

அல்குர்ஆன் ஏகத்துவக் கொள்கைக்கு அடுத்தபடியாக பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்துகிறது. மனிதனது உலகப் பிரவேசத்துக்கு முழு முதற் காரணமாக அல்லாஹ் இருக்கின்றான். அடுத்ததாக பெற்றோர்கள் இருக்கின்றனர்.

மனிதர்களில் நான் நல்லுறவைப் பேணுவதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் யார்? என ஒரு நபித்தோழர் கேட்க, மூன்று முறையும் உனது தாய் என பதிலளித்த அண்ணலார், நான்காவதாக அவர் வினவிய போது, உனது தந்தை என்றார்கள்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தந்தை சுவனத்தில் நடுவாயில், நீ விரும்பினால் அதைப் பாதுகாத்துக் கொள்! நீ விரும்பினால் உடைத்து விடு. **(திர்மிதி).**

சுவனப் பிரவேசத்துக்கு தாயும், தந்தையும் காரண கர்த்தாக்களாக இருக்கின்றனர் என்பதை மேற்படி ஹதீஸ்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறே மதிக்கப்பட வேண்டியவர்களை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் இனங்காட்டினார்கள்.

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :**

ஒரு சமூகத்துக்கு அல்குர்ஆனைக் கற்றுத் தேர்ந்தவர் தொழுகை நடாத்தட்டும். குர்ஆனைக் கற்றதில் அனைவரும் சமதரத்தில் இருந்தால் ஸுன்னாவைக் கற்றுத் தேர்ந்தவர் தொழுகை நடத்தட்டும். சுன்னாவைக் கற்றதில் அனைவரும் சமதரத்தில் இருந்தால் ஆரம்பத்திலேயே ஹிஜ்ரத் செய்தவர் தொழுகை நடத்தட்டும். ஆரம்பத்திலேயே ஹிஜ்ரத் செய்ததில் அனைவரும் சமதரத்தில் இருந்தால் அவர்களில் வயதால் மூத்தவர் அவர்களுக்கு தொழுகை நடத்தட்டும். **(முஸ்லிம்).**

**நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :**

எனக்குப் பின்னால் (ஸப்பிலே) பருவ வயதை அடைந்தோரும், அறிவாளிகளும் நிற்கட்டும். அதற்கடுத்த ஸப்பிலே அடுத்த தரத்தில் உள்ளவர்கள் நிற்கட்டும் என மூன்று முறை கூறி விட்டு, கடைத்தெருக் கூக்குரல், குழப்பங்கள் குறித்து உங்களை நான் எச்சரிக்கின்றேன் என்று கூறினார்கள். **(முஸ்லிம்).**

மேற்படி ஹதீஸ்கள் அல்குர்ஆன் சுன்னாவைக் கற்றவர்களையும், ஹிஜ்ரத் செய்தவர்களையும், மூத்தவர்களையும், பருவ வயதை அடைந்தவர்களையும், அறிவாளிகளையும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மதித்த மனப்பான்மையை எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே, சமூக வாழ்வில் இரக்க மனப்பான்மையும், மரியாதைப் பண்பும் வளர்ந்தோங்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோமாக!

அஷ்ஷெய்க்
**எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)**
இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக்கல்லூரி, புத்தளம்.

## பாவ மன்னிப்பு

**நபி** (ஸல்) கூறினார்கள்: "ஒருவர் இடைவிடாது அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தால், அல்லாஹ் அவருடைய எல்லா துன்பங்களிலிருந்தும் விடுவிக்க வழி ஏற்படுத்தி, அவருடைய எல்லா கவலைகளிலிருந்தும் நிவாரணம் அளித்து, அவர் எதிர்பார்த்திராத இடங்களிலிருந்தெல்லாம் வாழ்வாதாரம் வழங்குவான்." [அபூ தாவூத்]

உலகில் உள்ள தீமைகளுக்குக் காரணம், மனிதர்களுடைய செயல்கள் தான், அதனால், நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக மனம் வருந்தி, பாவ மன்னிப்பு கேட்டால் தான் இன்ஷா அல்லாஹ், உலகில் மீண்டும் அமைதி உண்டாகும். அல்லாஹ் கூறுகிறான், "மனிதர்களின் கைகள் தேடிக்கொண்ட (தீச்செயல்களின்) காரணத்தால் கடலிலும் தரையிலும் (நாசமும்) குழப்பமும் தோன்றின. (தீமைகளிலிருந்து) அவர்கள் திரும்பிவிடும் பொருட்டு அவர்கள் செய்தார்களே (தீவினைகள்) அவற்றில் சிலவற்றை (இவ்வுலகிலும்) அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான்.." [அல் குர்ஆன் 30:41]

நம் செயல்களின் காரணமாகத் தான் அல்லாஹ், ஊழலையும், தீமைகளையும், உலகில் பரவ அனுமதித்திருக்கிறான். நம்முடைய பாவங்களிலும், கீழ்ப்படையாமையிலும் நாம் தொடர்ந்து இருந்து கொண்டிருந்தால், என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு அடையாளம். மேலும், இது அல்லாஹ்விடம் நாம் மனம் வருந்தி, பாவ மன்னிப்புக்காக அவனிடம் திரும்பி, வெற்றி பெற்று, நம்முடைய துயரங்களிலிருந்து வெளியேறி, நம் கவலைகளுக்கெல்லாம் நிவாரணம் பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம்.

**பாத்திமா ருஷ்தா,**
மாத்தறை.

## மறுமை நாள்

**அ**ல்லாஹ் மனிதர்களின் வாழ்க்கையையும் நடத்தைகளையும் பரிசோதித்து அவற்றுக்கு சன்மானமோ தண்டனையோ வழங்கும் ஒரு நாளை ஏற்பாடு செய்திருக்கிறான். அதுவே மறுமை நாளாகும். அவனை ஏற்றுப் பணிந்தவர்களுக்கு சுவனமும் அவனை நிராகரித்து வரம்பு மீறியோருக்கு நரகமும் அந்நாளில் தயார் செய்யப்பட்டுள்ளதாக அல்லாஹுத்தஆலா அறிவித்துள்ளான். இந்த அறிவிப்பு மனித மூளைகளைக் குடைந்தெடுக்கிறது. அதனாலும் உலகின் இறுதி நாள் வரை பேசப்படுகின்ற ஒரு பேசுபொருளாக இஸ்லாம் இருப்பதைத் தவிர்க்க முடியாது.

# தூதர்களும் வேதங்களும்: மறுமையின் சன்மானமோ அல்லது தண்டனையோ முன்னறிவிப்பின்றித் திடீரென வழங்கப்படுவதில்லை. அந்த முன்னறிவிப்பை விரிவாக, சந்தேகங்களுக்கிடமின்றி மனித சமூகத்திற்கு முன்வைப்பதற்காகவே வேதங்களைக் கொடுத்து தனது தூதர்களை அல்லாஹ் அனுப்பி வைத்தான். அந்தத் தூதர்களில் இறுதியானவர் முஹம்மத் (ஸல்) அவர்களாவர்.

வேதங்களில் இறுதியானது அல்குர்ஆன். அந்த இறுதி நபியைப் பின்பற்றி குர்ஆனைக் கடைபிடித்தொழுகுபவர்தான் மறுமையின் விமோசனத்தைப் பெறுவார் என்ற இஸ்லாத்தின் அடுத்த செய்தி மறுமையை நம் பாதவர்களிடமும் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அதன் மூலம் சாதகமாகவும் பாதகமாகவும் பேசப்படுகின்ற ஒரு பேசுபொருளாக அது மாறுகின்றது.

**மொஹமட் தப்ரீஸ்**
வெலிகம

# ஆலமுல் இஸ்லாம்

– அஜ்வாத் பாஸி

aalamulislam.tkn@lakehouse.lk

## நன்மையை ஏவும் விடயத்தில்...

**பி**றருக்கு நன்மையான விடயங்களை ஏவிவிட்டு, அவைகளை ஏவியவர்கள் செய்யாவிட்டால், நரகில் கிடைக்கும் தண்டனையை பின் வரும் ஹதீஸ் எச்சரிப்பதை காணலாம்.

"மறுமை நாளில் ஒருவர் கொண்டு வரப்பட்டு நரகத்தில் போடப்படுவார். அப்போது அவரின் குடல்கள் வேகமாக நரகத்தில் வந்து விழும். கழுதை செக்கைச் சுற்றி வருவதைப் போல் அவர் சுற்றி வருவார். அப்போது நரகவாசிகள் அவரைச் சுற்றி ஒன்று கூடி, இன்னாரே! உமக்கேன் இந்த நிலை? நீர் (உலக வாழ்வின் போது) நற்செயல் புரியும்படி எங்களுக்குக் கட்டளையிட்டு, தீமை புரிய வேண்டாமென்று எங்களைத் தடுக்கவில்லையா? என்று கேட்பார்கள். அதற்கு அவர், நற்செயல் புரியும்படி உங்களுக்கு நான் கட்டளையிட்டேன்; ஆனால், அந்த நற்செயலை நான் செய்யவில்லை. தீமை புரிய வேண்டாமென்று உங்களை நான் தடுத்து வந்தேன்; ஆனால், அந்தத் தீமையை நானே செய்து வந்தேன் என்று கூறுவார். **(புகாரி 3267)**

### நரகத்தில் ஒரு பெண்...

தன் வீட்டில் வசித்து வந்த பூனைக்கு எந்த விதமான உணவையும் கொடுக்காமல் கட்டிப் போட்டதினால் நரகத்தில் அவள் வேதனையை அனுபவிக்கிறாள் என்று நபியவர்கள் எச்சரிப்பதை பின் வரும் ஹதீஸில் காணலாம்.

"இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: (முன்னொரு சமுதாயத்தைச் சேர்ந்த) பெண்ணொருத்தி ஒரு பூனை(க்குத் துன்பம் தந்த) விஷயத்தில் வேதனைப்படுத்தப்பட்டாள்.

அந்தப் பூனையை அது பசியால் துடித்துச் சாகும் வரை அவள் அடைத்து வைத்திருந்தாள். அதன் காரணத்தால் அவள் நரகத்தில் புகுந்தாள். அப்போது அல்லாஹ்வே மிக அறிந்தவன் – நீ அதைக் கட்டிவைத்து அதற்குத் தீனி போடவுமில்லை; தண்ணீர் தரவுமில்லை; அது பூமியிலுள்ள புழு பூச்சிகளைத் தின்று (பிழைத்துக்) கொள்ளட்டும் என்று அதை அவிழ்த்து விடவுமில்லை என்று அல்லாஹ் கூறினான்.

என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார். **(புகாரி 2365)**

மனிதர்களோ, மிருங்களோ அனைத்து ஜீவராசிகளுடன் இரக்கமாக நடந்து கொள்ள வேண்டும். மீறினால் நரகில் தண்டனை அனுபவிக்க வேண்டும், என்பதை தான் மேற்சொன்ன ஹதீஸ்கள் எச்சரிக்கின்றன.

**பாத்திமா ஹிமாயா பேகம்,**
கள் எலிய.



## பெண்களே ஜாக்கிரதை

**ந**ரகத்தில் பெண்கள் அதிகமாக இருப்பதாக நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள். பெண்கள் அதிகமாக குறை பேசி திரிவதினாலும்

கணவருக்கு நன்றி கெட்டவர்களாக இருப்பதினாலும் மேலும் மறுப்பதினாலும் அதிகமாக நரகத்தில் தண்டனைகளை அனுபவிக்கிறார்கள். அதனால் தான் அதிகமாக தர்மங்களை செய்வதன் மூலம் அந்த பயங்கரமான நரகத்தை விட்டும் பாதுகாப்பு பெறுவதற்கான வழியை நபியவர்கள் பெண்களுக்கு விசேடமாக கூறுகிறார்கள்.

அன்றாடம் நல்லமல்களை தொடராக செய்வதோடு குறிப்பாக அதிகமாக ஸதகாக்கள் கொடுக்க கூடிய பழக்கத்தை பெண்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

"நரகவாசிகளில் பெண்களையே அதிகமாகக் கண்டேன் என்று கூறினார்கள். மக்கள் ஏன் (அது), அல்லாஹ்வின் தூதரே? என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவர்களின் நிராகரிப்பே காரணம் என்றார்கள். அப்போது இறைவனையா நிராகரிக்கிறார்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு கணவர்களை நிராகரி(த்து நிந்தி)க்கிறார்கள். (கணவர் செய்த) உதவிகளுக்கு நன்றி காட்ட மறுக்கிறார்கள். காலமெல்லாம் அவர்களில் ஒருத்திக்கு நீ உதவி செய்து, பிறகு உன்னிடம் ஏதேனும் (குறை ஒன்றைக்) கண்டால் உன்னிடமிருந்து எந்த நலனையும் ஒருபோதும் நான் கண்டதேயில்லை என்று சொல்லிவிடுவாள் என்று பதிலளித்தார்கள். (புகாரி 1659)

எனவே, குடும்பம் என்றால் பல கஷ்டங்கள் இருக்க தான் செய்யும் அதற்காக எதற்கெடுத்தாலும் கணவரை குறை சொல்லக் கூடிய நிலையில் மனைவிமார்கள் இருக்க கூடாது. இருப்பதை கொண்டு சமாளித்து போக கூடிய நிலையை பெண்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். கணவரைப் பற்றி தப்பாக வீட்டிற்குள்ளேயும், வீட்டிற்கு வெளியேயும் பேசி திரியக் கூடாது. பெண்கள் தங்களை பக்குவப்படுத்திக்கொள்வதோடு, அமல்களில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். ஏன் என்றால் அமல்களில் பெண்கள் குறை நிலையிலே படைக்கப்பட்டுள்ளனர் என்பதை பின் வரும் ஹதீஸ்கள் தெளிவுப் படுத்துகின்றன.

"இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் ஏற்பட்டால் அவள் தொழுவதில்லை; நோன்பு நோற்பதில்லை அல்லவா? அதுதான் மார்க்கத்தில் அவளுக்குள்ள குறைபாடாகும். இதை அபூ ஸயீத்(ரலி) அறிவிக்கிறார்.

**(புகாரி 1951)**

மேலும் "அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்கள்; பெண்களின் சாட்சியம் ஆண்களின் சாட்சியத்தில் பாதியளவு அல்லவா? என்று நபி(ஸல்) அவர்கள் (பெண்களை நோக்கிக்) கேட்டார்கள். அவர்கள், ஆம் (பாதியளவு தான்) என்று பதிலளித்தார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், அதுதான் அவளுடைய அறிவின் குறை பாடாகும் என்று கூறினார்கள். **(புகாரி 2658)**

எனவே, ஏற்கனவே அமல்களில் குறைவான நிலையில் படைக்கப்பட்டவர்கள், எல்லை மீறி கணவனின் குறைபாடுகளை விமர்சனம் செய்யும் போது மறுமையில் நிலைமை மிக மோசமாக மாறி விடும் என்பதை புரிந்து பெண்கள் செயல்பட வேண்டும்.

**மொஹமட் ரிஸான்**
மாவனெல்ல

## குழந்தைகளை பாராட்டுங்கள்

குழந்தைகள் முதல் பெரியோர் வரை அவர்களது சிறிய சிறிய நல்ல செயல்களை கூட பாராட்டுங்கள், அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள், அது அவர்களுக்கான அங்கீகாரமாகையால் அவர்களது உள்ளத்தில் மன நிறைவை, மகிழ்ச்சியை உண்டாக்கும், நல்லவைகளை தொடர்ந்தும் செய்ய ஊக்குவிக்கும்.

வாழ்த்துக்கள் கூறுவது, பாராட்டுவது, அடுத்தவர் திறமைகளை, நற் செயல்களை அங்கீகரிப்பது சிறியோர் மீது அன்பும், பெரியவர்கள் மீது மரியாதையும் காட்டுகின்ற உயர்ந்த பண்பாடாகும்.

அவ்வாறான நல்ல பண்பாடுகளை முந்திக் கொண்டு அமுல் செய்வோருக்கு இரட்டிப்பு நன்மைகள் இருக்கின்றன. மற்றொருவர் செய்தால் நாமும் செய்வோம் என்று பிரதியுபகாரம் செய்ய காத்திருப்போர் சுயநலமிகள்.

ஒருவருக்கு நன்றி கூறுகின்ற பொழுது, அவரை பாராட்டுகின்ற பொழுது அவரது மன அழுத்தம், கவலைகள், நம்பிக்கையீனங்கள், விரக்திகள் கூட பறந்து போய்விடுகின்றன, அவர்களது உள்ளங்கள் அமைதி பெறுகின்றன.

மனிதர்களிற்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தியவனாக மாட்டான் என இஸ்லாம் எங்களுக்கு கற்றுத் தருகின்றது.

இன்று தாம் செய்யாதவற்றிக்காக பாராட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கும், அடுத்தவர் திறமைகளை, அர்ப்பணங்களை, அங்கீகாரங்களை தமதாக்கிக் கொள்வதற்கும் பலர் முண்டியடித்துக் கொண்டிருக்கின்றார்கள், அவர்களும் பகல் கொள்ளைக் காரர்கள் தான்.

அன்பு, சமாதானம், மன அமைதி, நிம்மதி, சந்தோஷம் என்பவற்றிற்காக ஏங்கித் தவிக்கும் உலகில் ஒரு விசுவாசி அடுத்தவரை சந்திக்கின்ற பொழுதே "உங்கள் மீது சாந்தியும், சமாதானமும்" உண்டாவதாக என்ற உயரிய பிரகடனத்தை செய்துகொள்கிறார்.

அத்தகைய பண்புகளே உலகில் நேரிடையான சிந்தனைகளை விதைத்துக் கொண்டிருக்கின்றன, அதனால் தான் ஒரு சகோதரனை முகமலர்ச்சியுடன் பார்ப்பது கூட ஸதகா என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அடுத்தவர் அகத்திலும் முகத்திலும் மலர்ச்சியை கொண்டுவருவது உங்கள் நல்ல குணாதிசயங்களின் பண்பாடுகளின் பிரதிபலிப்பாகையால் அதற்கு நற்கூலியுண்டு, நீங்களும் நேசிக்கப் படுவீர்கள்.

இன்று போட்டியும் பொறாமையும் நிறைந்த உலகில் மனிதன் சிரிப்பதற்கும் அழுவதற்கும் இலாப நஷ்டக் கணக்குகளை பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

**அபூ அப்துல்லாஹ்,**
மாத்தறை.

# கல்முனை ஆஸ்பத்திரியில் வழங்கப்பட்ட வைத்திய பராமரிப்பை உலகில் எங்கும் காணவில்லை

## தாங்கி வெடித்த போது உயிர் பிழைப்பேன் என நான் நினைக்கவில்லை

## நன்றி கூறியபடி கண்ணீருடன் விடைபெற்றார் கப்பல் மாலுமி எல்மோ

காரைதீவு குறூப் நிருபர்



நான் ஒரு வெளிநாட்டவராக இருந்தும் இங்கு எனக்களிக்கப்பட்ட சிகிச்சை வைத்தியப் பராமரிப்பு என்பது வாழ்நாளில் மறக்க முடியாது. இத்தகைய அன்புடன் அர்ப்பணிப்புடன் கூடிய பராமரிப்பை உலகில் எங்கும் நான் காணவில்லை. வைத்தியர்கள் தாதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது சார்பிலும் எனது பிலிப்பைன்ஸ் நாட்டின் சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன்.

சங்குமண்கண்டிக் கடலில் தீ விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து மீட்கப்பட்டு கடந்த ஆறுநாட்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பனாமாக் கப்பல் மாலுமி பிலிப்பைன்ஸ் பொறியியலாளர் எல்மோ கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை (04) கடற்படையினரால் மீட்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு 03 மணிநேர சத்திர சிகிச்சை, வைத்திய நிபுணர் எஸ்.சிறிநீதன் தலைமையிலான குழுவினரால் அளிக்கப்பட்டது. பின்னர் அதிதீவீர சிகிச்சைப்பிரிவில் அவர், சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த (09)புதன்கிழமை இரவு 09 மணியளவில் அவர் குணமாகி கொழும்புக்கு புறப்படும்வேளையிலே கண்ணீர்மல்கியவாறு தெரிவித்தார்.

கப்பல் தீவிபத்து பற்றிய அனுபவத்தைக் கேட்டபோது அரைகுறை ஆங்கிலத்தில் அவர், இவ்வாறு பதிலளித்தார்.

'எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. செப்.03 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 07 மணியளவில் வழமைபோல எழுந்தவுடன் உணவைப் பெறுவதற்காக கப்பலிலுள்ள சமையலறைக்குச் சென்றேன்.

அங்கு நண்பர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தேன். சுமார் 15நிமிட நேரத்தின் பின்னர் காலைக் கடன் கழிப்பதற்காக குளியலறைக்குச் சென்று கடன்களை முடித்துவிட்டு குளித்தேன்.

குளித்துவிட்டு வெளியேறியபோது கப்பலில் பாரிய வெடிச்சத்தம் கேட்டது. அவ்வளவுதான் வேறேதும் நினைவில்லை. யாரோ என்னைத் தாக்குவதுபோன்று உணர்ந்தேன்.

கப்பலில் ஒருபகுதி எரிவதைக்கண்டேன். பின்பு எதுவும் நினைவில்லை. இருந்தும் இன்னும் நான் உயிர்வாழ்கிறேன்.

உண்மையில் இலங்கை மக்கள், இலங்கை கடற்படை, விமானப்படையினர் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக கல்முனை ஆதார வைத்தியசாலை டாக்டர்கள், தாதிகள் ஏனையோர் என்னைப் பராமரித்தவிதம் மிகவும் பாராட்டுக்குரியது.

மாலுமி எல்மோ வைக்கப்பட்டிருந்த அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் இரா.முரளீஸ்வரன் மற்றும் உணர்வகற்றல் வைத்தியநிபுணர் டாக்டர் ஏ.தேவகுமார் ஆகியோர் எல்மோவின் உடல்நிலையை சோதித்தனர்.

உணர்வகற்றல் வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.தேவகுமார் கூறுகையில், இவர் எதிர்பார்த்ததைவிட தற்போது இயல்பாக சுவாசிக்கிறார். இதயம் நன்றாக வேலை செய்கிறது. ஓரளவு சாப்பிடுகிறார். நன்றாக கதைக்கிறார். அவர் 05 தினங்களுள் இவ்வாறு தேறுவாரென எதிர்பார்க்கவில்லை.

எனினும் அவர் ஆரோக்கியத்துடன் சுகதேகியாக வெளியேறுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என்றார்.

# சிறுவர் பாடல் இறுவட்டு அறிமுக விழா

எம்.ஐ. சல்மான் வஹாபின் சிறுவர் பாடல் இறுவட்டு அறிமுக விழா நாளை (12) திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அல் இம்தியாஸ் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எம் உவைஸ் தலைமையில் இடம்பெறுகிறது.

இந் நிகழ்வில் முதற் பிரதியை புரவலர் புத்தக பூங்காவின் நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்கிறார்.

இலக்கிய உலகில் புரவலர் ஹாஸிம் உமரின் சேவைகள் எவராலும் மறக்க முடியாதென்பவை குறிப்பிடத்தக்கது.

**பிழை திருத்தம்**

பெருந்தோட்ட அமைச்சு

**தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை**

**பதவி வெற்றிடங்கள்**

2020 ஆகஸ்ட் 28ஆம் திகதி தினகரன் நாளிதழ் 22ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2020 செப்டெம்பர் 16 என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும் என்பதை தயவுகூர்ந்து கவனிக்கவும்.

முன்பு பிரசுரமான விளம்பரத்தின் ஏனைய சகல விபரங்களிலும் மாற்றங்கள் இல்லை.

**தலைவர்,**
**தேயிலை சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,**
**இலக்கம் 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

**மீட்கப்படாத அடகுவைக்கப்பட்ட தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை**

இலங்கை வங்கியின் அடகு பிரதிநிதிகளான வரையறுக்கப்பட்ட கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய

**கிரிஎல்ல** **அருப்பொல**
**தெற்கு கரந்தன** **எல்லகாவ**
**கீண கஹவில**

ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2018.05.01 முதல் 2019.05.31 வரை அடகு வைக்கப்பட்டு ஆனால் 2020.09.26ஆம் திகதி மு.ப.9.30 வரை மீட்கப்படாத அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள், 2020.09.26 அன்று மு.ப.9.30 முதல் வரையறுக்கப்பட்ட கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பிரதான அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட**
**கிரிஎல்ல பலநோக்குக் கூட்டுறவு சங்கம்**
**இடங்கொட - கிரிஎல்ல**
045-2265808
045-2265897
மின்னஞ்சல் :- mpcskiriella123@gmail.com

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**(சக்தி மற்றும் வலு அமைச்சு)**
**குருநாகல், பிரதேச அலுவலகத்தை வடிவமைப்பதற்காக தொழில்சார் கட்டிடகலைஞரொருவரை தெரிவு செய்தல்**

**B/42/2020**

குருநாகல் பிரதேச அலுவலக கட்டிடத்தை வடிவமைப்பதற்காக தொழில்சார் கட்டிடக் கலைஞரொருவரை தெரிவு செய்வதற்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

**2020.09.30ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும்** மீளளிக்கப்படாத கட்டணமான 500 ரூபாவைச் (அதாவது ரூபா 462.96 + 8 % பெசேவ) செலுத்திய பின்னர், கொழும்பு-09, கலாநிதி டனிஸ்ரர் த சில்வா மாவத்தை, 609ஆம் இலக்க 1ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரது அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**2020.10.02ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு** விலைமனுக்கள் மூடப்பட்டு மேலேயுள்ள முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609ஆம் இலக்கத்தின் 1ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

**2020.09.30ஆம் திகதி பி.ப. 3 மணி வரை** பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக் கோரல் ஆவணங்கள் பரீட்சிக்கப்படலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் www.ceypetco.gov.lk என்ற இணையதளத்தில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் பரீட்சித்தலுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிட்டுள்ள தொலைபேசி/ தொலைநகல் எண்களினூடாக தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின் அவற்றை பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், திணைக்கள பெறுகைக்குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**1ஆம் மாடி, இல. 609, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 5455330, 5666225**
**தொலைநகல்: 5455424**

# இஷாரா லொறி பொடி நிறுவனத்தின் நடமாடும் சமையலறை




கொரோனா நோய் தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 40 வருட வரலாற்றைக் கொண்ட இஷாரா லொறி பொடி தனியார் நிறுவனம் புதிய முறையிலான நடமாடும் சமையலறை (ஃபுட் ட்ரக்) ஒன்றை அறிமுகப்படுத்தியிருப்பதாக அந்நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், இயந்திரப் பொறியியலாளருமான ஹர்ஷி இஷாரா மனமேந்திர தெரிவித்தார்.

விரும்பிய எந்தவொரு இடத்துக்கும் எடுத்துச் செல்லக்கூடிய இந்த நடமாடும் சமையலறை உலகிலுள்ள ஏனைய பிராந்திய நாடுகளில் பிரபல்யமடைந்து காணப்படுகின்றபோதும், இதனை வியாபார ரீதியில் இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் முதலாவது சந்தர்ப்பம் இதுவென்றும் அவர் குறிப்பிட்டார்.

நாம் இதற்கு முன்னர் நடமாடும் சமையலறைகளை தொலைக்காட்சிகளிலேயே பார்வையிட்டுள்ளோம். இனிமேலும் உலகின் பிராந்திய நாடுகளில் பயன்பாட்டிலுள்ள இவ்வாறான நடமாடும் சமையலறைகளை நாம் தொலைக்காட்சிகளில் மாத்திரம் பார்க்கத்தேவையில்லை, மாறாக நேரடியாக அவற்றை பயன்படுத்தும் அனுபவத்தை இலங்கையர்களாகிய நீங்கள் பெற்றுக் கொள்ளமுடியும். இரண்டு சமையல்காரர்கள் ஒரே நேரத்தில் பணியாற்றக் கூடிய இடவசதியைக் கொண்டிருப்பது இந்த நடமாடும் சமையலறையில் காணப்படும் விசேட அம்சமாகும். அது மாத்திரமன்றி இவற்றில் உணவுகளைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு சமையலறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தமது கண்களால் நேரடியாகவே காணமுடியும். கொரோனா தொற்று நோயினால் தொழில்வாய்ப்புக்களை இழந்த மற்றும் புதிதாக தொழில்களை ஆரம்பிக்க எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களை இலக்காகக் கொண்டே இஷாரா லொறி பொடி தனியார் நிறுவனத்தினால் இலங்கையில் இவ்வாறானதொரு தயாரிப்பு அறிமுகம் செய்துவைக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு ஃபுட் ட்ரக் இன் நீளம் மற்றும் அகலத்தை ஹைட்ரோலிக் தொழில்நுட்பத்தைக் கொண்டு விஸ்தரிப்பதற்கான வசதிகளும் காணப்படுவதாக முகாமைத்துவப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு தயாரிப்பை நமது நாட்டுக்குள்ளேயே மேற்கொள்ளக் கிடைத்திருப்பது எமக்குக் கிடைத்த வெற்றியாகும். எனது தந்தை பிரேமதாச மனமேந்திரவால் 40 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவனம் பல தசாப்தங்களாக வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது. இலங்கையில் லொறி பொடிகளை தயாரிக்கும் சிறந்த நிறுவனமாக பலர் எமது நிறுவனத்தை அடையாளப்படுத்துகின்றனர். புதிதாக எம்மால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடமாடும் சமையலறை விரும்பிய இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தேவையானளவு சேவையை வழங்கக் கூடியதாகும். உணவு விநியோக செயற்பாடுகளை மேலும் பலப்படுத்தும் நோக்கில் விசேடமாக எம்மால் வடிவமைக்கப்பட்ட முச்சக்கரவண்டிகளை தயாரித்து விநியோகித்துள்ளோம். சாதாரண லொறி பொடிகளுக்கு அப்பால் ஹாப் பொடி, வாகனக் காவு வண்டிகள், பிளட் பெட் போன்ற விசேட வடிவமைப்புக்களைக் கொண்ட லொறி பொடிகளை குறைந்த விலையில் எம்மிடமே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவில் கீழான அறிவிப்பு**

**ஏல விற்பனை**

**மக்கள் வங்கி**

**பம்பலப்பிட்டி கிளை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோரளையின் பல்லேபத்துவில் தெகிவளை - கல்கிசை மாநகர சபை எல்லைகளினுள் தெகிவளை பிரதேச செயலகப் பிரிவினுள் தெகிவளை மேற்கு 540ஏ ஆம் இலக்கத்தைக் கொண்ட கிராம சேவகர் பிரிவினுள் அமைந்துள்ளதும் தற்போது லியனகே வீதி, வரி பணம் இலக்கம் 78/8ஆம் இலக்கத்தைக் கொண்ட "கிரேசியா கும்புர" மற்றும் "கிரேசியா ஓவிட்ட" என அழைக்கப்படும் காணிக்காக உரிமம் பெற்ற நில அளவையாளர் காமினி பீ. தொடன்வெலவினால் 2014.03.10ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 10163ஆம் இலக்க வரைபடத்தின் காணித்துண்டம் இல. "267" இன் பதினெட்டு தசம் சைவர் நான்கு பேர்ச்சஸ் (ஏ0-றூ0-பே 18.07)பரப்பளவு கொண்ட காணி மற்றும் அதனுள் அமைந்துள்ள இலை குழை பழங்கள் கட்டிடங்கள் உட்பட அனைத்தும் அடங்கும்.

**மக்கள் வங்கியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் என்னால் 2020 ஒக்டோபர் 03ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.**

**மேலதிக தகவல்களை அறிய:**

2019.10.04ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2019.10.04ஆந் திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்களைப் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகு வழி:**

காலி வீதி ஊடாக கொழும்பு கல்கிசை திசைக்கு போகும் போது தெகிவளை சந்தியில் இடது பக்கத்திற்கு (ஹில் வீதி) ஊடாக 250 மீற்றர் மட்டும் சென்ற பின் மல்வத்த வீதி (இடது பக்கத்தில்) ஊடாக 300 மீற்றர் மட்டும் சென்ற பின் லியனகே வீதி கிடைக்கும். அங்கு 78/8ஆம் இலக்க வீடு.

**கொடுப்பனவு செய்யும் முறை:**

1. கொள்வனவு விலையின் 10%.
2. மாகாண அதிகாரசபைக்குச் செலுத்தப்படற்பாலதான 1% வரி.
3. ஏல விற்பனையாளரின் தரகாக கொள்வனவு விலையின் 2 ½.
4. 1000/= ரூபா எழுதுவினைஞர் மற்றும் வெளியிடுதற் கட்டணம்.
5. விற்பனையின் மொத்த ஆகுசெலவும் ஏனைய விதிப்பனவுகளும், எவையேனுமிருப்பின்.
6. விற்பனைச் சான்றிதழ்களுக்கான முத்திரைத் தீர்வை.

கொள்வனவு விலையின் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிரதான முகாமையாளர் (அறவீடு) மக்கள் வங்கி பிரதேச பிரதான காரியாலயம் (கொழும்பு தெற்கு) இலக்கம் 11, ஆதிபாத வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**தொலைபேசி இல. 011 2344985, 2323865, 2433876 தொலைநகல் : 011 2336873**

உரித்துறுதிகளும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மேற்படி முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்.

கொடுப்பனவுகள் மேற்கூறப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10 சதவீதத்தை வங்கி செலுத்தாதிருந்து ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**இல. 11/55, போகஹவத்த**
**குடாபுத்கமுவ, அங்கொடை**
**தொலைபேசி : 011 2053286/ 072 3207533**
**076 9217329/ 072 0881044**

**ஈ. எஸ். ராமநாயக்க**
நீதிமன்ற ஆணையாளர் உரிமம் பெற்ற
ஏல விற்பனையாளரும்,
பெறுமதி மதிப்பீட்டாளரும்
சமாதான நீதிவான் (நாடு முழுவதும்)

# முடக்குவாதத்தால் கலைஞன் வடிவேல் பாலாஜி மரணம்



பல லட்சக்கணக்கான மக்களை சிரிக்க வைத்த கலைஞன் வடிவேல் பாலாஜி நேற்று உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததால் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திவிட்டு சென்றுவிட்டார். விஜய் டிவி புகழ் வடிவேல் பாலாஜி மாரடைப்பு காரணமாக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் உயிரிழந்தார். அவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். இந்த நிலையில் வடிவேல் பாலாஜி குறித்த நினைவலைகளை ட்விட்டர்வாசிகள் பகிர்ந்த வண்ணம் உள்ளார்கள்.

யாராவது வடிவேல் பாலாஜிக்கு உதவியிருக்கலாம். குறைந்தபட்சம் விஜய் டிவியாவது உதவியிருக்கலாம். 15 நாட்களுக்கு முன்னர் மாரடைப்பு ஏற்பட்டு பில்ராத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பணம் செலுத்த முடியாமல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று நேற்றைய தினம் உயிரிழந்தார்.

15 நாட்களுக்கு முன்னர் வடிவேல் பாலாஜிக்கு மாரடைப்பு ஏற்பட்டது. பில்ராத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பணம் செலுத்த முடியாமல் போனது. பின்னர் கை, கால் முடக்குவாதம் ஏற்பட்டு விஜயா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் ஓமந்தூரார் மருத்துவமனைக்கு சென்ற நிலையில் அங்கு படுக்கை வசதி இல்லாததால் அவர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தார்.

## பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **வின் ∴பினிட்டி ஹோல்டிங்ஸ் (பிவீடி) எல்டிடி**

பதிவிலக்கம்: **பிவீ 00211787**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: **2019.05.15**

பதிவு முகவரி: **A/1/2, பெரஹர வீதி, கொழும்பு - 03**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **றபீட் கொன்ரெச் (பிறைவேட்) லிமிட்டெட்**

கம்பனியின் இலக்கம்: பிவீ 00226494

பதிவு அலுவலகம்: **ஆனந்த வாசா, இன்பர்சிட்டி பருத்தித்துறை.**

கூட்டிணைப்புத் திகதி: 27.08.2020

**தங்கராஜா தனுஷன்**
**கம்பனி செயலாளர்**

**Repeat Your Ad For Better Offers**

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 12137, Gouin Quest, Pierrefonds, QC, H8Z1V9 என்ற விலாசத்தில் வதியும் இலட்சுமணன் யோகேந்திரனும் மற்றும் நிசாந்தினி தியாகராஜாவும் ஆகிய நாங்கள் இல. 4141 Sherbooke West. Suite 650, Westmount Quebec, H3Z IB8 என்ற விலாசத்தில் வதியும் Alex Benmergui Attorney அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 28.10.2019ஆம் திகதியிடப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்து செயலிழக்கச் செய்கின்றோம் என்பதை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசிற்கும் இலங்கை பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். மற்றும் இன்று முதல் அவர்களால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்ல எனவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேற்கூறியவற்றை சரியெனவும், உண்மையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

2020 செப்டெம்பர் 04ம் திகதி

---

### மாகாண விவசாயத் திணைக்களம் - கிழக்கு மாகாணம்

# பெறுகை கோரல்

## பெறுகை பொருளில் பெயர்மாற்றம் (02.09.2020)

2020.09.02ஆம் திகதி கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் கோரப்பட்ட பெறுகை விளம்பரம் பின்வருமாறு திருத்தப்படுகிறது என்பதனை பெறுகைதாரர்களுக்கு அறியத்தருகின்றோம்.

| பெறுகை இலக்கம் | 2020.09.02இல் பெறுகை அறிவித்தலில் குறிக்கப்பட்டது | திருத்தம் | அலகுகள் | நிகழ்ச்சித் திட்டம் |
|---|---|---|---|---|
| GOSL/EP/25/PRO/Agriculture Machinery & Inputs/2020 | Maize Seeds Extractor | Knapsack Sprayer | 297 Nos | SAPP |
| | Grass Cutter Multi-Function Machine | Inter cultivator with Multi-Function Machine | 297 Nos | |
| | Tarpaulin | Trapaulin | 297 Nos | |
| | Sprinkler 1/2 AC | Sprinkler 1/2 AC | 100 Nos | Ministry of Agriculture Colombo |

தொலைபேசி : 026-2222665 / 026-2223077
தொலைநகல் : 026-2223077 / 026-2222153

**மாகாணப் பணிப்பாளர்**
**மாகாண விவசாய திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**கன்னியா வீதி, வரோதயநகர்,**
**திருகோணமலை.**

---

### ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்
### பாதுகாப்பு அமைச்சு

## திருத்தப்பட்ட பத்திரிக்கை விளம்பரம் தொடர்பில்

2020 ஆகஸ்ட் 09 சிலுமின, தினகரன் வாரமஞ்சரி மற்றும் சன்டே ஒப்சவர் பத்திரிக்கைகளில் பிரசுரமான விலைமனுக்கோரல் ஒப்பந்தத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்ளவும்.

**ஒப்பந்த இலக்கம் - MOD/KDU/03/2020 : இரத்மலானை, ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் திட்டமிடப்பட்ட சட்டப்பிரிவின் கட்டடத்தை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல்.**

**ஒப்பந்த இலக்கம் - MOD/KDU/04/2020 : இரத்மலானை, ஜெனரால் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் திட்டமிடப்பட்ட முகாமைத்தவ, சமூக விஞ்ஞானம் மற்றும் மனித வள பிரிவு கட்டடத்தை திட்டமிடல் மற்றும் நிர்மாணித்தல்.**

| பரிந்துரைக்-கப்பட்ட ஏலம் | வெளியிடப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் | திருத்தியமைக்கப்பட்ட விடயங்கள் |
|---|---|---|
| உருப்படி 01 | மனுக்கள் திறக்கப்படும் மற்றும் நிறைவடையும் நேரம் மற்றும் திகதி | "2020.09.29 ஆம் திகதி 1430 மணித்தியாலத்திற்கு" என திருத்தப்பட்டது. |
| உருப்படி 02 | 2020.09.21 ஆம் திகதி வரை | "2020.09.28 ஆம் திகதி வரை 0900 மணித்தியாலம் தொடக்கம் 1500 மணித்தியாலம் வரை" என திருத்தப்பட்டது. |
| உருப்படி 03.ய | "கட்டட நிர்மாணம் C4 அல்லது அதற்கு மேல்" | "கட்டட நிர்மாண C4 அல்லது அதற்கு மேல்" நீக்கப்பட்டது. |
| உருப்படி 05 | 2020.09.21 ஆம் திகதி வரை | "2020.09.28 ஆம் திகதி 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை" என மாற்றப்பட்டுள்ளது. |
| உருப்படி 07 | 2020.09.22 ஆம் திகதி தொடக்கம் 2021.01.18 ஆம் திகதி வரை | "2020.09.29 ஆம் திகதி முதல் 2021.01.25 ஆம் திகதி வரை" என திருத்தப்பட்டது. |
| உருப்படி 08 | 2020.09.22 ஆம் திகதி முதல் 2021.02.15 ஆம் திகதி வரை | "2020.09.29 ஆம் திகதி முதல் 2021.02.22 ஆம் திகதி வரை" என திருத்தப்பட்டது. |
| உருப்படி 12 | "மனுதாரர்கள் கட்டாயமாக மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழை (தேவைப்படின்) முன்வைக்கவேண்டும். | "மனுதாரர்கள் கட்டாயமாக மனுக்களை இடும் சந்தர்ப்பத்தில் 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழை (தேவைப்படின்) முன்வைக்கவேண்டும். |

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தவிர்ந்த மற்றைய அனைத்து விடயங்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை.**

தலைவர்
அமைச்சின் வழங்கல் குழு,
பாதுகாப்பு அமைச்சு,
15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03.

---

# கேள்விக்கான அழைப்பு

# இலங்கை தேசிய வைத்தியசாலை

### (சுகாதார அமைச்சு)

## மருத்துவ உபகரணங்களை வழங்குதல்

01. 2020.10.12 மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழே காணப்படும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| உருப்படி இலக்கம் | உருப்படி | தொடர் இலக்கம் | உருப்படியின் எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | Battery Drill with Batteries | SG-11/33/2019/01 | 02 | 4000.00 |
| 02 | Medical Items for Skill Laboratory at School of Cardiography | SG-11/76/2020/01 | | 1000.00 |

02. இலங்கைச் சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் இக்கேள்வி அழைப்பிற்காக பங்குபற்றுவதற்கு தகைமை பெறுவர்.

03. கேள்வி ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2020.09.11 முதல் 2020.10.09 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்திடம் மேலே தரப்பட்டுள்ள மீண்டும் செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

**(தொலைபேசி இலக்கம்: 011-2691111 நீடிப்பு: 2722)**

04. உருப்படி இல. 01 இற்காக கேள்விக்கு முன்னரான கூட்டம் 2020.09.29 மு.ப. 10.00 இற்கு நடைபெறும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் 2020.10.12 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

06. மேலதிக தகவல்கள் தேவையெனில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்து பெற்றுக்கொள்ளலாம். **(தொலைபேசி இலக்கம்: 011-2694595).**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

---

# அறிவித்தல்

### மாவத்தகம பிரதேச சபை

## பரகஹதெணிய மாட்டிறைச்சிக் கடைக்காக குத்தகை அடிப்படையில் கடைகளைப் பெற்றுக்கொள்ளல் – 2021

01. மாவத்தகம பிரதேச சபை மூலம் மாட்டிறைச்சிக் கடையாக உபயோகிக்கப்படத் தகுதியுள்ள இரண்டு கடைகளை 2021.01.01 முதல் 2021.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக கடை உரிமையாளர்களிடமிருந்து விலைமனுக் கோரப்படுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| **1.1.** | **விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி** | - | **2020.10.05** | **பி.ப. 3.00 வரை** |
| **1.2** | **விலைமனுப் பத்திரங்கள் பொறுப்பேற்கப்படல்** | - | **2020.10.06** | **மு.ப. 10.00 வரை** |
| **1.3** | **விலைமனுப் பத்திரங்கள் திறக்கப்படல்** | - | **2020.10.06 அன்று** | **மு.ப. 10.00 மணிக்கு** |

02. இது தொடர்பாக விலைமனுதாரர்க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகவுத் திறன்களுடன் சிக்கலற்ற உரித்துரிமையைக் கொண்டுள்ள கடைகளுக்கு விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

- பரகஹதெணிய நகரிற்கு சமீபமாக, கண்டி. - குருநாகல் பிரதான வீதிக்கு அல்லது புஸ்ஸெல்ல - பரகஹதெணிய வீதிக்கு முகப்பாக 500 மீற்றர் எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- பொருத்தமான (ஆகக் குறைந்த 144 சதுர அடிகள்) கடையொன்றாக இருத்தல் வேண்டும்.

03. அங்கீகரிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் சபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் பிரவேசிக்க வேண்டியதுடன் விலைமனுவை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது விலைமனுச் சபைக்குரியதாகும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை, மாவத்தகம பிரதேச சபைக்கு வந்து அல்லது 037-2299821 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ்.கே. அநுர கமல்பெரேரா,**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**மாவத்தகம.**

---

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

### கொழும்பு-02 'மெட்ரோ ஹோம்ஸ்' வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள 33 வீட்டு அலகுகளை முன்னுரிமை அடிப்படையில் உரித்துரிமைக்கு விற்பதற்காக விண்ணப்பம் கோரல்

1. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் அமைந்துள்ள 33 வீட்டு அலகுகளை முன்னுரிமை அடிப்படையில் உரித்துரிமைக்கு விற்பதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2020 செப்டெம்பர் மாதம் 17 முதல் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**(அமைவிடம்: 6.926057N, 79.849790E)**

2. இந்த வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கு ஆர்வங்காட்டும் விண்ணப்பதாரர்கள் 2020.09.17 முதல் 2020.10.02 வரையான அரசாங்க வேலை தினங்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை "செத்சிறிபாய - கட்டம் 1" கட்டிட வளவில் அமைந்துள்ள விளையாட்டு பார்வையாளர் கூடத்தில் இது தொடர்பாக வழங்கப்படும் டோக்கன் இலக்கம் ஒழுங்குவிதிக்கமைவாக பதிவு செய்து கொள்ளப்படுவார்கள்.

3. முதலில் வருகை தரும் விண்ணப்பதாரர்கள் 33 பேருக்கு அல்லது அவர்களின் அதிகாரத்தை கொண்டுள்ள பிரதிநிதியொருவருக்கு ஒரு விண்ணப்பம் மாத்திரம் அனைத்து வரிகளும் உள்ளிட்ட ரூ. 5000/= மீளளிக்கப்படாத கட்டணமொன்றைச் செலுத்தி பத்தரமுல்ல, "செத்சிறிபாய - கட்டம் 01", 08ஆம் மாடியில் அமைந்துள்ள சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவிலிருந்து 2020.09.17 முதல் 2020.09.23 வரையான அரசாங்க அலுவலக தினங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்தினுள் வழங்கப்படும். விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டை மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது வாகன சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் அதன் பிரதியொன்றையும் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

4. ஏனைய விண்ணப்பதாரர்களுக்கு பதிவு ஒழுங்குவிதிகளுக்கமைவாக தெரிவு செய்யப்படும் வீட்டு அலகு வெற்றிடங்கள் இருந்தால் மாத்திரமே அதற்காக விண்ணப்பங்கள் வழங்கப்படும்.

5. இந்த வீடுகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தேவைப்படும் விண்ணப்பதாரர்களுக்கு 2020 செப்டெம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் அரசாங்க அலுவலக தினங்களில் மு.ப. 9.00 முதல் பி.ப 3.00 வரையான காலத்தினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் அல்லது இந்த வீடமைப்புத் தொகுதியில் மற்றும் தரைக்கீழ் மாடியில் இலக்கம் CE B/29 என்ற இடத்தில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்திலிருந்து (பொறியியலாளர் அலுவலகம்) அது தொடர்பாக சந்தர்ப்பமொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படுவதற்கு மற்றும் வீடொன்றைத் தெரிவு செய்வதற்கு முன்னராக தெரிவு செய்யப்படும் வீடு மற்றும் வீடமைப்புத் தொகுதியின் வசதிகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பரிசீலனை செய்வதும், அது தொடர்பான சரியானதொரு புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்வதும் பொருத்தமானதாகும்.

6. வீடொன்றை ஒதுக்கிக் கொண்ட விண்ணப்பதாரரொருவருக்கு அல்லது அவரின் குடும்ப உறுப்பினரொருவருக்கு இந்த வீடமைப்புத் தொகுதியிலிருந்து மேலும் வீடொன்றை ஒதுக்கிக் கொள்ள எந்தவொரு உரித்துரிமையோ அல்லது தகுதியோ கிடைக்கப்பெறாது. அவ்வாறு மேலும் வீடொன்றை யாதேனும் விண்ணப்பதாரரொருவர் அல்லது அவரின் குடும்ப உறுப்பினரொருவரால் ஒதுக்கிக் கொள்ளப்பட்டுள்ளதென கண்டறியப்படும் பட்சத்தில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட அனைத்து வீட்டு அலகுகளும் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரர்களின் விருப்பின் பேரில் வீட்டு அலகொன்றை நிரந்தமாக ஒதுக்கிக் கொள்வது தொடர்பாக விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட தினம் தொடக்கம் அரசாங்க அலுவலக நாட்கள் 05 இற்குள் அல்லது அதற்கு முன்னர் இலங்கை வங்கியின் பிரதான கிளை கணக்கு இலக்கமான 1534 இற்கு ரூ. 1,000,000/= (ரூ. ஒரு மில்லியன்) தொகையொன்று இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு இலங்கை வங்கி கிளைக்கும் வைப்புச் செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் உரித்தான ஆவணங்களுடன் மேற்படி இலக்கம் 03இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளலாம். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று மற்றும் நேரத்திற்கு முன்னர் ரொக்கப் பணம் வைப்புச் செய்யப்பட்டமைக்காக வங்கியால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம்) குறித்த தொகையைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் வீடு ஒதுக்கப்படுவது இரத்துச் செய்யப்படுவதுடன், காத்திருக்கும் விண்ணப்பதாரர்களின் பட்டியலில் அதற்குப் பின்னர் குறித்த வீட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு வீடு ஒதுக்கித் தரப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அது தொடர்பாக மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. விற்கப்படவுள்ள வீட்டு அலகுகளின் விபரம் பின்வருமாறு:

| வீட்டின் வகை | வீட்டின் விஸ்தீரணம் (சதுர அடிகள்) | படுக்கை அறைகளின் எண்ணிக்கை | விற்கப்படவுள்ள வீட்டு அலகுகளின் தொகை | வீட்டு அலகொன்றின் விலை |
|---|---|---|---|---|
| T 1 | 501 - 600 | 02 | 01 | ரூ. மில்லியன் 10.40 |
| T 2 | 601 - 800 | 03 | 13 | ரூ. மில்லியன் 12.90 முதல் ரூ. மில்லியன் 14.2 வரை |
| T 3 | 801 - 1,000 | 03 | 15 | ரூ. மில்லியன் 16.2 முதல் ரூ. மில்லியன் 17.2 வரை |
| T 4 | 1,000 இற்கு மேற்பட்டவை | 03 | 04 | ரூ. மில்லியன் 21.40 முதல் ரூ. மில்லியன் 23.6 வரை |

9. முன்னுரிமை அடிப்படையில் பணம் செலுத்தி ஒதுக்கிக் கொள்ளப்பட்ட வீடு, குறித்த விண்ணப்பதாரர்களுக்கு உரித்துரிமைக்கு விற்பதற்காகவுள்ள இறுதித் தீர்மானம், நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரியதாகும்.

10. இது தொடர்பாக மேலதிக தகவல்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

- **சொத்து அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபை, 08ஆம் மாடி, "செத்சிறிபாய - கட்டம் 01" பத்தரமுல்ல. தொலைபேசி: 011-2875921, 011-2875916-20, 011-2873649, நீடிப்பு: 5602-5 இணையத்தளம்: www.uda.gov.lk மின்னஞ்சல்: realestatedivisionuda@gmail.com**
- **அந்த வளவு அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலகம் (பொறியியலாளரின் அலுவலகம்) இலக்கம் CEB/29, தரைக்கீழ் மாடி, "மெட்ரோ ஹோம்ஸ்" வீடமைப்புத்தொகுதி, இலக்கம் 40, க்லெனி வீதி, கொழும்பு-02. தொலைபேசி: 011-3611950**

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை**

---


BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

AVAILABLE AT

App Store Google play Windows Store




Visit - apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

LAKE HOUSE

சிலாபம், ஆனைவிழுந்தான் சரணாலய

# சுற்றாடல் அழிப்பை செய்தவர்கள் தராதரம் பாராமல் தண்டிக்கப்படுவர்

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ஆனைவிழுந்தான் சரணாலய சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளவர்களுக்கு தராதரம் பார்க்காது சட்டத்தை அலுல்படுத்துவோமென வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் (09) 27/2 எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வியில்,

அரசியலமைப்பின் 27ஆவது சரத்தின் 14ஆவது பிரிவின் பிரகாரம் சுற்று சூழலை பாதுகாக்கும் அரச கொள்கையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் இணங்கியுள்ளது. ஜனாதிபதியின் 'சுபீட்சத்தின் நோக்கு' தேர்தல் விஞ்ஞாபனத்திலும் காடுகளை 30 சதவீதமாக உயர்த்துவோம் என்றனர். ஆனால், இன்று சிங்கராஜா வனத்தில் காடுகள் நாசமாக்கப்படுகிறது. வனாத்தவில்லுவில் 200 ஏக்கர் நிலத்ததை தனியார் நிறுவனமொன்று நாசமாக்கியுள்ளது. அதேபோன்று ஆனைவிழுந்தானில் 02 ஏக்கர் காடு இறால் வளர்ப்புக்காக அழிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள சட்ட நடவடிக்கை என்ன? எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த துறைசார் அமைச்சர் சி.பி.ரத்னாயக்க,

வன்னாத்திவில்லுவில் சீமெந்து உற்பத்தி நிறுவனத்துக்கு ஐந்தாயிரம் ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. இதில் 200 ஏக்கர் ஒரு தனியார் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து ஆராய்ந்து நடவடிக்கையெடுக்கப்படும். ஆனவிழுந்தானில் 1.6 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட டோஷர் இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அதனை செலுத்திய சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆனைவிழுந்தான் சம்பவம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட 05 பேர் அடங்கிய குழுவின் அறிக்கையும் கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த சம்பவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியது யாராக இருந்தாலும் எந்த பதவியில் இருந்தாலும் தாரதரம் பாராது சட்டத்தை நடைமுறைப் படுத்துவோம். நாம் சூழலை நேசிக்கும் அரசாங்கமாகும் என்றார்.

சீரற்ற காலநிலையால்;

# மாத்தறை மாவட்டத்தில் 19 குடும்பங்கள் பாதிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

கடந்த சில தினங்களாக ஏற்பட்டசீரற்ற காலநிலையால் மாத்தறை மாவட்டத்தில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 71 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய மேலதிகப்பணிப்பாளர் பிரபாத் கழுபோவில தெரிவித்தார்.

கடும் காற்றின் காரணமாக வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் வீடுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

இதன்படி கொடபொல பிரதேச செயலகப் பகுதியில் 7 வீடுகளும் ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில் 5 வீடுகளும் கம்புறுப்பிட்டிய செயலகப் பிரிவில் 3 வீடுகளும் மாத்தறை திஹகொடை, முலட்டியன ஆகிய பகுதிகளில் தலா ஒரு வீடுமாக 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மேலும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஐவர் அவர்களது மீன்பிடி படகு கடும் காற்றினால் கடலில் கவிழ்ந்ததால் விபத்துக்குள்ளாகின. எனினும் உயிர் ஆபத்துக்கள் எதுவும் இன்றி இவர்கள் கரை சேர்க்கப்பட்டனர்.

சிறுகாயங்களுடன் இவர்கள் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெலிகம, மிதிகம மற்றும் படவல பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் கப்பரத்தோட்டை மீன்பிடித்துறை முகத்திலிருந்து கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீன்பிடிக்கச் சென்றவர்கள் என்று தெரிய வருகிறது.

## கல்னேவ பிரதேச சபை பிரிவில் காபர்ட் வீதி

**நேகம்பஹ தினகரன் நிருபர்**

"சுபீட்சத்தின் நோக்கு" என்ற அரசாங்கத்தின் எண்ணக்கருவுக்கு அமைவாக கல்னேவ பிரதேச சபைப் பிரிவின் நேகம முஸ்னவ வீதி காபர்ட் இடப்படும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவின் வேண்டுகோளுக்கமைவாக கடந்த 8ஆம் திகதி நேகம பாடசாலைச் சந்தியில் வட மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோனினால் நேகம முஸ்னவ வீதி காபர்ட் இடும் ஆரம்பப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுமார் 2.1 கிலோ மீற்றர் தூரம் வரையிலான பாதைக்கே காபர்ட் இடப்படுவதுடன், இத்திட்டத்துக்கென சுமார் 7.5 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி செயற்திட்டம் வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளின் நேரடிக்கண் காணிப்பில் அமுல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளின் நீர்ப்பாசன பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொடுப்பேன்

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன

**நேகம்பஹ தினகரன் நிருபர்**



அநுராதபுர மாவட்டத்தில் 2500க்கு மேற்பட்ட குளங்கள் காணப்பட்ட போதிலும் அப்பாவி விவசாயிகளின் நீர்ப்பாசன பிரச்சினைக்கு முற்று முழுதான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முனைப்புடன் செயல்படவுள்ளதாக ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்ற நன்றி தெரிவிக்கும் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பண்டைய அரசர்களின் ராஜதானியாக விளங்கிய அநுராதபுரம் இன்று மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இவற்றை சீர்செய்து முறையான வேலைத்திட்டத்தின் ஊடாக மக்களின் நலன் பேண ஆவன செய்யவுள்ளேன்.

குளங்கள் பல இருந்தும் அவைகள் முறையாக புனரமைக்கப்படவில்லை. அத்தனை நீர்ப்பாசனத்திட்டங்களும் முறையாக புனரமைக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வு வளம் பெற வகை செய்யப்படும்.

மக்களுக்கு முறையான சுகாதார சேவைகள் அரச ஆஸ்பத்திரிகளிடமிருந்து கிடைக்க வேண்டும். சுகாதாரத் துறையினர் பொதுமக்களுடன் சுமுகமான நல்லுறவினைப் பேண வேண்டும்.

அநுராதபுர மாவட்டத்தில் காட்டு யானைகளினதும், சிறுநீரக நோயினாலும் ஏற்பட்டு வரும் மரணங்கள் சம்பந்தமாக கவலை கொள்வதுடன் அவற்றுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

மேலும் எனது வெற்றிக்காக அயராது பாடுபட்டு வாக்களித்து வெற்றிபெறச்செய்த சகல தரப்பினருக்கும் என்று உளப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் உத்திக பிரேமரத்ன தெரித்துள்ளார்.



கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலகப் பிரிவின் ரத்மல்கஹவெவ பிரதேச வைத்தியசாலைக்கு மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேரில் சென்று பார்வையிட்டு அதன் தேவைப் பாடுகள் குறித்து ஆராய்ந்த போது பிடிக்கப்பட்ட படம்.

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் கைது

**திறப்பனை தினகரன் நிருபர்**

திறப்பனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லேவ பகுதியில் அரச காணியொன்றின் காட்டுப் பகுதியில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை திறப்பனை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது சுமார் 3,60,000 மில்லி லீட்டர் வடி சாராயமும் சாராய உற்பத்திக்கு பாவிக்கும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர் மகஇலுப்பல்லம பகுதியில் வசிக்கும் 39 வயதுடைய இளைஞர் ஒருவர் எனவும்,நீண்ட காலமாக இக் காட்டில் மிகவும் சூட்சுமமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்ததாக ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அமைச்சரிடம் விவசாயிகள் மகஜர் கையளிப்பு

**ஹொரவபொத்தான விஷேட நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கையை கைவிட்ட அதிகளவான விவசாயிகள் மிளகாய் பயிர் செய்கையில் ஆர்வம் காட்டியிருந்தனர். இருந்த போதிலும் மிளகாய்ச் செடிகளிடையே பரவிய ஒரு வித நோயினால் மிளகாய் செய்கை நிலங்கள் முற்றாக பாதிக்கப்பட்டன.

எனினும் இம்மாவட்ட விவசாயிகள் மிளகாய்ச்செய்கையில் மிகுந்த அனுபவம் கொண்டவர்கள் என்பதாலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை தொடர்ந்து விவசாயிகளுக்கு உரம், விதை நெல் மற்றும் தானிய வகைகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டமையாலும் விவசாயிகள் மீண்டும் மிளகாய் செய்கையில் ஈடுபட்டனர்.

அண்மைய நாட்களில் எதிர்பாராத விதமாக மழை பெய்தமையினால் மீண்டும் மிளகாய் செய்கை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் மிளகாய் செய்கைக்காக பெற்ற தமது கடனை செலுத்த வழி இன்றி மாவட்ட விவசாயிகள், அநுராதபுர மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் காணி அபிவிருத்தி அமைச்சருமான எச்.எம் சந்திரசேனவை சந்தித்து நிலமையை சுட்டிக் காட்டியுள்ளதுடன் தமக்கு நட்டஈடு பெற்றுத்தருமாறு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

# புத்தளத்தில் மொழி உரிமை மீறல் தொடர்பான செயலமர்வு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் மாவட்டத்தில் மொழி உரிமை தொடர்பான அறிவை மேம்படுத்தல் மற்றும் மொழி உரிமை மீறல் தொடர்பான ஆய்வு போன்றவற்றை உள்ளடக்கிய விஷேட முழு நாள் செயலமர்வு புத்தளம் குருநாகல் வீதியில் அமைந்துள்ள சேனாதிலக உணவு விடுதியின் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

புத்தளம் மாவட்டத்தில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மொழி ரீதியாக முகங்கொடுத்து வரும் பிரச்சினைகளையும் அசௌகரியங்களையும் பற்றி கலந்துரையாடி அவற்றை தீர்ப்பதற்கான திட்டங்களையும், குறைப்பதற்கான அணுகுமுறைகளையும் உருவாக்கும் நோக்கிலேயே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புத்தளம் சேஞ்ச் மனிதாபிமான நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வு USAID நிதியுதவியுடன் IDEA நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்றது.

மனித உரிமை ஆணைக்குழு செயற்பாட்டாளர்கள், ஊடக துறையினர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர், சமூக, அரசியல் மற்றும் சிவில் செயற்பாட்டு குழுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் இதில் கலந்து கொண்டனர்.

சேஞ்ச் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் சட்டத்தரணி எம்.ஏ. எம்.சீ.எம்.தாவுதீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வளவாளர்களாக சட்டத்தரணி ஜீவனி காரியவசம், சயில்ட் விஷன் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.சீ.எம். ருமைஸ், மனித உரிமை ஆணைக்குழுவின் புத்தளம் பிராந்திய இணைப்பாளர் சட்டத்தரணி எம்.அப்துல் கலாம் ஆகியோர் கலந்து கொண்டனர். புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ், புத்தளம் நகர சபை உறுப்பினர் ஜமீனா இல்யாஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## புகையிரதம் மோதி இளைஞர் உயிரிழப்பு

**புத்தளம் விசேட நிருபர்**

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கி வந்து கொண்டிருந்த புகையிரதத்தில் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் பகல் 2.55 மணியளவிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கள்ளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் பகல் கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த குறித்த புகையிரதத்திலேயே குறித்த இளைஞர் மோதி உயிரிழந்துள்ளதுடன் , இவ்வாறு உயிரிழந்த இளைஞர் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த வட்டக்கள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



கெகிராவ கல்வி வலய கும்புக்வெவ நிம்மல்சிறி கனிஷ்ட வித்தியாலயத்திற்கு இம்மாதம் 08 ஆம் திகதி சூரியசக்தி காற்று மற்றும் நீர் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க விஜயம் செய்தார்.இந்நிகழ்வின் போது மாணவர்கள் அவரை அழைத்து வருவதைப் படத்தில் காணலாம். (படம் கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

# நீர்கொழும்பு பகுதியில் சில பகுதிகள் நீரில் மூழ்கின

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கட்டுவ மற்றும் தளுபொத ஆகிய பிரதேசங்களில் பல வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்று முன்தினம் (9 ) அதிகாலை நீர்கொழும்பு பிரதேசத்தில் பெய்த பலத்த மழை காரணமாகவே குறித்த பிரதேசத்திலுள்ள வீடுகள் நீரில் மூழ்கின. மேலும் பிரதேசவாசிகளின் இயல்புவாழ்க்கையும் முற்றாகப் பாதிப்புக்குள்ளாகின.

அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாகவே கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு நகரில் மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

நீர்கொழும்பு கட்டுவ, தளுபொத ஆகிய பிரதேசங்களில் வீதிகளிலும், ஒழுங்கைகளிலும் வெள்ள நீர் நிறைந்து காணப்பட்டது . இந்த பிரதேசத்தில் பல வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

கட்டுவ, புவக் வத்தை பிரதேசத்தில் 'தெபா எல' வாவி பெருக்கெடுத்ததன் காரணமாகவே பத்து வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உள்ளே புகுந்துள்ளது.

தளுபொத பிரதேசத்தில் பல்லஞ்சேனை வீதியின் ஒரு பகுதி முற்றாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசவாசிகள் தமது வீடுகளை மூடிவிட்டு உறவினர்கள் மற்றும் நண்பர்களுடைய வீடுகளுக்கு பாதுகாப்பாக சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியராக லின்னாஸ் நியமனம்



மக்கொனையைச் சேர்ந்த எம்.எஸ்.எம். லின்னாஸ், ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் தொகுதியில் 26 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள இவருக்கு அண்மையில் இந்த பதவி உயர்வு வழங்கப்பட்டது. அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் பத்திரிகைத்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மக்கொனை அல்ஹஸனியா ம.வி, பேருவளை அல்ஹுமைஸரா தேசியப் பாடசாலை, கா/துந்துவை மு.ம.வி., கொழும்பு டி.எஸ். சேனாநாயக்க வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், அகில இலங்கை சமாதான நீதவானாவார். ஆசிரியத் தம்பதிகளான மர்ஹூம் சௌக்கத், ஸித்தி மாஜிதா ஆகியோரின் கனிஷ்ட புதல்வராவார்.

# காசிபுல் ஹூதா அரபுக் கல்லூரிக்கு காணி அன்பளிப்பு



கல்பிட்டி முதலைப்பாளி தாருல் உலூம் காசிபுல் ஹுதா அரபுக் கல்லூரிக்கு தனது ஒரு ஏக்கர் தென்னங் காணியை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அன்பளிப்பு செய்தார்.

அல் குர்ஆன் ஓதல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி மத்ரஸாவிற்கு ஒரு ஏக்கர் தென்னங் காணிக்கான உறுதிச் சீட்டையும் வழங்கி வைத்தார். நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் எம். ஜெ.எம். ஜவ்ஸி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )

# அக மனப் புரிதல்களுக்கு இடமளிக்கும் குறுந்தொகை

## இருபத்தொரு பெண்பாற் புலவர்களின் 75 பாடல்கள்

எட்டுத்தொகை நூல்களுள் செறிவும், இனிமையும் மிக்கது குறுந்தொகை. ‘‘புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுள்களில் புனைந்து காட்டும் ஆற்றலினும் அகத்தே தோன்றும் கருத்துக்களை உணர்ச்சியும் மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் சிறந்தது” என்று குறுந்தொகையின் சிறப்பினை எடுத்துரைக்கிறார் உ.வே. சாமிநாதர்.

அக மனப் புரிதல்களுக்கு இடமளிக்கும் பாடல்கள் பலவற்றைக் கொண்டது குறுந்தொகை. இக் குறுந்தொகையில் இருபத்தோரு பெண்பாற் புலவர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் எழுதிய குறுந்தொகைப் பாடல்கள் மொத்தம் எழுபத்தைந்து.

**இப்பாடல்களைப் பெண்ணிய நோக்கில் அணுகினால்;**

குறுந்தொகை அகம் சார்ந்த பாடல்களின் தொகுப்பாகும். இவ் வகப்பாடல்களில் செவ்விய நிலையில் காதல் வெளிப்படுத்தப் பெற்றுள்ளது. செவ்விய நிலைக் காதல் என்பது ஒருவகையில் பெண்களுக்கு தடையான நிலையையும் தருகின்றது. மற்றொரு வகையில் அதுவே விடுதலையையும் தருவதாக உள்ளது.



பெண்கள் தாங்களாகவே காதல் இன்பத்தில் ஈடுபடுதல், அல்லது ஆடவரால் வீழ்த்தப்படுதல் என்ற நிலைகளில் திருமணம் என்ற எல்லைக்குச் சென்று குடும்பம், பிள்ளை, இல்லறம் என்ற பிணைப்பு நிலைக்கு ஆளாகின்றனர். அதே நேரத்தில் காதலித்ததன் காரணமாக சில வகை உரிமைகளையும் பெண்கள் பெறத் தகுதி உடையவர்களாக உள்ளனர்.

தானே தேர்ந்து கொண்ட கணவன் அல்லது காதலன் என்ற அடிப்படையில் ஆண்களிடத்தில் அவர்கள் தனக்கு வேண்டுவனவற்றை, அல்லது தான் விரும்புவனவற்றைப் பெற்றுக்கொள்ளும் உரிமை பெற்றவர்களாக விளங்குகின்றனர். இதில் கட்டுண்ட நிலை, அல்லது விடுதலை நிலை என்ற நிலைப்பாட்டில் ஏதேனும் ஒன்றைப் பெண்கள் தங்களுக்கு ஏற்ற நிலையில் அமைத்துக்கொள்கின்றனர்.

விரும்பி மணந்த காதலன் தன்னுடன் உடன் உறைந்து, தன்னையும் வளப்படுத்தி அவனையும் வளப்படுத்தி வாழும் வாழ்க்கை பெற்ற தலைவியர் மகிழ்ச்சியான வாழ்க்கை பெற்றவர்களாகின்றனர். இவ்வுரிமை நிலையைப் பெறாதவர்கள் துன்ப வாழ்க்கை வாழ வேண்டியவர்களாகின்றனர்.

செவ்விய நிலைக் காதல் என்பது உரிமைகள் பலவற்றை வழங்குவது என்று பெண்ணியவாதிகள் கருத்துரைத்துள்ளனர்.

‘‘தகர்க்க இயலாத சமுதாயச் சுமைகளை உடைக்கும் தன்மை வல்லமை பெற்றது செவ்விய காதல். பெண்கள் சமத்துவ வாழ்வைப் பெறவும் விடுதலை மிக்க வாழ்வைப் பெறவும் அதிகாரத்தைப் பெறவும் காதல் வழி வகுப்பதாக பெண்ணியத் தத்துவ வாதிகளும், சமூகவியல் அறிஞர்களும் கருதுகிறார்கள்.

அதுவே உண்மையுமாகும். நிலைக் காதல் என்பது பெண்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெறக் குறிக்கத்தக்கப் புள்ளியாகும். இந்நிலையானது பெண்களைப் பேரிழப்பு, நரகம், தியாகம் போன்றவற்றில் இருந்து விடுவிக்கிறது என்கிறார் சுலமித் பையர்ஸ்டோன்.

செவ்விய

ஆனால் செவ்விய நிலைக் காதல் என்பது சமமற்ற தன்மையை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே ஏற்படுத்துவதாக சைமன் டிபொவாயர் போன்ற பெண்ணியவாதிகள் கருதினர். கர்லோ சுமார்ட் என்பவரும், தந்தை வழிச் சமுதாயத்தின் அடக்குமுறைக்குச் செவ்விய காதல் வழி வகுக்கிறது என்கிறார்.

இருப்பினும், செவ்விய காதல் என்பது பெண்கள் உரிமை பெறுவதற்கான வழிவகைகளுள் ஒன்று என்பது தற்போதைய பெண்ணியவாதிகளின் கருத்தாகின்றது.

இவ்வகையில் செவ்விய காதல் என்பது உரிமையின் வாசல் எனப் பெண்ணியவாதிகள் கருதுவதை ஏற்கமுடிகின்றது.

‘‘காதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே குழந்தைகளைப் பெறுதல், வீடு, தோட்டங்களைப் பேணுதல் என்பதை மட்டும் கருதியது அன்று. அது உயிரியல் தேவைகளை மட்டும் நிறைவேற்றுவது அன்று. அது மனிதர்க்கான எதிர்காலத்தை வடிவமைப்பது. மனிதரின் மூளையாற்றலை வெளிப்படுத்துவது. அது பெண்கள் தங்களைத் தாங்களே உணர்ந்து கொள்வதற்கான ஒரு தேடலும் ஆகும்’’ என்று செவ்விய நிலைக் காதலைப் பெண்களுக்கான சுயதேடலாகக் காண்கிறார் பெட்டி பிரைடன்.

இக்கருத்துகளை அடியொற்றிக் குறுந்தொகையில் பெண்பாற்புலவர்களின் பாடல்களை நோக்கும்போது, உரிமை பெறும் இன்பத்தையும் காணமுடிகிறது. உரிமை மறுக்கப்படும் துன்பத்தையும் காணமுடிகிறது.

தலைவனும் தலைவியும் காதலித்து மணம் புரிந்து வாழ்கின்றபோது பல உரிமைகளைத் தலைவிக்குத் தலைவன் நல்கி வாழும் வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கையாகின்றது. ஆனால் இவ் வெற்றிகரமான வாழ்க்கை மிகக் குறைந்த நிலைப்பாடு உடையனவாகவே குறுந்தொகைச் சூழலில் உள்ளன.

தேடிக்கண்டுபிடிக்க வேண்டிய நிலையில் அவை உள்ளன.

தலைவன் தலைவியை விட்டுப் பிரிகிறான். நீண்ட நாட்கள் ஆகியும் அவன் வந்து சேரவில்லை. தோழி தலைவனின் வாரா இயல்பை எண்ணிக் கவலை கொள்கிறாள். அந்நேரத்தில் தலைவி

‘‘தலைவர் தனக்குத் தந்தையும் தாயும் போன்ற இயல்பினை உடையவன். அவன் நிச்சயம் நம்மை நாடி வருவார்” என்று கூறித் தோழியைத் தேற்றுகிறாள்.

தன்னுடைய தந்தை, தாய் ஆகியோரை ஒரு நாள் பொழுதில் மறந்துவிட்டுத் தலைவனுடன் இல்லறத்தைத் தொடங்குகிறாள் தலைவி.

தந்தை, தாய் ஆகியோர் இருந்தால் எவ்வாறு தலைவியை வருத்தப்படாமல் காப்பார்களோ அதுபோல இனித் தலைவன் தலைவியைத் தாங்கவேண்டும். தந்தையையும், தாயையும் தன் அன்பால், தன் அரவணைப்பால் சமப்படுத்த வேண்டும். இதனைச் செய்யும் தலைவன் வெற்றி பெறுகிறான். தலைவி மகிழ்ச்சியடைகிறாள்.

அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் ஒன்றில் தலைவி தலைவனுடன் இணைந்து இருக்கும் இரவுப் பொழுது கழிய மெல்ல வைகறை வந்து விடுகிறது. அவ்வைகறை வாள் போல் தோன்றி இருவரையும் பிரித்தது என்று தலைவி எண்ணுகிறாள். என்பது இருவரின் இணைவைப் பிரிக்கும் வைகறையாகின்றது. இரவு முழுவதும் தலைவனும் தலைவியும் மகிழ்ந்து இருந்தனர் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

**‘‘குக்கூ என்றது கோழி.**
**அதன் எதிர்**
**துட்கென்றது என் தூஉ நெஞ்சம்**
**தோள் தோய் காதலர் பிரிக்கும்**
**வாள் போல் வைகறை வந்**
**தன்றால் எனவே”**

இப்பாடலில் தோள் தோய் காதலர் என்பது தலைவன் தலைவியின் நெருக்கத்தைக் காட்டும் பகுதியாகும். வாள்

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் ஓரிரு பாடல்கள் மட்டுமே தலைவனுடன் தலைவி கொண்ட இன்பத்தின் சான்றினைக் காட்டும் பாடல்களாக விளங்குகின்றன. மற்றவை வருத்தமிகுதியைக் காட்டும் பாடல்களாகவே உள்ளன.

வரப்பெற்றோம்

# நல்லையா சந்திரசேகரனின் சாயப்பட்ட விரல்கள்




பல சிறப்பான படைப்பாளிகளை ஈழத்து இலக்கியத் துறைக்கு பரிசாக்கிய மாத்தளை மண்ணிலிருந்து இளம் கவிஞர் நல்லையா சந்திரசேகரன் சாயப்பட்ட விரல்கள் கவிதை நூலைத் தந்துள்ளார்.

மலையகத்திலிருந்து கவிதை நூல்கள் வெளிவருவது அருகிக் கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் இந்த நூலை சிறப்பாக தந்திருக்கும் நூலாசிரியரை முதலில் பாராட்ட வேண்டும்.

புரவலர் புத்தகப் பூங்காவின் வெளியீடாக அண்மையில் வெளிவந்த இந்த கவிதை நூல் நீண்ட நாட்களுக்குப் பின் மாத்தளையில் இருந்து வெளிவரும் படைப்பாக காண முடிகிறது.

நல்லையா சந்திரசேகரன் கவிதை, சிறுகதை, கட்டுரை, பாடல், ஹைக்கூ என பல்துறைகளிலும் கால் பதித்து தம்மை வளர்த்துக் கொண்டு வருபவர்.

தனது பாடசாலை காலத்திலேயே மலையருவி எனும் கையெழுத்து சஞ்சிகையை வெளியிட்டு பாராட்டுகளைப் பெற்றவர்.

பல தேசிய பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளமையைக் குறிப்பிட முடியும்.

மலையக மூத்த படைப்பாளிகளுக்கு சமர்ப்பணம் என இந்த காயப்பட்ட விரல்களை அவர் வழங்கியுள்ளார்.

மாத்தளை மாவட்டம் கலை, இலக்கியத் துறைகளில் சிறந்து விளங்கும் மாவட்டமாகும்.

அங்கிருந்துதான் மாத்தளை கார்த்திகேசு, மாத்தளை சோமு, மாத்தளை அருணேசர், மாத்தளை வடிவேலன், மலரன்பன், ஏ. பி. வி. கோமஸ் போன்ற இலக்கிய முன்னோடிகள் செயற்பட்டுள்ளனர்.

இந்த வகையில் பல முன்னோடிகளின் உயரிய இலக்கிய படைப்புகளால் தனித்துவம் பெறுகிறது மாத்தளை மண்.

மலையகத்தினதும் மலையக மக்களின் வாழ்க்கைச் சூழலையும் களமாகக் கொண்டு அநேக கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் 'அடிபட்டுப் போகும் அவலங்கள்' என்ற அவரது கவிதையின் ஒரு பகுதி

**எம் அடிமனத்து**
**அதிர்வுகள் உதிர்க்கும்**
**உணர்வுகள்**
**ஒவ்வொன்றும்**
**ஆயிரம் ஆயிரம்**
**கதை பேசும்**
**கொதித்தெழும் பெருமூச்சு**
**சூரியனையும் சுட்டெரிக்கும் என்று**
**அவரது திறமையை**
**புலப்படுத்துகிறது.**
**சிறந்த மொழிநடை,**

வாசிக்கத் தூண்டும் கவி நடை கவிதை நூலுக்கு மெருகூட்டுகிறது.

சாயப்பட்ட விரல்களை தந்த நல்லையா சந்திரசேகரன் மேலும் பல படைப்புகளை இலக்கிய உலகத்துக்கு வழங்க வேண்டும்.

அவரது பணி மென்மேலும் சிறக்க தினகரன் கலைக் கதம்பம் வாழ்த்துகிறது.

லோரி செல்வா ...

## கலைக் கதம்பம்

சைத்திரியன்

# "இரவில் உறங்கும் முன் ஒரு மணி நேரம் நூல்கள் படிப்பேன்"

## தமிழக எழுத்தாளர் நாகா



